பக்கங்கள்:இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 24 வெள்ளிக்கிழமை (08.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 043

# 12,000 புலிச் சந்தேக நபர்களின் எதிர்காலம்: எதிர்க்கட்சிகள் இடையே பொது இணக்கம்

## தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 8

**அரச படைகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் பன்னிரண்டாயிரம் புலிச் சந்தேக நபர்களான தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் எதிர்காலம் குறித்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் இடையே பொது இணக்கப்பாடு ஒன்று உள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான அநுர குமார திஸ்ஸநாயக்கா நேற்றுப் பகிரங்கமாக அறிவித்தார்.**

இந்தத் தமிழ் இளைஞர், யுவதிகளுள் குற்றமிழைத்தவர்கள் இருப்பின் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும், குற்றமிழைக்காதவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, அவர்களை விடுவிப்பது தொடர்பிலும் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் எதிர்க்கட்சிகளிடையே இணக்கம் காணப்பட்டுள்ளது என்றார் அவர்.

கொழும்பு சிலோன் கொன்டினென்டல் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற - எதிர்க்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டை விநியோகம் இன்று முதல் 18ஆம் திகதி வரை

கொழும்பு, ஜன.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் இன்றுமுதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விநியோகப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டை விநியோகிப்பதற்கான விசேட தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாகத் தபால் மா

(20ஆம் பக்கம் பார்க்க)

## மகஸின் கைதிகள் குறித்து சட்ட மா அதிபருக்குத் தகவல்

### சிறை ஆணையர் அனுப்பினார்

கொழும்பு, ஜன.8

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகள் தொடர்பில் உடனடிக் கவனம் செலுத்துமாறு சிறைச்சாலைகள் தலைமையகம், சட்ட மா அதிபர் திணைக்களத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதமிருப்போரின் கோவைகளை ஆராய்ந்து விரைவில் நடவடிக்கை எடுக்கவெனக் கைதிகளின் பெயர் விவரங்களைச் சட்டமா அதிபர் திணைக்களத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நியூ மகஸின் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் திருமலை, மட்டு., அ'புர சிறைகளுக்கும் பரவியது

### உடல் நிலை பாதிக்கப்பட்ட மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 8

கொழும்பு மகஸின் சிறைச்சலையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை ஆகிய சிறைச்சாலைகளில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய அல்லது தங்களைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியே அவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் கடந்த 5ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் தற்போது திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அநுராதபுரம் சிறைச்சாலைகளுக்கும் பரவியது.

கொழும்பு, மகஸின் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நான்காவது நாளாகவும், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் படுகொலையைக் காட்டும் 'சனல் - 4' ஒளிநாடா உண்மையானது என்கிறார் ஐ.நா. அதிகாரி அல்ஸ்றொன்



நியூயோர்க், ஜன.8

இலங்கையில் - வன்னியில் - கடந்த வருடம் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் கண்கள் கட்டப்பட்டு நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் தமிழர்களை இலங்கைப் படையினர் - சிப்பாய்கள் - சுட்டுக்கொல்வதான வெளியான 'வீடியோ' படம் அநேகமாக உண்மையானது, நம்பகரமானது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சட்ட விரோத படுகொலைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்றொன்.

ஐ.நா.வளாகத்தில் நேற்றுக் காலை அவர் நடத்திய விசேட பத்திரிகை

(20ஆம் பக்கம் பார்க்க)

### ஐரோப்பிய ஒன்றியத்தைத் தொடர்ந்து

## தேர்தல் கண்காணிப்பாளர்களை ஐ.நாவும் அனுப்பமாட்டாதாம்

கொழும்பு, ஜன. 8

இலங்கைக்குத் தனது தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்ப முடியாதுள்ளது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபை, போதிய கால அவகாசமின்மையே இதற்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர் கைதுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

### ஜே.வி.பி. சார்பு மாணவர் அமைப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜன.08

பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி சார்புடைய அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர் சங்கம் நேற்றுக் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியது .

கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெருமளவு மாணவர்கள் ஊர்வலமாக அலரி மாளிகையை நோக்கிச் செல்ல முயன்றவேளை ஏர்னெஸ்ட் டி சில்வா வீதியில் தடைகளை ஏற்படுத்திய பொலிஸார்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பத்து அடிப்படை அம்சங்கள் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார் பொன்சேகா



கொழும்பு, ஜன. 08

தேசிய பாதுகாப்பைப் பேணுதல், விலைவாசியைக் குறைத்தல் மற்றும் ஊழல், மோசடிகளை ஒழித்துக் கட்டுதல் உள்ளிட்ட 10 அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபனம் 'பொது வேலைத்திட்டம்' என்ற பெயரில் நேற்றுக் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு சிலோன் கொண்டினென்டல் ஹோட்டலில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஜெனரல் சரத் பொன்சேகா அவரது இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க, ஐ.தே.கட்சி எம்.பியான ரவி கருணாநாயக்க, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜன நாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது. தேசிய கீதத்தைத் தொடர்ந்து வேட்பாளர் சரத் பொன்சேகா தேர்தல் விஞ்ஞாபன பிரதிகளை அவரது கைகளால் சமயத் தலைவர்களுக்கு வழங்கினார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் தந்தை வேலுப்பிள்ளை புதன்கிழமை இரவு காலமானார்

யாழ்ப்பாணம்,ஜன.8

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தந்தையார் திருவேங்கடம் வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் இரவு காலமானார். அவருக்கு வயது 85.

பனாகொடை இராணுவ முகாமில் படையினரின் பாதுகாப்பில் பிரபாகரனின் பெற்றோர் தங்கவைக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

வேலுப்பிள்ளை வயது மூப்பின் காரண

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 2ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 | | 01 |
| ★ | | ★ |
| 01 | | 01 |
| ★ | | ★ |
| 1926 | | 2008 |



(93505)

### திருமதி தங்கம்மா தாதபிள்ளை

திதி: அபரபக்க நவமி

இடுப்பு வலி பொறுத்து பத்துத் திங்கள் தன்னகத்தே எம்மை சுமந்து பெற்றவளே- அம்மா அடுப்பு, நெருப்பு, இன்ப துன்பம் சகித்து எம்மை வளர்த்தவளே- அம்மாஆடி அடங்கும் வாழ்வின் ஆழ நீளம்சொன்ன தொப்புள் கொடியில் தொடங்கிய உறவுக்குரியவளே- அம்மா மீளும் உன் நினைவுகள் காலமெல்லாம் வாழும் அம்மா.

67/1, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P: 0776848343

என்றும் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புச் சகோதரர்
**அமரர் சின்னத்துரை பாலசுப்ரமணியம் (J.P)**
(மல்ரி ஒயில் உரிமையாளர், ஓய்வு பெற்ற சிறாப்பர்)

உள்ளத்தில் உறைந்துவிட்ட உத்தமரே
கள்ளம் இல்லாக் கனிவானவரே
அன்புடன் எம்மை எல்லாம் ஆதரித்தீர்
பண்புகள் கூறி மக்களை பாரினில் உயர வைத்தீர்
இடையிலே எம்மைவிட்டு எங்குதான் சென்றீரோ.

(93544)

பிரிவால் துயருறும்:
சி. பாலச்சந்திரன் குடும்பத்தினர் (செல்வம்), சி.பரராஜசேகரம் குடும்பத்தினர் (கனடா), சி. சண்முகலிங்கம் குடும்பத்தினர் (சிறி, கனடா)
இணுவில் மேற்கு, இணுவில்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சோதிவேல்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரைசோதிவேல் 05.01.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- புஷ்பமணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான முத்தையா- தவமணி தம்பதியினரின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், மனோகரனின் (ராஜன்- லண்டன்) பாசமிகு தந்தையும், சோதிநாயகி, சகுந்தலா, கேதீஸ்வரநாதன், உதயகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகசோதி, சாந்தகுலசிங்கம், சந்தானலட்சுமி, ஜெயலா (லண்டன்), திருமலர் தேவி (சிங்கப்பூர்), இரத்தினம் (கனடா), தனலட்சுமி (வவுனியா), காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சிவசோதி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் உரும்பிராயிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(93527)

தற்காலிக முகவரி: ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
நிரந்தர முகவரி: 6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. தொ.பே: 021-4590206

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா குமாரசாமி



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா குமாரசாமி நேற்று (07.01.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவண முத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும் பத்மபாதன் ( ஜேர்மனி), பத்மநாதன் ( சுவிஸ்), பரமானந்தன் (கிராம அலுவலர் J/315 சந்திரபுரம்), பத்மினி (ஆசிரியை யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்), பத்மரூபன் (லண்டன்), பவானி ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமதி (ஜேர்மனி), தீபா (சுவிஸ்), சந்திரவதி, வசீகரன்( பிரதேச சபை, கொடிகாமம்), மைதிலி (லண்டன்), கிருபானந்தன் ( தபாலகம்-கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மோகனன், நிதர்ஷனன், தரணிகா ( ஜேர்மனி), பவித்திரன், பரணிகா (சுவிஸ்), கஸ்தூரி, செந்தூரி, அனித்தா, அபிநதா, பவீஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் தனபாலசிங்கத்தின் அன்புச் சகோதரனும், தவயோகநாயகி, அன்னம்மா, வல்லிபுரம், கனகம்மா, முத்தம்மா, செல்லம்மா ( ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பத்மகிரி'
வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு. (93553)

தகவல்:
குடும்பத்தினர்.

## யோகா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.08

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள யோகப்பயிற்சி நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யோகி ராஜனின் யோகா பற்றிய கருத்தரங்கு நடைபெறும். (ஓ)

## திருவாசக முற்றோதல்.

சங்கானை, ஜன. 08

சங்கானை இலுப்பைத்தாழ் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி தேவஸ்தானத்தில் திருவாசக திருமுற்றோதல் விழா நாளை (சனிக்கிழமை) காலை 8மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ஓ-29)

## மணமகள் தேவை

பிரான்ஸில் குடியுரிமையுடன் தொழில் புரிகின்ற Non R.C கிறிஸ்தவ மதம் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37வயதுடைய தமது மகனுக்குப் பெற்றோர் படித்த நற்குணமுள்ள கிறிஸ்தவ மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்பு: 222 5298 யாழ்ப்பாணம்.

## உடன் வேலையாள் தேவை

பில் கிளாக்கும், சிற்றூழியரும் தேவை. நேரில் வரவும்.

வெங்கடேஸ்வரா,
125 A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(சி/563969)

## வீடு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை.

தொடர்பு - 077 8445065, 0789133431.

## கருங்கல்லுச் சல்லி விற்பனைக்கு

5 நூல் கருங்கல்லுச் சல்லி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-
நிலோ தொலைத்தொடர்பு நிலையம். 0213212899

## உடனடி வேலை வாய்ப்பு

Net cafe தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு கணணி அறிவுள்ள பெண்பிள்ளையொன்று உடனடியாகத் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:
**வேணுகா கொமினிகேசன்,**
964, கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 222 2845, 222 5076.
(சி/563978)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த (04.01.2010) திங்கட்கிழமை காலமான தென்மராட்சி கல்வி வலய தொழில் நுட்ப உத்தியோகத்தர்



**வேலாயுதர் பாராளன்**

அவர்களின் மறைவு கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு பற்றுவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம், கைதடி.
(93545)

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் திரு.க.சுபாகரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**காட்டுத்தம்பி கனகரத்தினம்**

அவர்கள் 05.01.2010 அன்று சிவபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது [illegible]வால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக் [illegible]ழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊழியர் நலன்புரி சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.
உதவி அரசாங்க அதிபரும்,
உத்தியோகத்தர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCIES FOR TEACHERS

Applications are invited from suitable applicants for the following:

1. Chemistry
2. Accounts ( English Medium A/L)
3. Maths ( English Medium A/L)
4. English
5. Logic

The last date for receiving applications is 11 th January 2010. Sports & IT skills will be an advantage. Apply with full bio-data and Photocopies of certificate - Degree/ Diploma.

The applications will be short listed and called for interview.

(C/563974) **The Principal.**

## இரவு சொகுசு வான் சேவை





10.01.2010 ஞாயிறு ஆரம்பம்

அந்தந்த இடங்களில் ஏற்றப்படும்
முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, காரைநகர் பயணிகளுக்கு......

யோகாஸ் கொமினிக்கேசன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
0213215270.

யாழ் பயணிகளுக்கு.........

பதிவு அலுவலகம்
ஞானம்ஸ் புடைவையகம்,
18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0212225679

(சி/563968)

## 31 ஆம் நாள் நினைவில்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 22 | | 09 |
| ★ | | ★ |
| 10 | | 12 |
| ★ | | ★ |
| 1943 | | 2009 |



### அமரர் சின்னத்துரை பற்றிக் அரசநாதன்

(சங்குவேலி வடக்கு,மானிப்பாய்)

அன்னாரின் இறப்புச் செய்தி கேட்டு நேரில் சமுகம் தந்து துக்கம் பகிர்ந்துகொண்ட அன்பு உறவுகளுக்கும், சுன்னாகம் இலங்கை வங்கி ஊழியர்களுக்கும், விவசாயத்திணைக்கள ஊழியர்களுக்கும், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி நல்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை இடம்பெறும் 31 ஆம் நாள் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (93555)

தகவல்:
குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவு கூர்வு



### C.F. சின்னையா

(முன்னாள் இலங்கைத் தூதுவர்,வோஸோ, போலந்து, உதவி அரச அதிபர் தம்பலகாமம்).

கொழும்பு வளாகத்தில் நண்பனாய், உதவி அரச அதிபராய், ஓவசியஸ் சேவிஸ் நிர்வாகியாய், தாய்க்கு நல்ல மகனாய், சகோதரர்களுக்கு இனிய உறவாய் தரணியில் வாழ்ந்த உத்தமரே.

முதலாம் ஆண்டு நன்றித் திருப்பலியில்
நினைவு கூரும் நாம்

எஸ்.பரமேஸ்வரன் (முகாமையாளர், மக்கள் வங்கி, மன்னார்), கு.திலகரெத்தினம் (முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர், திருமலை), இ.சிவராசா (முன்னாள் கணக்காளர், புனர்வாழ்வு அமைச்சு, கொழும்பு, கனடா), பொ.ஸ்ரீஸ்கந்தராசா (பிரதி அதிபர், யாழ் இந்துக்கல்லூரி).

(93554) தொ.பே: 0775051759

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கூட்டமைப்பின் தீர்மானத்தினால் கிடைத்துவரும் சாதகங்கள் இவை

கொழும்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் செய்தியாளர் சந்திப்பை நடத்திய சமயம், அங்கு கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தர் 'யார் சுட்டாலும் பலகாரம் எமக்குக் கிடைத்தால் சரி' என்று குறிப்பிட்டிருந்தார். யார் குத்தினாலும் அரிசியானால் சரி என்ற மாதிரி, இப்போது விடயங்கள் - இவ்வளவு விரைவாக - நடந்தேறுவது மிகவும் வியப்புக்குரியதுதான்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்ததோ, இல்லையோ மறுபுறத்தில் விடயங்கள் மளமளவென்று நடந்தேறுகின்றன. கூட்டமைப்பினர் அரசுப் பக்கம் சாய்ந்திருந்தாலும் கூட இவ்வளவு விடயங்களை - இவ்வளவு விரைவாக - தமது மக்களுக்கு ஒப்பேற்றிக் கொடுத்திருக்க முடியுமா என்பது பெரும் சந்தேகத்துக்குரியதே.

✱ வடக்கிற்கான பிரதான பாதை மார்க்கமான 'ஏ 9'(கண்டி) வீதி 24 மணி நேரமும் திறந்துவிடப்படுகின்றது. அதுவும் உடனடியாகவே நடைமுறைக்கு வரத்தக்கதாக அந்த மாற்றம். அதுமட்டுமல்ல, சோதனைகள், கெடுபிடிகளின்றி மக்கள் அந்தப் பயணத்தை மேற்கொள்ளலாம் என்ற உறுதி அறிவிப்பு வேறு.

✱ அடுத்து - யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமிப்புக்குள் சிக்கியிருக்கும் பிரதேசங்களில் எழுபத்தியைந்து வீதமானவற்றில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்படுவர் என்ற அறிவிப்பு. இது பற்றிய உத்தியோகபூர்வ பிரகடனத்தை நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு வைத்து விடுப்பார் என்றும் கூறப்படுகின்றது.

✱ மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களில் ஆயிரம் பேர் உடனடியாக - நாளையே - விடுவிக்கப்படுவர்.

- இப்படி அதிரடி அறிவிப்புகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரணிப் பக்கம் சாய்ந்தமையை அடுத்து - அரசுத் தரப்பிலிருந்து அடுக்கடுக்காக வந்தவண்ணம் இருப்பது அதன் பின்னணியைப் புரிந்தால் ஆச்சரியத்துக்குரியதல்ல.

இத்தகைய சகாயங்கள் - சலுகைகள் - பற்றிய தொடர் அறிவிப்புகள் எதிர்வரும் 26 ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு வரை தொடரும் என எதிர்பார்க்கலாம்.

இந்த எல்லாவற்றுக்கும் - இப்படிப் பல தீராத பிணிகளுக்கு உரிய பரிகாரம் விரைந்து கிட்டியமைக்கு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு துணிச்சலுடன் மேற்கொண்ட அதிர்ச்சி வைத்தியம்தான் காரணம் - பின்னணி - என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

இருபது வருடங்களாக ஏதிலிகளாக நலன்புரி மையங்களிலும், அகதி முகாம்களிலும் அவலப்படும் வலிகாமம் வடக்கு மக்களின் பிரச்சினையை - உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்பால் எழுந்த அவலத்தை - உயர் நீதிமன்றத்துக்குப் போயும், அதன் பின்னர் பல தடவைகள் அரசுத் தலைமையுடன் பல மட்டங்களில் பேசியும் கூடத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான சூழ் நிலையை ஏற்படுத்த முடியவில்லை என்பது துலாம் பரமானது.

அண்மையில் இந்த உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் நேரில் பேசியபோது தாம் கிளப்பினார் எனவும், ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அதுபற்றிப் பார்க்கலாம் என்ற சாரப்பட ஜனாதிபதி தமக்கு விட்டேத்தியாகப் பதில் தந்தார் எனவும் இரா. சம்பந்தன் எம்.பி. நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட் டார்.

ஆனால், தேர்தலுக்குப் பிறகு பார்க்கலாம் என்று சாவகாசமாகக் கூறப்பட்ட விடயத்தை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக - ஆட்சி மாற்றத்துக்காக - வாக்களிக்கும்படி பகிரங்கமாகக் கோரியதும் - மூன்று நாள்களுக்குள் தீர்த்து வைப்பது பற்றிய அறிவிப்பு வந்திருப்பது அதிசயப்பட வேண்டிய அம்சம் அல்ல.

எந்தப் பக்கம் நாமிருந்தாலும் பலகாரம் பரிமாறப்பட்டால் சரி என்ற சாரப்படக் கூறப்பட்டிருக்கும் விடயத்தின் ஆழமான அர்த்தம் இதுதான்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தன்பக்கம் வளைத்துப்போட பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்ட ஆளும் தரப்பு, அதில் தான் தோற்றுப்போன நிலையில், இப்போது நேரடியாகத் தமிழ்மக்களை இந்தத் தேர்தலில் தனக்குச் சார்பாக வளைத்துப் போடும் எத்தனமாக இத்தகைய அதிரடி அறிவிப்புகளை விடுக்கின்றது என்பதை, அரசியலில் அரிச்சுவடிப் பாடம் படியாதவனும் இலகுவாக உய்த்துணர்ந்து விட முடியும்.

தேர்தல் கால சகாயங்களாக சிலவற்றை அறிவித்து அதி லிருந்து அரசியல் லாபம் - வாக்குவேட்டை - ஈட்ட முயற்சிப்பது வெறும் அபத்தமானது.

இவ்வளவு காலமும் செய்யக்கூடியதான - தமிழ் மக்களுக்குச் செய்திருக்கவேண்டியதான - விடயங்களைச் செய்யாமல் தமிழர்களை வதைப்பதில் இன்பம் கண்டபடி இருந்துவிட்டு, இப்போது வாக்கு வேட்டைக்காக இந்தத் 'திருகுதாள அறிவிப்புகளை' வெளியிடுகின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்குத் தமிழ்மக்கள் வெறும் முட்டாள்கள் அல்லர்.

என்றாலும், தமிழர்களைப் பொறுத்தவரை இவ் விடயத்தில் யார் சுட்டாலும் பலகாரம் கிடைத்தால் சரிதான்!

# சமாதான சூழலில் நாமும் உறவுகளுடன் இணைந்து வாழ

# எமது விடுதலை விடயத்தில் நேரடியாகத் தலையிடுங்கள்

## ஜனாதிபதிக்கு யாழ்.சிறைச்சாலை அரசியல் கைதிகள் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன.8

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் நாமும் எம் உறவுகளுடன் இணைந்து இயல்பு வாழ்வில் ஈடுபடுவதற்கு ஏதுவாக ஜனாதிபதியாகிய தாங்கள் எமது விடுதலை விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் 24 அரசியல் கைதிகள் கையொப்பமிட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

நேற்று நான்காவது நாளாகச் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் இந்தக் கைதிகள் சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எமது உறவுகளை நீண்டகாலமாகப் பிரிந்தும், இழந்தும், அவர்களின் தொடர்புகள் எவையுமற்ற நிலையிலும் தொடர்துன்பத்துடனும், தீராத சோகத்துடனும், எமது எதிர்காலம் தொடர்பில் எவ்வித நம்பிக்கைகள் அற்றநிலையிலும் விரக்தியுடன் சிறைகளில் வாடுகின்றோம்.

நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக சந்தேகத்தினை அடிப்படையாகக் கொண்டு கைது செய்யப்பட்ட நாம் வழக்கு விசாரணைகள் எவையுமின்றி நீண்டகாலமாகத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளோம்.

கடந்த காலங்களில் எமது விடுதலை தொடர்பில் பல போரட்டங்களை அமைதியான முறைகளில் முன்னெடுத்திருந்த போதிலும் அப் போராட்டங்கள் அரசியல் கலப்பற்ற மனிதாபிமானத்துடன் அணுகப்படவில்லை.

எனவே இவ்விடயம் தொடர்பாகத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து பொதுமன்னிப்பின் அடிப்படையில் எம் அனைவரின் விடுதலையினைப் பெற்றுக் கொள்வதற்காக அகிம்சை வழியில் எமது உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் நாமும் எம் உறவுகளுடன் இணைந்து இயல்பு வாழ்வில் ஈடுபடுவதற்கு ஏதுவாகத் தாங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு எம் எல்லோருக்கும் நம்பிக்கை அளிக்கும் விதத்தில் எமது எதிர்காலத்தினை உறுதிப்படுத்தித் தருமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (50-224)

# யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்த 3 அரசியல் கைதிகள் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்.சிறைச்சாலையில் கடந்த நான்கு நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளும் 24 தமிழ் அரசியல் கைதிகளில் மூவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டதையடுத்து அவர்கள் மூவரும் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ம.ஜீவகுமார், எஸ்.சிவகுமார், கே.ஞானரூபன் ஆகிய மூன்று கைதிகளுமே உடல்நிலை பாதிக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் யாழ்.பேதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் 24 தமிழ் அரசியல் கைதிகளுடன் இரு பெண் கைதிகளும் இணைந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களை விடுவிக்குமாறு கோரி நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகவே தாமும் போராட்டத்தில் குதித்துள்ளதாக யாழ்.சிறைச்சாலையிலுள்ள கைதிகள் தெரிவித்தனர். (50-16-78-224)

# யாழ்.நகரில் சுகாதாரமற்ற முறையில் விற்பனை செய்யப்படும் சோளன் பொத்திகள்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்.நகரின் வீதியோரங்களில் வைத்துச் சுகாதாரமற்ற முறையில் சோளன் பொத்திகள் விற்பனை



செய்யப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சிறுவர்கள் பலர் 'அவ்வாறு விற்பனை செய்யப்படும் சோளன் பொத்திகளை வாங்கி உண்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக நகரில் ஆரியகுளம் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி ஆகிய இடங்களில இந்தச் சோளன் பொத்திகள் சுடுநீரில் அவித்து விற்பனை செய்யப்பட்டு வருகின் றன. தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவோரும் இந்தச் சோளன் பொத்திகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

தற்போது குடாநாட்டில் டெங்கு மற்றும் தொற்று நோய்கள் மிக வேகமாகப் பரவி வருகின்றன.

இந்த நோய்களைக் கட்டுப்படுத்து வதற்குச் சுகாதாரப் பகுதியினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்கள் தொடர்பாகவும் சுகாதாரப் பகுதியினர் கவனம் செலுத்தி அவை உரிய சுகாதார முறைப்படி விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்த வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

# நலன்புரி முகாம்களுக்கு டிசெம்பருக்குப் பின் வைத்தியர்கள் செல்லாமையால் மக்கள் சிரமம்

## தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜன.8

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களுக்குக் கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் மருத்துவர்கள் வருகை தராததால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நலன்புரி நிலையங்களில் தற்போது காய்ச்சல் மற்றும் சிரங்கு போன்ற நோய்கள் பரவி வருவதால் அங்குள்ள மக்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறுவதற்கு சிரமங்களின் மத்தியில் செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே நலன்புரி நிலையங்களில் வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட நடமாடும் மருத்துவ வேலையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு நலன்புரி நிலைய மக்கள் கோரியுள்ளனர். (50-207)

# தெல்லிப்பழை, உடுவில் பகுதிகளில் டெங்கு நோயால் 3 சிறுவர்கள் உயிரிழப்பு

வலி.வடக்கு, ஜன.8

தெல்லிப்பழை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்குநோய்த் தாக்கத்திற்கு இலக்காகி மூன்று சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டு பெண் குழந்தைகளும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு சிறுவனுமாக மூவர் உயிரிழந்துள்ளனர். இந்த மூவரும் 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் உயிரிழந்த இரு சிறுவர்களும் திருநெல்வேலி, கல்வியங்காட்டுப் பகுதிகளில் உறவினர்களுடன் இருந்த போது நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை 11 பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்கான தாகவும் இவர்களில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 180 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு இலக்காகியுள்ள தாகவும் இவர்களில் இருவர் உயிரிழந் துள்ளதாகவும் கூறப்பட்டது. (50-86)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 25 | 09.01.2010 |
| | சனிக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.ப 08.43 வரை |
| நட்சத்திரம்: | சுவாதி |
| | மு.இ 09.56 வரை |
| சுபநேரம்: | 03.32-05.02 வரை |
| ராகுகாலம்: | 09.32-11.02 வரை |

# விரைவில் மின்சாரம்

யாழப்பாணம், ஜன.8

தென்மராட்சியில் கச்சாய், வெள்ளாம் போக்கட்டி ஆகிய கிராமங்கள் விரைவில் மின்வெளிச்சம் பெறவுள்ளன.

இந்த கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவ்தற்கான அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு மின் மாற்றிகளும் பொருத்தப்பட்டுள்ளன.(ஒ-207)

# மண்டைதீவுப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பம்

மண்டைதீவுப் பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப் புச்சபை இந்தக் குடிதண்ணீர் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகம் பவுசர்கள் மூலம் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடிதண்ணீர் விநியோகத்திற்காக ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய ஆறு நீர்த்தாங்கிகளும் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

பவுசர்கள் மூலம் இந்த நீர்த் தாங்கிகளில் குடிதண்ணீர் நிரப் பப்படுவதாகவும் அவற்றிலிருந்து பிரதேச மக்கள் தமக்குத் தேவை யான குடிதண்ணீரைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-224)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

- Diploma in Microsoft Office 2007
- Diploma in PC Application
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Diploma in Computerized Accounting
- Adv. Dip. in Hardware & Networking

அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.



புதிய பிரிவுகள்
11/1/2010, 18/1/2010
Time 10 a.m

முதல் முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு மறைமுகக்கட்டணம்; நிபந்தனைகள் எதுவுமின்றி Internet & E-mail or Hardware Technology Course முற்றிலும் இலவசம்!

Internet E-mail
Hardware Technology

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

**DMI COMPUTER EDUCATION**

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403


## விழிநீர் சொரியும் 31ம் நாள் நினைவுகள்



அமரர்

### செல்லையா மகேந்திரன்

மண்ணில் 27.09.1944

விண்ணில் 09.12.2009

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும். (யோவான் 12:24)

வாழ்வின் ஊற்றே இறைவா! உம் திருவுளப்படி இவ்வுலகில் வாழ்ந்து, உமதண்டை வந்திருக்கும் எம் தந்தையின் ஆன்மாவிற்கு நித்திய சம்பாவனையை அளித்தருள உம்மை இறைஞ்சுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் இன்று காலை 6.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப் படும் திருப்பலியில் பங்கெடுத்து செபிக்க அழைக்கின்றோம். திருப்பலி முடிவில் வீட்டுக்கு வருமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கண்ணீர் விழிகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை,
மற்றும் உறவுகள்.

46/2, மார்டீன் வீதி,
யாழ்ப்பாணம். (93546)

மானிப்பாய் வங்கியில் மாணவர் கௌரவிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய தேசிய சேமிப்புவங்கிமானிப்பாய் கிளையில் கணக்கை பேணும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வங்கி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் எஸ். கந்தசாமி, சங்கானை கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் ரி.எங்கரசு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந் நிகழ்வில் சித்தி எய்திய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.


என்னிடம் "அளவையியலும் விஞ்ஞான முறையும்" என்ற பாடத்தைக் கற்று அப்பாடத்துறையில் "A" "B" பெறு பேற்றைப் பெற்ற என்னுடைய மாணவச் செல்வங்களைக் கல்வியில் மென்மேலும் முன்னேற்றம் அடைய வாழ்த்துகின்றேன்.

### ★ N.C.A கல்வி நிலையம் முதலாம் கட்டை - பருத்தித்துறை

| | |
|---|---|
| 1. சி.மதுரா A (3A) | 1. அ.நிலோஜினி B |
| 2. இ.பிரசாந்தினி A (3A) | 2. ஆர். சிந்து B |
| 3. த.துஷ்யானந்தன் A (2AB). | 3. அ.துளசிமாறன் B |
| 4. கி.ஜெனாந்தன் A (2AB) | 4. பே.நிகேதினி B |
| 5. ஜீ.நித்தியா A (2AB) | 5. சி.கிருஷ்ணகுமாரி B |
| 6. இ.தர்மலா A (2AB)) | 6. செ.அனுஷா B |
| 7. ப.மிதிலா A | 7. இ.ராஜா B |
| 8. க.மயூரன் A | 8. திவ்வியாயினி B |
| 9. பே.நிதர்சினி A | 9. க.கபோதரன் B |
| 10. சி.கபிலன் A | 10. ப.சுலக்ஷ்சனா B |
| 11. எஸ்.றெஜி நிறோஜன் A | 11. தமிழ்ப்பிரியா B |
| 12. த.அனுஷா A | 12. கு.சியாமினி B |
| 13. எஸ்.நிஷாந்தன் A | 13. எம்.சுபேகா B |
| 14. ஆர்.பிரதீஸ் A | |
| 15. த.சிவகரன் A | |

100% சித்தி

### ★ சதாபொன்ஸ் அல்வாய் மாலுசந்தி

| | |
|---|---|
| 1. த.நிஷாந்தினி A (3A) | 1. செ.வதனி B |
| 2. அ.நிஜிதா A (3A) | 2. நா.ரேதிகா B |
| 3. ப.நிலோஜினி A (2AB) | 3. இ.சங்கர் B |
| 4. ம.கோசிகா A (2AC) | 4. இ.நந்தினி B |
| 5. தி. வாசுகி A | 5. ர.மேதினி B |
| 6. தி.வானதி A | 6. எஸ்.துஷாந்தினி B |
| 7. எஸ். உதயபானு A | 7. எஸ்.சிந்து B |

### PERSONAL CLASS

| | | | |
|---|---|---|---|
| 01. து.இராகவன் | A | 06. இ. மாலதி | A |
| 02. ம. கலைவேந்தன் | A | 07. S. காயத்திரி | B |
| 03. த. குமார் | A | 08. வெ. துஷ்யந்தன் | B |
| 04. T.கலைச்செல்வன் | A | 09. A. எழில்அரசி | B |
| 05. ம. ஜெயகணேஸ் | A | 10. K.செல்வஜோதி | B |

ஆசிரியர்:
திரு. வன்னிமரம் அரவிந்தன்
B.A(HONS)(2nd UPPER) (POLITICAL SCIENCE SPECIAL)

(8/563965)


# நன்றி நவிலலும் நினைவுப்பிரார்த்தனையும்

கலாபூஷணம், கலைச்செம்மல், ஸ்வரராக லயவிநோத சுரபி, இசைத்திலகம், சங்கீதபூஷணம்

அமரர்

## லயனல் திலகநாயகம் போல்



பிறப்பு 12.05.1941

இறப்பு 05.12.2009

கடந்த 05.12.2009 அன்று இயற்கை எய்திய எங்கள் குடும்பத் தலைவரின் செய்தி கேட்டு வைத்தியசாலையில் உதவி புரிந்தவர்களுக்கும், நேரிலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும், குறிப்பாக இறுதியஞ்சலி நிகழ்வினை நடத்திய கலை உலக பிரமுகர்களுக்கும், இறுதி நிகழ்வில் பங்கு பற்றிய அனைத்து உள்ளங்களுக்கும், விசேடமாக இறுதி நிகழ்வை திட்டமிட்டு நெறிப்படுத்திய கத்தோலிக்க ஆயர் இல்லத்தினருக்கும், குருக்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து அன்னார் அமரத்துவம் அடைந்து மாதம் ஒன்று பூர்த்தியடைந்த நிலையில் அவரின் இல்லத்தில் நாளை (09.01.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்க தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

50, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(93556)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கமும், திருக்குடும்பக் கன்னியர் மட பழைய மாணவிகள் சங்கமும் இணைந்து நடத்திய ஒளிவிழா நிகழ்வு அண்மையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மாணவர்களின் வரவேற்பு நடன நிகழ்வை முதலாவது படத்திலும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவன் ஒருவனுக்கு அருட்தந்தை றெஜிஸ் இராசநாயகம் அடிகளார் பரிசினை வழங்குவதை இரண்டாவது படத்திலும் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

# சண்டிலிப்பாய், நல்லூர் பிரதேச கழகங்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.8

சண்டிலிப்பாய், நல்லூர்ப் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான இவ்வாண்டு விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்திற்கு வருகை தரும் கழகங்கள் பொதுக்கூட்ட அறிக்கை, அங்கத்தவர்களின் பெயர் விவரங்களை கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் எடுத்து வருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் செ.சதீஸ் கேட்டுள்ளார்.

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விளையாட்டுக் கழகங்கள் மீள்பதிவு செய்வது தொடர்பாகவும், இவ்வாண்டு நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (50-23-86)

# பாடசாலைகளில் மதியஉணவு வழங்கப்படாமையால் சிரமங்களை எதிர்கொள்ளும் குடாநாட்டு மாணவர்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்.குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுகள் விநியோகிக்கப்படாததினால் மாணவர்கள் பெரிதும் சிரமப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை முதலாம் தவணைக்காக சகல பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் மாணவர்களுக்கான மதிய உணவுகள் இதுவரையும் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.




மதிய உணவைத் தயாரிப்பதற்கான பொருள்கள் இன்னமும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படாததினாலேயே மாணவர்களுக்கான மதிய உணவு விநியோகம் இதுவரை இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மதிய உணவு விநியோகிக்காததினால் சகல மாணவர்களும் தமது வீடுகளில் இருந்து மதிய உணவுகளை எடுத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (04-224)

# மஞ்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் விரைவில் கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.8

இலங்கை மஞ்சி பிஸ்கற் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்ட சங்கம் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை வெகுவிரைவில் நடத்தவுள்ளதாக அதன் செயலாளர் கே.மனோகரன் அறிவித்துள்ளார்.

இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்பாக 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அல்லது தாங்களாகத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (50-16)

# வேலணை காளிகோயிலில் வெண்கலச் சிலை திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.8

வேலணை வங்களாவடி காளி கோயிலில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் மிகவும் பெறுமதியான வெண்கல சிலை திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை வேலணைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (50-16)

# உள்ளூர் ஓடுகளைப் பயன்படுத்தக் கோரிக்கை

குருநகர்,ஜன.8

உள்ளூர் ஓடுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் வடமாகாணத்தில் கட்டப்படவுள்ள வீடுகளுக்கும் கட்டடங்களுக்கும் கூரைகளை அமைக்கும் போது ஓடுகளை மட்டும் பயன்படுத்துமாறு தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு வடமாகாணத்திலியங்கும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளது.

சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தியமைத்து புதிய கூரைகளை அமைக்கும் போதும் இயன்றவரை இறக்குமதி செய்யப்படும் கூரைத்தகடுகளுக்குப் பதிலாக உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் ஓடுகளைப் பயன்படுத்துமாறும் இக்கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது. (04-51)

# வடமாகாண ஊர் சுற்றும் போட்டி நாளை மறுதினம் கரவெட்டியில்

யாழ்ப்பாணம்,ஜன.8

வடமாகாண ஊர்சுற்றுப் போட்டியும் வடமராட்சி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வீதி ஓட்டப் போட்டியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக முன்றலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார். இப்போட்டியில் பங்கு பற்றுவதற்காக ஏற்கனவே பாடசாலை அதிபர்களுடாகப் பதிவுகளை மேற்கொண்ட மாணவர்களும், ஊர்சுற்றுப் போட்டிக்கான வீர வீராங்கனைகளும் அன்றையதினம் காலை 6 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு சமுகம் தந்து தமது வரவினை உறுதிப்படுத்துமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் சி. சத்தியசீலன் கேட்டுள்ளார். (50-16-86-23)

# பருத்தித்துறையில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.8

உயர் கணனித்துறைப் பயிற்சி நெறி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை விதாதா வள நிலையத்தினால் நடத்தப்பட்வுள்ளது.

இதற்கான வளங்களைப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள மாணவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரணதர, உயர்தர கல்விச் சான்றிதழ், சுய விவரக்கோவை, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நாளை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறும் நேர்முகப் பரீட்சையின் போது மேற்குறித்த ஆவணங்களின் போட்டோப் பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தலைவர் சி.குலசிங்கம் அறிவித்துள்ளார். (50-16)

# முன்பள்ளி ஆசிரியர்களின் பொதுக் கூட்டம்

வலி.தென் மேற்குப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதேசசபை செயலாளர் திருமதி பு. சிவலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் முன்பள்ளிகளின் அபிவிருத்தி மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் நிலைப்பாடு, மேற்கொள்ள வேண்டிய நட்வடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளன. (50-115)

# வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 7,536 வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் இதுவரை 7ஆயிரத்து 536 வீடுகள் 2 ஆயிரத்து 215 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் 14 ஆயிரத்து 46 வீடுகள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் கடந்த 5 வருடங்களில் 10 ஆயிரத்து 274 வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்புட்டுள்ளன. அந்தப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இதில் 7 ஆயிரத்து 536 வீடுகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இது தவிர 2 ஆயிரத்து 738 வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மிகுதியான 3 ஆயிரத்து 772 வீடுகள் அமைப்பதற்குரிய பணிகள் இவ்வருட ஏப்ரல் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கான பயனாளிகள் தெரிவு விரைவில் இடம்பெறவுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் முதற்கட்டப் பரீட்சார்த்தமான திட்டத்தில் 125 வீடுகளும், கட்டம்-1இன் கீழ் ஆயிரத்து 638 வீடுகளும், கட்டம்-2இன் கீழ் 2 ஆயிரத்து 225 வீடுகளும், கட்டம்-3இன் கீழ் 3 ஆயிரத்து 553 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன - என்றார். (04-9)

# தரம் குறைந்த அரிசியா? மறுக்கிறார் சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜன.8

சாவகச்சேரி ப.நோ.கூ சங்கக் கிளைக் கடைகளில் தரம் குறைந்த அரிசி விநியோகம் செய்யப்படுவதாக கடந்த 6ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியை சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ்.ராஜாராம் மறுத்துள்ளார்.

அவ்வாறான அரிசி விநியோகம் தமது கிளைகளில் இடம்பெறவில்லை என அவர் தெரிவித்தார்.

சமுர்த்தி மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட அரிசியே தரம் குறைந்தது என்று மக்கள் தெரிவித்ததாகக் கடந்த 6ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பாகத் தாம் விசாரணைகளை மேற்கொண்டதாகவும், அவ்வாறான தரம் குறைவான அரிசி விநியோகம் எதுவும் இடம்பெறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-06)

# வடமாகாண ஆசிரியர்கள் சேர்ந்து கல்வி அமைச்சருடன் பேச்சு

## தற்காலிக இணைப்புப் பெற்றவர்கள் நிலைகுறித்து விவரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

தற்காலிக இணைப்புப் பெற்ற வடமாகாண ஆசிரியர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்தவை பத்தரமுல்ல, இசுருபாயவில் உள்ள அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் வடமாகாண கல்வி அமைச்சின் செயலருடன் தொடர்பு கொண்ட கல்வி அமைச்சர் இதுவிடயம் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி பணித்துள்ளார்.

இதன் அடிப்படையில் வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினர் யாழ்ப்பாணத்திற்குச் சென்று உடனடி மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாத ஆசிரியர்களின் நிலைமை குறித்து விரிவாக ஆராய உள்ளனர்.

இதற்காக இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் ஒன்றுகூட உள்ளனர். எனவே சங்க உறுப்பினர்கள் உரிய விண்ணப்பங்களுடன் கலந்துகொள்ளுமாறு வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Suwasetha சுவசெத லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 347
சீட்டிழுப்பு திகதி: 06.01.2010

வெற்றி எழுத்து: S வெற்றி இலக்கங்கள்: 13 20 34 53 போனஸ் இலக்கம் 05

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 11,511,700.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 01 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 91 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 123 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 3831 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2451 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 47618 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,406,140.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,755,284.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்பதிலின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்:www nlb lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.



# பதவி வெற்றிடம்

இலங்கையில் பிரசித்தி பெற்ற Lanka Tiles, Lanka Wall Tiles (Glazed Ceremic Tiles) ஸ்தாபனத்தார் யாழ்.நகரில் தங்கள் கிளை நிறுவனத்தின் காட்சி அறையை (Show Room) ஆரம்பிக்கவுள்ளனர். தகுதியுடைய ஆண்கள், பெண்கள் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகள்: GC.E O/L கணிதம் உட்பட 6 பாடம்.
முக்கிய குறிப்பு : கணனி அறிவு, ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவர்கள்
வயது: 18-24

உங்கள் சுயவிவரக் கோவையுடன் (கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்) 12.01.2010 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கீழ்க்காணும் முகவரிக்குச் சமுகமளிக்கவும்.

இல 53, பிரப்பம்குளம் லேன்,
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் அருகாமையில் K.K.S Road)
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (93532)

# ஆன்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம் 21 ★ 04 ★ 1938



மறைவு 10 ★ 12 ★ 2009

## அமரர் இரத்தினம் தங்கவேலாயுதம் (காந்தி)
(ஓய்வுபெற்ற சாரதி C.T.B)

கடந்த 10.12.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (09.01.2010) சனிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

371/10, ஆ டியபாதம் வீதி, நல்லூர் வடக்கு. (93534)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் 2009 க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விகற்ற மாணவன்
**கிருஷ்ணன் தர்ஷன்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு. (93539) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜலக்ஷ்மி பொன்னையா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜலக்ஷ்மி பொன்னையா (பொன்னம்பலம்) 06.01.2010 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து பொன்னையாவின் அன்பு மனைவியும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான இரகுநாதர் இராசையா- தங்கரட்ணம் தம்பதியரின் அன்பு மகளுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : துரைராசா-நாராயண[illegible] (பேரமகன்).

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (93530)

# பணிப்பெண் தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை. மாநாகரசபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.
தொடர்பு: இல.41, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)
தொ.பே:- 0778285872.

## மரதன் ஓட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஜன. 8

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொன் விழாவை முன்னிட்டு உள்ளூர் அணிகளுக்கு இடையிலான மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. அத்துடன் பொன் விழாவை முன்னிட்டு உள்ளூர் கழக அணிகளுக்கு இடையில் மென்பந்து , உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், தாச்சிப் போட்டி ஆகியவையும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (50-23)

## இசை வகுப்புகள் தைப்பூசமன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.8

நுணாவில் கிழக்கு சர்வசாதன சன சமூகநிலையத்தினர் மிருதங்கம், ஓகன் ஆகிய பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் தைப்பூசத் தினத்தன்று ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ளுமாறு நிலையத்தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார். (50-207)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.8

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் கிளையினர் அறிவித்துள்ளனர். (50-201)

## 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.8

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களில் இதுவரை 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் வழங்கப்படும் பொதிகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான கொடுப்பனவும் பொருள்கள் விநியோகமும் எதிர்வரும் 13 ஆம், 15ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி சிவன் கோயிலடியில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (50-207)

## வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு பயனாளிகளுக்குக் கடன்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்.மாவட்ட இளைஞர் வர்த்தக வேலைத் திட்டத்தின் கீழ் தமது வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக சில பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு லொயலார்ஸ் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

இதில் பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும் மற்றும் இலங்கையின் மாவட்டங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர், வெளிநாட்டு முதலீடுகள் குடாநாட்டு உற்பத்திகளைப் பாதிக்காதவகையில் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (50-16)

## வரணி மாவடி குடியிருப்பு வீதி புனரமைப்பு

தென்மராட்சி, ஜன.8

வரணி, கரம்பைக்குறிச்சி மேற்கில் சமுர்த்தி அதிகார சபையினரின் பங்களிப்பில் தொல்லையன் மாவடி-குருக்கள் குடியிருப்பு பாதை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

5 கிலோ மீற்றர் தூரம் வரையான இப்பாதை அமைப்புக்காக பாதையின் இரு மருங்கிலும் உள்ள குடியிருப்பாளர்கள் தமது காணியை விட்டுக்கொடுத்ததுடன்பாதை மிக அகலமாகப் புனரமைக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கது. மக்கி மற்றும் ஊரி என்பன மூலப் பொருளாகக்கொண்டு இவ் [illegible] குறிப்பிடத் தக்கது. (50-122)

# The Expression of Interest

The Nallur Piradesiya Sabah of Thirunelvely, Jaffna wishes to receive Quotation for the Design & Supply of pre Stressed Concrete Units of beams to form an Upper floor in their Renovation Works to Thirunelvely Market Complex in Jaffna District.

The floor area of the Upper floor to be provided is 11,700 Sq.ft.

The maximum span of a beam would be 12 ft.

Those Institutions who have experience in designing & fabricating of pre Stressed Beams shall express their willingness to participate in this endeavour.

The expressions of Interest shall be made to our Consultant M/s RUDRA Engineering &Architectural Consultancy Organization within 7 days through e-mail or by other means to the following address by sending the Company Profile and past experience on the field called for.

Chief Executive Officer,
RUDRA Engineering & Architectural Consultancy Organization,
08, Nallur Cross Road,Jaffna.
e-mail; ruhlins @ yahoo.com : Telephone: 021 222 5534.

The selected institutions will be furnished with necessary Bidding documents which will be sent by post or could be collected at the above address.

**Secretary,**
**Nallur piradesiya Sabah,**
**Thirunelvely, Jaffna** (C/563964)



## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 494
சீட்டிழுப்பு திகதி: 06.01.2010

வெற்றி எழுத்து: Z வெற்றி இலக்கங்கள்: 10 29 49 58

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.10,003,967.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 230 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 425 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40/- | 11489 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6530 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 164883 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 26454 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,832,500.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,277,800.00

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2085 திகதி 06-01-2010

ஆங்கில எழுத்திற்கும் G
வெற்றி எண்கள் 44 46 47 62
போனஸ் இல: 60

ஜக்பொட் பரிசு ரூ. 11,541,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 205452 | 20/- | 4,109,040/- |
| 2 இல | 14664 | 100/- | 1,466,400/- |
| 3 இல | 314 | 1,000/- | 314,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8307 | 40/- | 332,280/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 553 | 1,000/- | 553,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,541,350/- | - |
| 1 இல + போனஸ் இல | 9775 | 100/- | 977,500/- |
| 2 இல + போனஸ் இல | 462 | 500/- | 231,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 314 | 200/- | 62,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 9,684,520/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 239882 | | 10,284,520/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - P.M.H. குணசேகர - பெந்தொட்டை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - நிஷாந்த வீரசிங்க - கோனபொல.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 201501139-0-35 |
| மட்டக்களப்பு | 201496083-2-36 |
| குருணாகல் | 201486707-7-02 |
| கம்பஹா | 201490535-1-20 |
| திருகோணமலை | 201504372-3-45 |
| கொழும்பு | 201492285-0-34 |
| காலி | 201504410-0-21 |
| பதுளை | 201493835-5-00 |
| கேகாலை | 201504736-5-43 |
| கொழும்பு | 201503506-8-33 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.12,101,975/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜனவரி 09 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை ஒன்றுதான் பிராணனுக்கு ஆதாரம்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். ஆகவே கிடைத்தற்கரிய புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் நாம் முதலில் மனிதனாக வாழ முயற்சிக்க வேண்டும். ஆறாம் அறிவாகிய பகுத்தறிவைக் கொண்ட மனிதன் மிருகமாக வாழக்கூடாது. வாழ்வில் உண்மை, நேர்மை, நீதி, நியாயம், தர்மம், தாட்சண்யம் என்பவை மிகப் புனிதமாகப் பேணப்பட வேண்டும். இரக்கமற்ற அரக்க குணம் கூடவே கூடாது.

நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவர் மனம் புண்படும்படியாகப் பேசக்கூடாது. 'கடவுள்' ஒருவர் இருக்கிறார். அவர் நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்; அவனன்றி ஓரணுவும் அசையாது. இவற்றை நாம் மனதில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும். சதா சர்வ காலமும் மனதில் இறை நாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தாலே போதும். அது எம்மைப் பிழையான வழியிலிருந்து காப்பாற்றும்; தடுக்கும்.

காகம் ஒரு போதும் தனியே உண்ணாது; தன்னினத்தைக் 'கா கா' என்று கரைந்தழைத்துச் சேர்ந்தே உண்ணும். நாய் ஒருபோதும் நன்றியை மறக்காது. எறும்பு எப்போதும் கூட்டமாகவே வசிக்கும். இவற்றையெல்லாம் பார்க்கும்போது மனிதன் எப்படி வாழ்கின்றான்?

### சிந்திக்க வேண்டிய விடயம்

ஒரு பானையை எடுத்துக்கொண்டால் அதை வனைந்தவன் ஒருவன் இருக்கத்தானே வேண்டும். அவனில்லாமல் பானை உருவாகியிருக்க முடியாது. அதேபோல மனிதனைப் படைத்தவன் ஒருவன் இருக்கிறான் என்றால் அவன்தான் கடவுள். இதை முதலில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அந்தக் கடவுள் எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; அனைத்தும் உணர்ந்தவர். ஆகவே, அவரைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டால் அவர் எங்களைக் கைவிட மாட்டார். கடவுளைப் பிரார்த்தனை செய்வதன் மூலம் நமது துன்பங்களினின்றும் நாம் விடுபட முடியும். 'கடவுளை வணங்கினோர் கைவிடப்படார்' என்பது ஆன்றோர் வாக்கு. அத்துடன் எமது உள்ளம் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்ற வாக்குக்கிணங்க நாங்கள் மனத்தூய்மையுள்ளவர்களாக இருந்தால்தான் அங்கு இறைவன் வந்து குடிகொள்வான். அப்போது நாம் இறைவனைப் பிரார்த்தித்து வேண்டுதல் செய்துகொள்ளலாம்.

நல்லது நினைத்தால் நல்லது நடக்கும். தீயதை நினைத்தால் தீயதே நடக்கும். பாகல் விதையை விதைத்துவிட்டுப் பயற்றங்காயை எதிர்பார்க்கலாமா? 'தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்' ஆகவே நாம் நாம் செய்தது நாமே அனுபவிக்க வேண்டும். சிவப்புக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால் உலகம் சிவப்பாகத்தானே தெரியும்.

சிலபேர் சொல்லுவார்கள் நாங்கள் எது நினைத்தாலும் நடப்பதுதான் நடக்கும். விதியை மாற்றமுடியாது. நியதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்று. விதியை மதியால் வெல்லலாம். அந்த விலைமதிப்பில்லாத மதியை எங்களுக்குத் தருபவர் கடவுள். ஆகவே இறைவழிபாட்டினால் வெற்றியை அடையலாம்.

மார்க்கண்டேயர் சிவபெருமானை இறுகப் பற்றிக் கொண்டபடியால், யமன் காலால் உதைக்கப்பட்டான். மார்க்கண்டேயரின் வாழ்க்கையில் விதி வலுவிழந்தது. இந்த உண்மையை மனதில் நிலைநிறுத்தி நாங்கள் கடவுளைப் பிரார்த்தனை செய்தால் எமது பிராணனுக்கு வெற்றி கிட்டும். எனவே எமக்கு வாழ்வாதாரமாக இருப்பது பிரார்த்தனையே.

இந்தப் பிரார்த்தனை மூலம் நடக்காததையே நடக்கச் செய்யமுடியும். அவ்வளவு சக்தி அதற்கு இருக்கிறது. இதனை உணர்ந்து நல்லதையே சிந்தித்து நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்வோமாக.

இராசையா ஸ்ரீதரன்.

# கந்தரநுபூதிப் பாடல்கள் உணர்த்தும் நெறிமுறைகள்

"இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்பது தமிழ் மூதாட்டி ஔவையாரின் வாக்கு ஆகும். ஏகாந்த நிலையில் விளைந்த இன்பத்தை இன்னொருவர் அறியும்படி சொல்லமுடியாது. தாயானவள் தனது மகளுக்குத் தனது வாழ்வில் தான் அனுபவித்த அனைத்தையும் விளக்கிக் கூறமுடியாது. சிலவற்றை வாழ்வில் அனுபவித்த பின்பே உணர்ந்துகொள்ள முடியும். முகத்துக் கண்ணாற் பார்த்து எடுக்கும் முடிவுகள் யாவும் முழுமையாக அமைந்துவிடுவதில்லை. அகக் கண்ணால், ஞானக்கண்ணால் அறிகின்றபொழுதே உண்மைப் பொருளைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும். இந்த உண்மையைத் தவயோகி திருமூல நாயனார் தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

*"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்*
*அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்*
*மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய*
*சுகத்தைச் சொல்லுமின் சொல்லுமாறெங்ஙனம்"*

ஆன்மா பொறிபுலன்கள் முதலிய கருவி கரணங்களில் இருந்தும் நீங்கித் தனியாக நிற்கின்ற அருளனுபவ நிலையை யாருக்கும் வார்த்தைகளால் விளக்கிக்கூற முடியாது. அடியவர்க்கு எளியவராகிய கந்தவேட் பெருமான் தன்னைத் தியானித்து வணங்கும் அடியார்களின் துன்பத்தைப் போக்குகின்றார். கருணை சூழ்ந்த பேரொழிப் பிழம்பாக விளங்குகின்ற ஞானவேற் பெருமான் ஒளி




வீசுகின்ற வேலாயுதத்தைக் கையிலேந்தி வெவ்வேறு வடிவங்களைத் தாங்கி, அடியார்களுக்கு அருளை வாரி வழங்குகின்றார். முருக அடியார்கள் அவருடைய திருவருளுக்குப் பாத்திரமாகி அகம் தூய்மை பெற்று ஞானத்தைப் பெறவேண்டுமே ஒழிய ஞானத்தினை ஒருவரும் மற்றவருக்கு உணர்த்திவிட முடியாது என்ற கருத்தினைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகின்றது.

*"தன்னந் தனி நின்றது தான் அறிய*
*இன்னும் ஒருவர்க்கிசை விப்பதுவோ*
*மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்*
*கின்னங் களையும் கிருபை சூழ் சுடரே"*

புத்தி கெட்டு விட்டாற் கெடுதி ஏற்படும். "கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். "விநாச கால விபரீத புத்தி" என்ற வடமொழிச் சுலோகமும் இதனைக் கூறுகின்றது. இன்பம் அறிவினால் உண்டாகும். துன்பம் அறியாமையால் உண்டாகும். அறிவை வளர்த்தால் துன்பம் தேயும். அறியாமையை வளர்த்தால் இன்பம் தேயும். விதியைக்கூட மதியால் வெல்லலாம். மதியிழந்து அதனால் வாடி வருந்தி வாழ்நாளை வீழ்நாளாக்கக்கூடாது. அறநெறியால் வரும் ஞான பண்டிதனின் திருவடி அனுபூதியை இழந்து வீணாக அழியக்கூடாது. அறநெறி நின்றாற் சிவகதி கிடைக்கும். பயன் கருதாது, ஈஸ்வர அர்ப்பணமாகப் பணி செய்பவர்கள் சிவகதி அடைவார்கள்.



நமது அறிவு சரியாகச் செயற்படுவதற்கு இறையருள் வேண்டும். தந்தைக்கே ஞானத்தை உபதேசித்த சுவாமிநாதனாகிய கந்தவேட்பெருமான் கங்கா நதியின் திருக்குமாரர், மெய்யறிவிற்கும் பேரின்பத்திற்கும் தலைவர், அசுரர்களின் வலிமையை அழித்த வீர புருஷர், அடியேனின் அறிவும்சீராகச் செயற்பட வழிகாட்ட வேண்டும் என்று முருகப் பெருமானை வேண்டி நிற்பதை அநுபூதியின் ஐம்பதாவது பாடல் பின் வருமாறு விளக்குகின்றது.

*"மதிகெட்டறவாடி மயங்கியறக்*
*கதி கெட்டவமே கெடவோ கடவேன்*
*நதி புத்திர ஞான ஏகாதிபவத்*
*திதி புத்திரர் வீறடு சேவகனே"*

கந்தரநுபூதியாகிய ஞானத் திருக்கோபுரத்துக்கு மேல் வைத்த ஆயிரமாற்றுத் தங்கக் கலசம்போல ஒளி செய்யும் பாடலாக அநுபூதியின் ஐம்பத்தோராவது பாடல் திகழ்கிறது. திருவருட் பிரசாத அனுபவ ஞானத் திருநூலின் சாரமாக அமைந்துள்ள பாடல் இதுவாகும். இறைவன் பாடல் இதுவாகும்.

*(நன்றி: ஞானச்சுடர்)*

# நண்டினையாள் குடும்பத்து விளக்கு

ஊழ்வினை என்பதை நாம் நம்புகிறோமோ, இல்லையோ, சில பொருத்தங்களை நாம் நம்பித்தான் ஆகவேண்டும். பொருத்துவது மனிதன்தான் என்றாலும் பொருத்த மூலகாரணமான பின்னணிச் சக்தியைத்தான் விதியென்று கூறவேண்டியவர்களாகிறோம்.

ஒருவனுக்கு நல்ல பண்புள்ள மனைவி வந்து வாய்ப்பதும் இவ்விதம் தான்! எங்கேயோ பிறந்து முன்பின் காணாத ஒருத்தி ஒருவனுடன் வந்து வாழ்கிறாள் மனைவி என்னும் மாபெரும் சிறப்புடன். அவள் வந்த பின்னர் அந்த வீடு வளத்தால் பொங்குகிறது. அவள் காலடி எடுத்து வைத்தநேரம் என்பார்கள் நம் மூதாதையர்கள். ஆனால் வள்ளுவரோ, "அவள் இல்லற வாழ்விற்குரிய மாண்புமிக்கவள்" என்று கூறுகிறார். இவ்வளவுதான் வித்தியாசம்.

ஒருவனுக்கு நல்ல பண்புள்ள மனைவி மட்டும் அமைந்துவிட்டால் வேறென்ன வேண்டும்? நல்ல மனைவி என்பது எதைக் குறிக்கிறது? அவள் அழகுடனும் வனப்புடனும் திகழ்வதையா, அல்லது சிறப்போடு இல்லறத்தை நடத்தும் உயர் பண்பினையா? அழகும் வனப்பும் காமுகர்களுக்கே வேண்டும். செல்வமும் சொத்தும் எத்தனை நாள்களுக்கு வரும்? நல்ல பண்புடையவள் காலடி எடுத்து வைத்துவிட்டால் செல்வமெல்லாம் வீடு தேடி வராதா?

நல்ல மனைவியின் பண்பு என்ன?

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"**

மனைத்தக்க மாண்பு என்ன? இந்த மாண்பை அவள் எங்கிருந்து எந்தக் கல்லூரியில் படித்துவிட்டு வரவேண்டும்? நல்ல பண்பானது அவள் வளர்ந்த முறையில் கிடைக்கிறது என்பதைவிட அவளை வளர்த்த முறையில் கிடைக்கிறது என்பதே உண்மையில் மிகவும் பொருந்தும்.

பெற்றோர்கள், பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. எல்லாருமே நல்ல தாய்மார்களாக, பண்புள்ளவர்களாகப் பிற்காலத்தில் வந்துவிடமாட்டார்கள்.

அவர்களுடைய வளர்ப்பின் முறை நல்லமுறையில் அமைய வேண்டும். வளர்ந்த பின் இன்னொருவனின் மனைவியாகப் போகிற பெண் என்ற உணர்வு வளர்க்கப்படும் தாயாருக்கு இருக்கவேண்டும். அப்போதுதான் அந்தப் பெண் வளர்ந்து ஒருவனின் மனைவியாகச் செல்லும்போது மனைத்தக்க மாண்பு என்று வள்ளுவனார் கூறுவது போன்ற இல்லறப் பண்புகளையெல்லாம் பெற்றுத் திகழ்வாள்.

இல்லறத்தை இனிது நடத்துகின்ற நற்பண்புகளையெல்லாம் அவள் பெற்றுத் திகழ்ந்து தன்னுடைய கணவனின் வருவாய்க்குத்தக்க செலவு செய்யும் மாதரசியாகவும் அவள் விளங்க வேண்டும்.

அப்போதுதான் அவள் புகுந்த இல்லம் சிறக்கும்; செல்வவளம் கொழிக்கும்.

இதோடு நிறுத்திக் கொள்ளவில்லை வள்ளுவனார். அடுத்த குறளில் இதற்கு மேலும் ஒருபடி செல்கிறார்.

**" மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்"**

அவனுக்கு மனைவியாக வந்து சேர்ந்திருப்பவள் எவ்வளவு பெரிய இடத்திலிருந்து வந்திருந்தாலும் அவளிடம் மனைக்குரிய சிறப்புத்தன்மை இல்லாவிட்டால் தன்னுடைய சிறப்பான பொறுப்புக்கள் என்னவென்று அவள் உணர்ந்து நடக்காவிட்டால் என்ன பயன்? அவளை மனைவியாகப் பெற்றிருப்பவன் என்னதான் சிறப்புகள் அனைத்தையுமே பெற்றிருந்தாலும் அவற்றால் பயனேஇல்லை.

என்னதான் பெருமைகளும் சிறப்புகளும் அவன் பெற்றிருந்தாலும் அவனுடைய மனைவியிடம் மனைமாட்சி என்று சொல்லப்படுகின்ற தனிப்பெருஞ் சிறப்பு இல்லையென்றால் பயன் ஒன்றும் இல்லையே!

**"இல்லது என் இல்லவள் மாண்பானால் உள்ளது என்**
**இல்லவள் மாணாக் கடை"**

அவனோ ஏழை, ஆனால் பண்பு நிறைந்தவன். கடவுள் அருளால் அவனுக்குக் கிடைத்த மனைவியும் பண்புடையவளாக இல்லறவாழ்வை இனிதே நடத்திடும் இணையற்ற சிறப்புடையவளாக விளங்குகிறாள். சராசரி வருமானம்தான் அவனுக்கு . அவன் இல்லத்தரசிக்கு வெளியே சென்று வேலை எதுவும் செய்யத் தெரியாது. இருந்தாலும், அவனுடைய அந்த மிகக் குறைந்த வருமானத்திலேயே எவ்வளவு சிக்கனமுடன் சிறப்புடன் பிறர் போற்றும் விதத்தில் குடும்பம் நடத்திப் பெருமையையும் நிறைவையும் பெற்றுத் திகழ்கிறாள்; இல்லறத்தை மகிழ்ச்சிப் பூங்காவாக ஆக்குகிறாள்; இது அவளால் எவ்விதம் முடிந்தது?




இல்லவள் மாண்பானால் இல்லது என்? அவள் தான் எந்த வருமானத்திலும் சுயமரியாதையை இழக்காமல் குடும்பத்தைச் சிறப்புடன் நடத்தும் மாண்பினைக் கற்று உணர்ந்தவளாயிற்றே! அதனால்தான் அவள் அத்தனை பெருமையை அடைகிறாள்! இல்லத்தரசி என்ற பெயருக்கு இலக்கணமாய்த் திகழ்கிறாள்.

கண்டபடி செலவு செய்து, கணவன் எவ்வளவுதான் சம்பாதித்துக் கொண்டு வந்தாலும் அது இல்லை இது போதாது என்று எப்போதுமே அழுது வடிகின்ற பண்பற்றவள் தான் வள்ளுவர் கூறும் மாணாக்கடையாகிறாள்; சிறப்பினை இழந்தவளாகிறாள்; சிறப்பாக ஒரு குடும்பத்தை நடத்தத் தெரியாதவளாகிறாள்.

சிக்கலின்றிக் குடும்பத்தை நடத்துவது ஒரு தனித்திறமையாகும். இது ஆணிற்கு அமையாவிட்டாலும் பெண்ணிற்கு அமைந்தே தீரவேண்டும். இதைத்தான் மாண்பு என்று பெருமைப்படுத்திக் கூறுகிறார் வள்ளுவனார்.

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பு என்னும்**
**திண்மை உண் டாகப் பெறின்"**

இனிய வாழ்க்கையின் சிறப்பிற்கு மூல காரணமாக விளங்குகின்ற கற்பு என்னும் உறுதி நிலையிலிருந்தும் தளராத மனைவி ஒருவனுக்குக் கிடைப்பாளென்றால், அவன் எவ்வளவு புண்ணியம் செய்தவன் தெரியுமா? இத்தகைய உயர்ந்த ஒழுக்க நெறியாம் கற்பு நெறியில் நிற்கும் பெண்ணிற்குத்தான் எவ்வளவு பெருமையும் போற்றுதல்களும்!

எனவே கற்பைவிடச் சிறந்த உயர்ந்த நிலை ஒரு பெண்ணிற்கு இல்லவே இல்லை. ஆக அவள் சிறப்புக்களையெல்லாம் பெற்றுத் திகழ்வாள்; போற்றப்படுவாள்; பாராட்டப்படுவாள். இவ்வளவு சிறப்புள்ள பெண்ணைவிடப் பெருமைபடைத்தவர் யார் என்று கேட்பதன் காரணமே இந்தக் கற்பு நெறியுடன் ஒழுகுவதன் காரணத்தால்தானே?

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? என்று கேட்ட வள்ளுவனார் இந்தக் குறட்பாவிலே தற்காத்து என்று மீண்டும் ஆரம்பிக்கிறார். தற்காத்து என்பதற்குத் தன்னைக் காத்துக்கொண்டு என்பது தானே பொருள்? தன்னுடைய சிறப்பான நெறியாம் கற்பைக் காத்துக் கொள்வது தான் சிறப்பு என்பதையே குறிக்கிறார்!

இவ்விதம், தன் கற்பைக் காத்துக் கொள்வதன் மூலம் தன்னைக் காத்துக் கொண்டு தன் கணவனை அன்பு நிறைந்த உபசரிப்புக்களால் சிறந்த முறையில் பேணி தன் குடும்பத்தினுடையதும் தன் கணவனின் குடும்பத்தினுடையதுமான சிறப்பான புகழ்ச் சொல்லைக் காத்து உறுதியுடன் விளங்குபவளே பெண்ணாவாள் என்று கூறுகிறார்.

ஒரு மனைவியைக் கண்களால் தேர்ந்தெடுப்பதைவிட காதுகளால் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. கண்களால் பார்ப்பதற்கு அவள் அழகாகத்தான் இருப்பாள். ஆனால் கண்களால் அவளுடைய பண்பாட்டை அறிய முடியாதே! காதுகள் மூலம் அவளுடைய பண்பாடுகளைக் கேட்டறிந்து மனைவியாகக் கொள்ளவேண்டும் என்பது இந்தப் பழமொழியின் உட்பொருளாகும்.

தகை சான்ற சொற்காத்து என்ற சொற்கள் இதைத்தான் குறிப்பிடுகின்றன. உயர்ந்த பண்பாட்டில் வந்த குலப்பெருமையை அவள் காத்து நிற்க வேண்டும் என்பதை மறைமுகமாக அழுத்தம் கொடுத்துக் கூறுகிறார் வள்ளுவப்பெருமான்.

*(வேணா தமிழ்வாணன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 28 ✱ 05 ✱ 1937



உதிர்வு 31 . 12 . 1999

## திருமதி சிவலோகநாயகி குணபாலசிங்கம்

*திதி: நவமி (08.01.2010)*

அன்பாக எமையெல்லாம்
அரவணைத்து காத்த எம்- அம்மாவே!
அகிலத்தில் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பத்து ஆனாலும்
அழியாது உம் நினைவுகள்

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

உசன், மிருசுவில். (93476)

# 2ஆம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம் 25 ✱ 08 ✱ 1941



மறைவு 01 ✱ 01 ✱ 2008

*யாழ்.போதனா வைத்தியசாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில் பிரதம குருவும் பிரபல சோதிட சிகாமணியுமான*

## சிவஸ்ரீ ப.காயாரோகண சிவக்குருக்கள்

அப்பா உங்களின் அன்பாலும் எல்லையில்லா அர்ப்பணிப்பாலும்
தலைநிமிர்ந்து வாழுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் எங்களுக்கு - நீங்கள்
எங்களைப் பிரிந்த கவலை மறையாது
எங்களை விட்டுப் பிரிந்த உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்களின் அன்பான மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

40/2, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(சி/563957)


# STUDY IN INDIA

**SSM College of Engineering**
**SSM College of Arts & Science**
Komarapalayam, Salem Dt, Tamil Nadu

4 Years Engineering Degrees form ANNA UNIVERSITY

- Civil
- Mechanical
- Electronics
- Communication
- Electrical
- Computer Science
- Info Technology
- Textile Technology

3 Years Degrees form PERIYAR UNIVERSITY

- Bsc Bio Tech
- BSc Microbiology
- Bsc Hotel Managt.
- Bsc Computing
- BBA
- Computer Applications
- B.Com
- Bsc Fashion Design

All the above Degrees are **recognized by UGC Sri Lanka**

**UK** Preferred Age above 18 to 22
Low down payment & Bank Sponsor
With O/L s Maths & English

**MBBS** Lugansk state Medical University
Ukraine East-Europe
recognized by SL Medical Council

**யாழ்ப்பாணத்தில்** எம்மை சந்தித்து
மேலதிக விபரங்கள் / Admission பெற்றுக்கொள்ளவும்.
இடம் : **DEVI INN** (கச்சேரி - நல்லூர் வீதி)
(Next to Trumpt Sound Church)
திகதி : 7th, 8th, 9th January 2010
நேரம் : 4.00pm to 7.00pm

Mr. Peter Selvarajah
Director - SIC
0777-767818

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, No.50, Galle Road, Colombo 06. E-mail : scholinfo@yahoo.com



# மணமகள் தேவை

யாழ்.R.C.உயர்குல பெற்றோர் தமது 37 வயதுடைய உயர்கல்வியின் பின் கௌரவமான உயர்வருவாய் உடைய தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.

(93400) தொ.பே.: 0777 698339

# வீடு வாடகைக்குத் தேவை

அலுவலகமாக உபயோகிப்பதற்கு 3 - 6 அறைகளுடன் கூடிய வீடு யாழ்.நகர எல்லைக்குள் பிரதான வீதிகளில் தேவை.

(93399) தொ.பே.: 0777 767818

# தேவை

கணனி இயக்குநர், சாரதி ஆகியோர் தேவை. கணனி இயக்குநர் M.S.Office கற்கை நெறியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருத் தல் வேண்டும்.

தொடர்பு: 205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# சேவை

சகல விதமான குளிரூட்டிகள் (A/C), குளிர்சாதனப் பெட்டிகள் (FRIDGE) ஒரு வருட உத்தரவாதத்துடன் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 0771341991 (93522)

# புதிய பிரிவு நாளை

**S.L.A.S.** வகுப்பு சனி, ஞாயிறு ஒரு மணி
✱பழைய பிரிவு வழமையான நேரத்திற்கு நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே
(93526)


# பழைய இடத்தில் மீண்டும் பருத்தித்துறை பஸ் நிலையம்

வடமராட்சி,ஜன.8

பருத்தித்துறை பஸ் நிலையம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

புதிய நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் கிழக்குப் புறத்தில் இ.போ.ச. பஸ் வண்டிகள் நிறுத்தப்பட்டு சேவைகள் இடம் பெற்றுவருகின்றன.

இடவசதி போதாமையினால் புறப்படும் நேரத்திற்கு முன்பதாக ஐந்து இ.போ.ச. பஸ்கள் நிறுத்தப்பட்டு ஒவ்வொன்றாகப் புறப்பட்டுச் செல்கின்றன.

இதேவேளை சிவன் கோயில் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் தனியார் பஸ்கள், நவீன சந்தையின் காந்திசிலைப்பகுதிக்கு வந்து சிறிது நேரம்தரித்துநின்று பயணிகளை ஏற்றிச் சேவைகளில் ஈடுபடுகின்றன.

(04-236)


# வேலையாள் தேவை

கச்சேரிக்கு முன்பாக அமைந்துள்ள Y.M.C.A கன்ரீனுக்கு ரொட்டிமேக்கர், சமையல்காரர், உதவியாளர்கள் மற்றும் காசாளர்/ சிட்டை லிகிதர் (பெண்) உடன்தேவை. நேரில்வரவும். தொர்புகளுக்கு: [illegible] 0773486804 (93521)

# Educational Consultant / Agents Wanted

கொழும்பில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக Overseas Higher Educational Consultants ஆக UK, USA, Ukraine, Romania, India, Switzerland, Malaysia, Singapore ஆகிய நாடுகளை சேர்ந்த பல University/Colleges இன் ஏக பிரதிநிதிகளாக இயங்கும் எமது நிறுவனத்திற்கு

## யாழ்ப்பாணத்தில் Agent தேவை.

ஓர் பட்டதாரி/ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது. யாழ் நகரில் இயங்கும் Office/Tutory/ வீடு வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**Peter Selvarajah - 0777-767 818**
**E-mail : scholinfo@yahoo.com**
7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில்
**DEVI INN** (கச்சேரி-நல்லூர் வீதியில்) சந்திக்கவும்


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு: 21.05.1937 அமரர் உதிர்வு: 09.12.2009

## கந்தையா இராசலிங்கம்

*கடந்த 09.12.2009 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவுகேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும், மரணச்சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று*



*(08.01.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**மனைவி, பிள்ளைகள்.**
27/6, துரையப்பா ஒழுங்கை,
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-563915)

# தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## ஒப்பந்த வேலைக்கான விருப்பம் தெரிவித்தல்

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு பின்வரும் வெளிநாட்டு உதவி நிதிமூலமான கருத்திட்டங்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப் படுத்தி வருகிறது.

| கருத்திட்டத்தின் பெயர் | நிதி மூலம் | உத்தேச செலவு (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள் கட்டுமான கருத்திட்டம் (நேரப்) | சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையும் ஐரோப்பிய ஒன்றியம் | 16,928.89 |
| வடக்குக் கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டம் (நெக்டெப்) | ஆசிய அபிவிருத்தி வங்கியும் டச் அரசாங்கமும் | 3,983.00 |
| மீள் எழுச்சித்திட்டம் | உலக வங்கி | 7,284.00 |
| வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம் - II (நெக்கொட்) | ஆசிய அபிவிருத்தி வங்கியும் சுவீடன் அரசாங்கமும் | 2,370.00 |
| வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம் - II (நெக்கொட்) | ஆசிய அபிவிருத்தி வங்கி | 3,130.00 |
| வடக்குக் கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டம் | உலக வங்கி | 9,500.00 |
| வடக்கின் அவசர மீட்பு கருத்திட்டம் | உலக வங்கி | 6,500.00 |

மேற்கூறப்பட்ட கருத்திட்டங்களை அமுலாக்குவதற்கு மிகப்பெரியளவிலான நிர்மாண வேலைகள் முன் எடுக்கப்படவுள்ளன. வேலைத்திட்டங்களின் விவரம்:

✱ அழிவடைந்த குடிநீர் விநியோக வழங்கல் திட்டங்களை மீள் நிலைக்குக் கொண்டு வருதல்
✱ கிராம வீதிகளைப் புனர் நிர்மாணம் செய்தல்
✱ நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தல்
✱ வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களினதும் அழிவடைந்த பொதுக் கட்டடங்களையும் பொதுச் சொத்துக்களையும் மீளமைத்தல்

இவ் அமைச்சு மேற்கூறப்பட்ட வேலைகள் தொடர்பிலான செயல்திட்ட அடிப்படையிலான கருத்திட்டங்களை மேற்கொள்ள ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அழைப்பாணை விடுக்கின்றது.

ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர் ஒப்படைக்க வேண்டியவை. அவர்களால் கடந்தகாலங்களில் இதே மாதிரியான முன்வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்தமைக்கான சான்றுகள் அடங்கிய விவரம், இதே நிலையான அனுபவம், ICTAD தரம், தற்போது அமுலிலுள்ள ஒப்பந்த வேலைத்திட்டங்களின் விவரம், கருத்திட்ட முகாமை ஆளணி விவரம், வடிவமைப்பாளர், உடல் உள உழைப்பாளிகள், இயந்திர உபகரண, நிதி, இயலுமை போன்ற விவரமான தகவல்கள் தரப்பட வேண்டும்.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த ஒப்பந்தகாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இலங்கையின் கேள்வி விலை கோரல் வழிகாட்டிக்கமைவாகவும் ஏனைய நிதி முகவராண்மைகளின் கேள்வி விலை கோரல் வழிகாட்டிக்கமைவாகவும் முன் அனுபவ ஒப்பந்தகாரர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும்.

விவரத்தை தெரிவிக்கும் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 05.02.2010ஆம் திகதியோ அதற்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு: 14.12.2009ஆம் திகதியன்று "Daily News" 'தினகரன்' பத்திரிகைகளில் கேட்கப்பட்டதற்கிணங்க விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

*செயலாளர்*
தேசத்தைக் கட்டியெழுப்புதல்
தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
இல.177 [illegible] வீதி,
[illegible]

(சி/563949)

*தொ.பே.: +94-11-2382067*
*தொ.நகல்: +94-11-2382066*
*மின்னஞ்சல்:* Secmdrrn@Sltnet.lk
*இணையப்பகுதி:* www.mnbd.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நகைப்புக்கிடமாகும் தேர்தல் சட்டங்கள்


**தேர்தல் சமயத்தில் சட்டம் மற்றும் அமைதிக் கேள்விக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தேர்தல் கருமத்தில் பாதாள உலகமும் இணைகிறது. பொலிஸ் துறையின் பாதாள உலகைக் கட்டுப்படுத்தும் பிரிவுகள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கு மத்தியில் வன்முறைகளற்ற - அமைதியான - ஜனாதிபதித் தேர்தலொன்று சாத்தியமாகுமா?- என்ற வினாவையும் சம்பந்தப்படுத்தி சில விளக்கங்களை முன்வைக்கிறது இக்கட்டுரை.**

**கயான்குமார வீரசிங்க எழுதிய இக்கட்டுரை, டிசெம்பர் 27ஆம் திகதிய 'லக்பிம' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.**

**அதன் தமிழ் வடிவமே இது.**

**தமிழில் : சரா**





ஜனவரி 26ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமான, நீதி- நியாயமான, வன்முறைகள் எதுவுமற்ற, அமைதியான தேர்தலாக அமையவேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். அது அவ்விதமே நடைபெற வேண்டுமானால், மோதல்கள் அற்ற முன்னுதாரணமொன்றாக இத்தேர்தல் இடம்பெறத்தக்கதொரு புறச்சூழல் நாட்டில் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

### யதார்த்தப் புறநிலைமை வரவேற்கத்தக்கதல்ல

ஆனாலும், இன்றைய அளவில் நாட்டினுள் நிகழ்ந்து விட்டுள்ள - தேர்தலோடு சம்பந்தப்படும் - வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு நோக்கும்போது, யதார்த்த நிலைப்பாடானது அந்தளவுக்கு வரவேற்கத்தக்கதல்ல என்பது தெளிவாகிறது. மனிதப்படு கொலைகள், துப்பாக்கிச் சூட்டுப் பரிமாறல்கள் என்றவாறான பாரதூரமான தேர்தலுடன் சம்பந்தப்படும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிராத போதிலும், பொலிஸ் தலைமையகத்தின் தேர்தல் செயலகப் புள்ளிவிவரத் தகவல்களுக்கு அமைய கடந்த வாரம் முடிவுக்கு வந்த கால அவகாசத்துக்குள் தேர்தலோடு சம்பந்தப்படும் எழுபதுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பாகத் தகவல் கிட்டியுள்ளதோடு, அச்சம்பவங்கள் தொடர்பாக இருபதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

அவ்விதம் கைதுகளுக்கு உள்ளாகியிருப்போர் இடையில் ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்கள் இருவரும் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் அனைத்து அரசியல் கட்சிகளினதுமே ஆதரவாளர்கள் உள்ளடங்கியிருக்கின்றமை விசேடமானதாகும்.

பொலிஸ் தலைமையகத் தேர்தல் அலுவலகத்தின் தலைவரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின கருத்து வழங்குகையில், கட்சி, நிறபேதம், தகுதி - தராதரங்கள் என்ற எவற்றையும் கருத்தில் கொள்ளாது தேர்தல் சட்டத்தை அச்சொட்டாக நிறைவேற்றுமாறு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கமைய, தேர்தல் சம்பந்தமாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பெறப்படும் சகல முறைப்பாடுகளும் பொலிஸ் நிலையங்களிலுள்ள தேர்தல் செயற்பாட்டுப் பிரிவில் பதியப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

### வன்முறைத் தொடர்கள் புது மாதிரியில் நிகழலாம்

இதனிடையே, மனித உரிமைகள் தொடர்பான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு மையத்தின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளரான உபாலி பத்திலகே கருத்து வழங்குகையில், புது மாதிரியிலான வன்முறைத் தொடரொன்று இத்தேர்தலில் தலைதூக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன எனத் தெரிவித்தார்.

அத்தோடு, கடந்த காலத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் முழுவதிலுமான சம்பவங்களுக்குச் சமமாக இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது பாரதூரமான விதத்தில் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன எனவும் அவர் தெரிவிக்கிறார்.



எதிர்பாராத விதத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்லக்கூடுமோவென்ற சந்தேகம் தேர்தல் கண்காணிப்புப் கட்டமைப்பினுள் மட்டுமல்லாது, ஏனையபிற தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களினுள்ளும், பொலிஸ்துறையின் உயர்மட்ட அதிகாரிகளிடையிலும் கூட, உருவாகியுள்ளது. இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள பிரதான வேட்பாளர்கள் இருவரினதும் சக்தி மற்றும் திரண்டு நிற்கும் பலம் ஆகியன அத்தகைய சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணமாகியுள்ளன என்று தெரிகிறது.

### பிற பொலிஸ் பிரிவுகள் பல தேர்தல் பணிக்காகக் கலைப்பு

இந்த நிலைப்பாட்டினைக் கருத்தில்கொண்டு, பொலிஸார் முன்னேற்பாட்டு ஆயத்தங்களை மேற்கொள்ளத் தக்கதாகப் பொலிஸ் துறையினுள் செயற்படும் பெருமளவிலான விசேட செயற்பிரிவுகள் கலைக்கப்பட்டு, அப்பிரிவுகளில் பணியாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கூட, தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தத்தக்க வகையில் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய செயற்பட்டுள்ளார். இவ்விதம் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளவை, தொகுதிவாரி குற்றத் தடுப்புப் பிரிவுகள் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுகள், தொகுதிவாரி ஊழல் தடுப்புப் பிரிவுகள் மற்றும் மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவுகள் என்ற விசேட பொலிஸ் பிரிவுகளாகும். கடந்த காலம் முழுவதிலும் இந்த விசேட பொலிஸ் பிரிவுகள் மூலம் குற்றவாளிகளை வளைத்துப் பிடித்தல் மற்றும் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் காரணமாகப் பெருமளவிலான பாதாள உலகின் குற்றவாளிகள், கூட்டாக இணைந்து குற்றச் செயல்களைப் புரிவோர் மற்றும் போதைவஸ்து வியாபாரிகள் நாட்டிலிருந்தும்கூட வெளியே தப்பியோட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பொலிஸாரின் இந்நடவடிக்கைகளினால் பீதியுற்றே அவர்கள் அவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றனர்.

### குற்றச் செயல்கள் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து

இந்த விசேட பொலிஸ் பிரிவுகள் செயலிழக்கச் செய்யப்பட்டு, அப்பிரிவுகளில் பணியாற்றிய பொலிஸாரும் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் அமர்த்தப்பட்டதன் காரணமாக, பாதாள உலகக் குற்றவாளிகள், கூட்டாக இணைந்து குற்றச் செயல்களைப் புரிவோர் மற்றும் போதைவஸ்து வியாபாரிகள் மீண்டும் தமது கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்துள்ளனர் என்றவாறான வாதவிவாதங்களும் கூட ஒருசில பொலிஸ் உத்தியோகத்தர்களிடையே நிலவுகிறது.

இக்குற்றவாளிகள் இன்றைய அளவிலும் தமக்கு நெருக்கமான அரசியல்வாதிகளுடன் சேர்ந்து கொண்டு 'தேர்தல் கருமங்களில்' ஈடுபட்டுள்ளனர் எனவும், பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவருக்கும் கூட அவர்களின் உதவி, ஒத்தாசைகள் கிட்டியுள்ளன எனவும் தம்மை யாரென்று வெளிப்படுத்தாதிருக்குமாறு கோரிக்கை விடுத்து, பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வன்முறைகளற்ற அமைதியான தேர்தலொன்றுக்கான வாய்ப்பு அமையாது போகுமானால் அதற்கு அத்தகைய குற்றவாளிகளும் வியாபாரிகளுமே காரணமாகக் கூடுமெனவும் அந்த அதிகாரிகள் கருத்து வழங்கியிருந்தனர். ஒருசில மணித்தியாலங்களில் அத்தகைய நபர்களைக் கட்டுக்குள் கொண்டுவரும் ஆற்றல் பொலிஸார் வசமிருந்தாலும்கூட, நிலவும் அரசியல் போக்குக்கு அமைய, பொலிஸ் உத்தியோகத்தர்கள் அத்தகைய செயலில் ஈடுபடப் பெரிதும் தயங்குகிறார்கள். அதற்கு முன், ஒன்றுக்கு இரண்டு தடவைகள் அவர்கள் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் விளக்கமளித்தனர்.

### சட்டத்தை மதித்தால் அமைதியான தேர்தல்

இந்த நிலைப்பாடு தொடர்பாக மேலும் கருத்து வழங்கிய, பொலிஸ் தலைமையகத்தின் தேர்தல் கருமங்களுக்கான செயலகத் தலைவரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன, தேர்தல் சட்டக் கோவையிலுள்ள சட்டங்கள், நியமங்கள், விதிகள் என்ற இவற்றுக்குக் கீழ்படிந்து வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் செயற்படுவார்களானால் வன்முறைகளற்ற அமைதியான தேர்தலொன்றை நடத்திவிட முடியுமென்பதாகத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த பின்னும் இசையால் வாழும் கலைஞன்



இயந்திர மயப்படுத்தப்பட்டுவரும் இன்றைய காலகட்டத்தில் மக்களும் இயந் திரங்களாக மாறி வருகின்றனர். மனிதப் பண்பும், கலையுணர்வும் மிகவும் குறைந்து வருகின்றது. இந்நிலையில் எமது பாரம்ப ரியக் கலைகள் மழுங்கி வெறும் விற்பனைப் பண்டங்களாக ஆக்கப்பட்டு வருகின்றன. இதனால் கலையை தம் உயிர்மூச்சாக எண்ணி வாழ்ந்துவரும் கலைஞர்கள் எம் மிடையே அருகி வருகின்றனர். அவ்வாறு இருக்கின்ற ஒருசில கலைஞர்களின் இழப்பும் எம் தேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அந்த வகையில் கர்நாடக சங்கீதத் துறையில் ஓர் 'அமுதசுரபி'யாகத் திகழ்ந்து அண்மையில் மறைந்தவர் சங்கீதபூஷ ணம் திரு.லயனல் போல் திலகநாயகம் அவர்கள். இவர் ஒரு நாடறிந்த பாடகர், கலைஞர், கவிஞர், சிறந்த மேடைப் பேச்சாளர், விமர்சகர். தானே உருவாக்கிய பாடல் களை இசையமைத்துப் பாடுவதில் வல்லவர் என்பதுடன் ஒரு நல்லாசிரியரும் கூட. இவர் மேலைத்தேய, ஹிந்துஸ்தானி இசையுடன் வயலின், ஹார்மோனியம் என்பவற்றில் நன்கு பரீட்சயமுடையவர். மிருதங்க தக்ககாரைச் சொற்கட்டுகளை யும் நன்கு அறிந்தவர். இவரது இசையை அறியாத எவரும் இல்லை என்றே கூறலாம். கர்நாடக இசையின் முழு அடிப்படை அனுபவங்களையும் வடமொழி, தெலுங்கு மொழி உருப்படிகளில் காணலாம். இத னால் இவரது ஆரம்பகால இசை நிகழ்ச்சிகளில் இவ்வகை உருப்படிகளைப் பாடி மொழி தெரியாவிட்டாலும் இசையை இர சிக்கலாம் என்பதை தனது கச்சேரியின் மூலம் நிலைநாட்டிப் பாராட்டைப் பெற்றவர். அதேவேளை தெலுங்குமொழி உருப்படிகளின் பாணியில் பல தமிழ் கீர்த் தனைகளைத் தானே யாத்துப் பாடுவதிலும் வல்லவர்.

தனது தாய்மொழியாம் தமிழில் பற்று டைய இவர் பல மெல்லிசைப் பாக்களை ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் வெளிப்படுத்தினார். பின்னைய காலங்களில் பல கீர்த்தனைகள், வர்ணங்கள், இராகமாலிகை, தில்லானா என கர்நாடக சங்கீதத்தின் அடிப்படை உருப்படிகளை தமிழில் உருவாக்கி நிகழ்த்திக் காட்டியதுடன் அவற்றை ஸ்வரதாளக் குறியீட்டுடன் அமைத்தும் வைத்தார்.

இவரின் ஒவ்வொரு இசை நிகழ்விலும் எத்தனையோ வினோதங்கள், புதிய சாகித் தியங்கள் மட்டுமல்ல, புதிய சாதனைகள் கூட இருக்கும். தனக்கான தனித்துவமான பாணியமைப்பை வைத்திருந்த இவர் ராகம், ஸ்வரம், ஸ்ருதி, பாவம் என அனைத்திலுமே சுத்தத்தைப் பேணுவதுடன் ஓர் சுகானந்த அனுபவத்தையும் தனது கச்சேரி யின் மூலம் ஏற்படுத்தி விடுவார். இவருக்கு வழங்கப்பட்ட "ஸ்வரராக லய விநோத சுரபி" எனும் பட்டம் எவ்வளவு பொருத்த மானது எனச் சிந்திக்க வைக்கும் வகையில் இவரது ஒவ்வொரு கச்சேரியும் அமைந்திருக்கும். சாரீர, சரீர வளம் கொண்ட இவர் சாஸ் திரிய இசை நுட்பங்களை அறியாத மக்க ளைக்கூட இசையால் தன்வயப்படுத்தி விடுவார். அதேநேரம் சாஸ்திரிய இசை பயின்றவர்களைச் சிந்திக்க வைப் பதுடன் திணறடிக்கவும் செய்துவிடுவது இவரது சிறப்பம்சமாகும். எப்பொழுதும் குருவணக் கத்துடன் தனது கச்சேரியை ஆரம்பிக்கும் இவர் தனது முதல் உருப்படியிலேயே மிகுந்த விறுவிறுப்புடன் கச்சேரியை களைகட்டச் செய்துவிடுவார். கற்பனா ஸ்வரங்களை அழகாக, லயம்பிசகாது நன் கமைந்த கோர்வைகளாக்கி அள்ளிச் சொரிவதுடன் ஸ்வரம் பாடும்போதும் ராக ஆலாபனை செய்யும்போதும் அதன் உச்சிக்கே ரசிகர்களையும் கூட்டிச் சென்றுவிடும் அவரது பாங்கே தனி.

ஸ்ருதி ராக, லய சுத்தத்துடன் 'ஸ்ருதி பேதம்' செய்வதில் சிறப்பிடம் பெற்ற இவர் மிக இலகுவாக மேற்குரல் (மேல் ஸ்தாயி), கீழ்க்குரல் (கீழ்ஸ்தாயி) இரண்டிலும் ஸ்வர அடுக்குகளை மூச்செடுக் காமல் பாடும் திறன் பெற்றிருந்தார். இவ்வாறு இரு ஸ்தாயியிலும் மாறி மாறிப் படிக்கும்போது இரு குரல்கள் பாடுவது போன்று கேட்கும். இம்முறையை மதுரை மணி ஐயர் பாடுவதுண்டு. அதனைக் கேட்டு அதில் லயித்த அவர் தானும் அதனை முயற்சி செய்து வெற்றி கண்ட தாகத்தானே கூறியிருக்கின்றார். இதனை இலங்கையில் முதன் முதலில் சாதித்துக்காட்டிய பெருமை இவரையே சாரும்.

'ஈழத்து பாலமுரளி கிருஷ்ணா' எனச் சிறப்பிக்கப்படும் இவர் ஸ்வர அடுக்குக ளைக் கோர்வைகளாக எவ்வாறு தொடர்ந்து பாடுவாரோ அதேபோன்று பொருள் நிறைந்த தமிழ்ச் சொற்களையும் கோவைகளாக்கி இசையமைத்துப் பாடும் திறனும் இவரிடம் தனித்துவமானதே.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 06.07. 1942 ஆம் ஆண்டு வல்லிபுரம் முருகேசு போல்-மாக்கிரட் தங்கமலர் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வராக அவதரித்தார். யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தொடர்ந்து அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயின்று சங்கீத பூஷணம் முதலாம் தரப் பிரிவில் சித்தியடைந்து நாடு திரும்பினார். அதன் பின்னர் தனது நாட்டிற்கு இசைச் சேவையாற்றி வந்த இவர் வவுனியா மகாவித்தியாலயம், மட்டுநகர் சிவானந்தா வித்தியாலயம், மன்னார் நானாட்டான் கல்லூரி, கோப்பாய் மகாவித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி என்பவற்றில் ஆசிரி யராகக் கடமையாற்றினார். ஆங்கில அறிவும் மிகுந்த ஆளுமையும் உடைய இவர் தொடர்ந்து ஆசிரிய ஆலோசகராக வும் உதவிக்கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றினார். இவை மட்டுமன்றி வட இலங்கை சங்கீத சபை உறுப்பினரான இவர் அதன் பரீட்சைகளில் 5 ஆம்,6 ஆம் (ஆசிரியர்தரம்) தரப் பரீட்சையின் பிரதம பரிசோதகராகவும், வினாப்பத்திரம் தயாரித்தல், மதிப்பீடு செய்தல், கருத் தரங்கு நிகழ்த்துதல் எனப்பல் வேறு சேவையாற்றுபவராகவும் திகழ்ந்தார். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் வருகை விரிவுரையாளராக, வெளிவாரி பரீட்சகராகவும் விளங்கிய இவர் பல்வேறு கர்நாடகஇசை , பண்ணிசை ஒலிநாடாக்களையும் வெளியிட்டுள்ளார். பாடசாலைப்பாடத்திட்டத்திற்கமைய சங்கீத, நடன நூல்களை அச்சிட்டு வெளியிட்டதுடன், செந்தமிழ்ப்பாக்கள் எனும் தமிழ்ப்பாடல்கள் அடங்கிய நூலி






இந்திய தத்துவக் கொள்கைகள், மதங்கள் என்பவற்றின் அடியீடான கோட்பாடு கர்மக்கொள்கையும் மறுபிறவிக்கொள்கையும் ஆகும். கர்ம நியமம் என்பது விதியின் கையில் ஒப்புக் கொடுப்பது. இந்த வாழ்க்கையில் சம்பவிப்பன எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ஏனெனில் நாம் முன்பு செய்தவையின் வினையே அவையாகும். எனினும் வருங்காலம் எங்கள் கைகளிலேயே இருக்கிறது. ஆகவே நாம் நம்பிக்கையோடும் மன உறுதியோடும் எமது கருமங்களைச் செய்வோம் என ராதா கிருஷ்ணன் கூறுவதையே ராமாயணத் தரவுகள் கூறுகின்றன. ராமாயணப் பாத்திரங்கள் தங்களுக்கு நேரும் துன்பங்கள் எல்லாம் முந்திய பிறவியில் செய்த தீவினையின் பிரதிபலன்களே என துன்பங்களைச் சகித்து நடக்கின்றார்கள். செய்தவினை செய்தவனையே செய்தவாறே வந்தடையும் என நம்பினர். அவரவர் செய்த நல்வினைகளும் தீவினைகளும் ஒன்றுதான். கன்மம் என்றால் வினை அல்லது செயல் என்று பொருள்படும். நாம் செய்யும் செயல்கள் யாவும் கன்மங்களே. ஆனால் தத்துவ உலகில் கன்மம் என்பது சற்று விரிந்த கருத்து உடையது. ஒவ்வொரு செயலுக்கு ஒருநோக்கம் உண்டு. பலன் உண்டு. அப்பலனை அனுபவிப்பதும் ஒரு செயலாகும். எல்லாச் செயல்களுக்கும் பலன் உண்டு. அப்பலன்கள் செய்தவரையே சேரும். சில பலன்கள் உடனேயே சேரும். சில செயல்களின் பலன்கள் சில காலம் சென்று சேரும். இந்த உண்மையை பொதுவாக ஒப்புக் கொள்வர்.


ஒரு பிறப்பில் ஒருவர் செய்யும் செயல்களின் பலன்கள் அனைத்தையும் சில சமயம் அந்தப் பிறப்பிலேயே அனுபவிக்க முடியாமல் போகலாம்.

## கர்மமும் மறுபிறப்பும்

கு.கோபிராஜ், சண்டிலிப்பாய்

பருவ காலத்தில் பழுக்கும் மரம் போல உரிய காலத்தில் அவரவரை வந்தடையும் எனவும் நம்பினர். தீவினையின் பயனை அனுபவித்த பின்னரே நல்வினையின் நலன்களை ஒருவரால் அனுபவிக்க முடியும் என கூறப்படுகின்றது. நற்கருமங்களையே ஒருவர் புரிய வேண்டும். நற்கருமத்தை புரிவதே இப்பிறவியின் நோக்கம். இது கர்ம பூமி கர்மம் இயற்றும் இடம்.

சைவ சித்தாந்தம் கன்மம் பற்றி கூறுகிறது. இங்கு கன்மம் என்பது கருமம் என்பது




அதனால் அவன் அப்பலன்களுள் எஞ்சியவற்றை அனுபவிப்பதற்காகவே பின்னும் ஒரு பிறப்பை எடுக்க வேண்டிநேரிடும். அப்பிறப்பிலேயே அவன் முந்தைய பிறப்பிலே செய்த வினையின் பலன்களை அனுபவிப்பவன். அங்ஙனமே அனுபவிக்கும்போது வேறு பல வினைகள் புரிவான். அவ் வினைகளின் பலனை புரிவதற்காக பின்னும் பிறவிகள் எடுக்க நேரிடும். இவ்வாறு கன்மம் காரணமாக பிறப்பும், பிறப்பு காரணமாக கன்மமும் மாறிமாறி சங்கிலித் தொடர்போல வந்துகொண்டே இருக்கும்.

இதை எல்லா மதத்தவரும் ஏற்றுக் கொள்வது இல்லை. இந்த இடத்தில் கன்மத்தை பற்றி ஏனையோர் கொள்கை களையும் ஆராய்வது நன்று.

*உங்கள் மதங்களை மூன்று பிரிவினுள் அடக்கிவிடலாம்*

✱ இப்பிறப்பும் இப்பிறப்பில் உள்ள கன்மங்களும் உண்மை. முற் பிறப்பு என எதுவும் கிடையாது என கொள்வோர் ஒரு பிரிவினர் பழவினையை மறுக்கின்றனர்.

✱அதாவது முற்பிறப்பில் செய்த வினையை இரண்டாவது பிரிவினர் ஒப்புக் கொள்வர். செய்தவனை சென்று சேர செய்ய இறைவன் ஒருவன் இருந்தே தீர வேண்டும்.

✱ பல வினைகளை ஒப்புக் கொள்வது மட்டு மன்றி அறிவுள்ள பொருளுக்கு அன்பு, வல்லமை, பழவினைக்கு உண்டு என வாதிடுவோர்.

முதலாவது பிரிவினர் மேலைத்தேய நாட்டவர், இரண்டாவது பிரிவினர் இந்து சமயத்தவர், மூன்றாவது பிரிவினர் பௌத்தர், சமணர் ஆவார்.

பழவினை இல்லை எனில் நல்லவர் கள் துன்ப மடையவும் தீயவர்கள் இன்பமடைய வேண்டிய அவசியம் இராது இதை விட ஒரு பிரசவ ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை கொழு கொழு என்றும் இன்னொன்று நோஞ்சலாகவும் உள்ளது. ஒன்று ஏழைப் பெண்ணுக்கும் இன்னொன்று பணக்காரப் பெண்ணுக்கும் பிறக்கின்றது. கடவுள் கூட கொஞ்சம் கருணை அற்றவரா? ஏன் இப்படி படைக்கிறான். பூர்வஜென்ம புண்ணிய பாவத்தை ஒட்டியே புனர்ஜென்மம் அமைகிறது என்ற முடிவுக்கு வரலாம். இதையே சைவ சித்தாந்திகள் பழவினை தீர்மானிப்பது என கூறினர். பல பிறவி பல உடல்கள் எடுத்து தான் செய்த வினைக்கு ஆன்மா அனுபவிப்பதுதாக மாணிக்க வாசகர் "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி பல்விருகமாகி..." இன்பதுன்ப முதுமை இறப்பு என்பது முன்பு செய்த கன்மத்தின் கருவில் இருந்தே உருவாக்கம் பெற்றது இதை சித்தியார் "பேறுழவு இன்பமோடு பிணி மூப்பு சாக்காடு எனும் ஆறும் முன் கருவூட்டப்பட்ட விதி அனுபவித்தால்" என்னும் அடிகள் காட்டுகிறது. (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு என்பது என்ன

தமிழ் மக்கள் மரபில் புதுமணத் தம்பதிகளை வாழ்த்தும் போது 16 பேறும் பெற் றுச் சிறப்புற வாழ வேண்டுமென வாழ்த் துகிறோம். அப் 16 பேறுகளில் அழகையும் ஒரு பேறாகக் கொண்டனர் ஆன்றோர். அழகுக்கு-எவ்வளவு சிறப்பான இடம் கொடுக் கப்படுகின்றது என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா? புறப் பொருள்கள் எவற்றிலும் வனப்பைத் தேடுகின்ற மனம். இயற்கைக் காட்சி, தெய்வ வடிவம், ஓவியம், சிற்பம், ஆண், பெண் யவ்வனம், கட்டடம், விற்பனைப் பொருள்கள் என்று அதிலும் ஒரு அழகையும் அலங்காரத்தையும் காணத் துடிக்கிறது உள்ளம்.

அழகு அழகு என்கிறோம். ஆனால் அழகு என்பதுதான் என்ன என்ற கேள் விக் குப் பதில் கூற முடிகிறதா? என்ப தைப் பார்ப்போம். அழகு என்ற சொல்லுக்குள் இரு பொருள்கள் இணைந்து உண்டாகும் ஒரு அலையே (உணர்வே) அழகு என லாம். புறப்பொருளும் உயிரினங்களின் மூளை அல்லது மனமும் சம்பந்தப்படு வதை ஆழ்ந்த சிந்தனையால் தெளிவு பெறலாம். புறப்பொருளைக் காட்சி என்று எடுத்துக் கொண்டால் காட்சியை காண்பது கண் அல்லது கட்புலனாகும். யவ்வனத்தைக் காண்பது கட்புலனே தவிர வேறு புலன் அன்று. எனவே காட்சிக்கும் கண்ணுக்கும் இடையே தோன்றுவது அழகு அல்லது வனப்பு அல்லது யவ்வனம் ஆகும். காட்சியைக் கண் பார்த்ததும் செய்தி மூளைக்குச் செல்ல, மூளை செய்தியைப் பெற்று தேர்வு ஒன்றை நடத்தி தேர்வின் பெறுபேறாக ஒரு திருப்தியை அல்லது ஒருவித பூரிப்பான உணர்வை மின்னல் வேகத்தில் வெளியேற்றுகிறது. இந்த உணர்வே அழகு எனலாம். இதனை இன் னொரு முறையில் குறிப்பிடுவதாயின் காட்சிப்பொருளுக்கும் மனத்திற்கும் இடையே தொடர்பு ஏற்பட்டு உண்டாகும் உணர்வாகும். அழகு பற்றி இன்னும் ஆழமாக ஊன்றிச் சிந்திப்பதன் மூலம் அதன் உட்கிடக்கையில் ஒரு நிறைவை அல்லது பூரணத்துவத்தைப் பெறலாம் எனக் கருதுகிறேன்.

இயற்கைப் பொருள்களான சூரியன், சந்திரன், முகிற் கூட்டங்கள், ஆறு, கடல், மலை, தென்றல், தாவரங்கள், பூக்கள், மிருகங்கள் போன்றவற்றை இணைத்தும் தனித்தும் காட்சியாகப் பார்க்கும்போது தான் அழகு என்ற ஒப்பற்ற மகிழ்ச்சியான ஒரு உணர்வு, ஒரு திருப்தியை மனதிற்குத் தரு கிறது. எந்தமொழி இலக்கியத்திலும் கலாரசனையைக் கூட்டுவதற்கு அழகு ணர்வைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் கவிஞர்கள். கவரும் பொருளும் கவரப்படும் பொருளும் அழகின் ஒரு அம்சமான (கவர்ச்சி) கவரும் பொருள், கவர்வதற்கான சில தன்மைகளைக் கொண்டிருத்தலை நாம் விடயத்தை ஊடுருவிப் பார்க்கும்போது புலனாகும். வடிவம், அளவு, பொருத்தம், வர்ணம் முதலியவற்றைக் கொண்ட காட்சிப் பொருள்களே மன உணர்வைத் தூண்டுகின்றது. அதன் விளைவாக அப் பொருள் உள்ளத்தை ஈர்க்கின்றது. தோகையை விரித்தாடும் மயிலாக இருக்கட்டும், துள்ளியோடும் வாலிப கலைமானாக இருக்கட்டும் இவற்றைப் பார்க்கும்போது உள்ளம் குளிர்கின்றது. அழகுப் பொருள் களை இயற்கை படைக்கும்போதும் கவர் சியையும், கவரப்படும் செயல் முறையை யும் வெறுமையாகப் பயன் அற்றதாகப் படைக்கவில்லை என்பதைக் கூர்ந்து சிந் திப்பதன் மூலம் சில துலங்கலை உணர முடியும். வண்ண வண்ணப் பூக்கள் ஏன் மலர்கிறது என்பதை அறிவியல் நோக்கிப் பார்க்க முனைவோம். அப்போது தான் இயற்கையின் உள்நோக்கத்தை எம்மால் புரிந்துகொள்ள முடியும். நிறப்பூக்கள் பகல் பொழுதில் தான் மலரும். இவை அழ காக இருப்பதால் பூச்சிகள், சிறிய குரு விகள் (தேன்குருவி), தேனீக்கள் போன்ற உயிரினங்கள் மலரைத் தேடி மலர்கள் மேலேயே உட்கார்ந்து தேனைக் குடிக்கி றது. இந்நிகழ்வால் குறிப்பிட்ட உயிரினங் களின் அசைவால் மகரந்த சேர்க்கை நடைபெறுவதற்கு வழி பிறக்கிறது. இதன் பயனாக அத்தாவரத்தின் இனவிருத்தி அல்லது சந்ததி விருத்தி தொடர் சங்கிலி யாவதற்கு வகை செய்யப்படுகிறது. அத் தோடு வண்ண வண்ண நிறங்களும் பொருத்தமான ஒழுங்கமைப்பும் உயிரினங்களைக் கவர்வதில் ஒரு பொதுத் தன்மை (இயல்பு) அமைவது இயற்கையின் பொதுவிதி போலும்.

ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் இனச்சேர்க்கைக்குக் குறிப்பிட்ட காலம் உண்டு. அக்காலங்களில் அவ் ஜீவன்கள் மிகமிக வனப்பான உடலையும் அழகான நிறங்களையும் கொண்டிருக்கும். பெரும்பாலும் ஆண் கவரும் பொருளாகவும் கவரப்படும் பொருள் பெண்ணாகவும் இருக்கும். சில வகை ஓணான்கள் இனச் சேர்க்கைக் காலத்தில் அதன் புறத்தோல் நிறமாற்றத்திற்கு உட்படுகிறது. இம்மாற்றத்தால் பெண் ஓணான் கவரப்படும் உடற் சேர்க்கையில் ஈடுபடுகிறது.

இப்போது எமக்கு ஒன்றைப் புரிய வைக்கிறது இயற்கை. அதாவது அழகையும், கவர்ச்சியையும் சில நோக்கங்களுக் காகப் பயன்படுத்துகிறது. இங்கே உயிரி னங்களின் காம உணர்வைத் தூண்டி கரு உண்டாவதற்கு பாதை சமைத்துக் கொடுக் கிறது இயற்கை. இதேபோன்று அழகிய நிறமும், மத மதப்பும் கொண்ட பழங்களை மனிதர்களோ, மிருகங்களோ, பறவைகளோ கண்ணால் காணும்போது ஈர்க்கப்பட்டு அப்பழங்களைப் புசிப்பதற்காகப் பறித்து உண்ணக்கூடிய பாகத்தை உண்டு அதன் விதை களை எறிந்து விடுகின்றன. இச்செயல் முறையால் விதை பரம்பலுக்கு ஏதுவாகிறது. எனவே இயற்கை அழகைப் பயன்படுத்தித் தன் புல நோக்களை நிறைவு செய்கிறது. அழகு காட்சிப் பொருளாக மட்டு மல்ல உலக இயக்கத்திற்கும் உறுதுணை யாகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இயற்கை தனது பணியைச் செவ் வனே ஆற்றும் அதேநேரம் மனிதனும் தன் கைவண்ணத்தைக் காட்டத் தவறவில்லை. இயற்கை உயிரினங்களுக்குள்ளேயே அழகையும் கவர்ச்சியையும் ஏற்படுத்தி இனவிருத்தி செய்யும் நோக்கத்தைப் பூர்த்தி செய்கிறதோ அதே பாணியில் மனிதனும் தன் நுண்ணறிவினால் தமது பல நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றான். இயற்கை அழகைப் பார்த்த மனிதன் அத னைப் பிரதி எடுப்பது போன்று ஓவிய மாக வும் சிற்பமாகவும் படைத்து வருகின்றான். ஓவியத்தையும் சிற்பத்தையும் மதநோக் கத்திற்காகவும் அரசியல் நோக்கத்திற் காககவும் வியாபாரத்தை விஸ்தரிப்பதற் காகவும் பிரயோகிக்கின்றான் மனிதன். மனிதனுடைய உணர்வுக்கும் ஈர்ப்புக்கும் ஏற்ற வகையில் காட்சிப் புலத்தை அமைத்து அழக்குக்கு அழகு சேர்க்கிறான் மனிதன்.

இயற்கைக் காட்சியாயினும் சரி செயற் கைக் காட்சியாயினும் சரி காட்சியும் மன மும் இணைத்து வெளிவரும் அல்லது எழும் உணர்வே அழகாகும். எனவே அழகு என்பது கட்புலக் கவர் உணர்வேயாகும்.

**சி.அருணகிரிநாதன்.**

---

**திருமதி குமுதா உமாகாந்தன் நல்லூர்.**

னையும் வெளியிட்டு வைத்துள்ளமை இவரது சேவையைப்பறைசாற்றி நிற்கின்றன.

ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முதல்தரக் கலைஞரான இவர் அவற்றில் பல இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். பல்லாயிரக்கணக்கான இசைநிகழ்ச்சிகளை இசை விழாக்கள், ஆலயங்கள், கலாசார நிகழ்வுகள், தியாகராஜ உற்சவம், திருவிழாக்கால தெய்வீக இசை அரங்குகள் எனப்பல்வேறு இடங்களிலும் நிகழ்த்திய இவர் ஸ்வரராக லயவிநோதசுரபி, கலைச்செம்மல், கலாபூஷணம், ஆளுநர் விருது எனப்பலபட்டங்களையும், விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றமை அவரது இசைக்குக் கிடைத்த பரிசுகளாகும். இவ்வாறு மக்களின் மனங்களில் இடம் பிடித்தது மட்டுமன்றி லூர்து இருதய ரோசா,பத்தினியம்மா ஆகிய இருவரையும் கரம்பிடித்த இவர் ஒரு மகள், இருமகன்கள் என மூன்று புதல்வர்களை கல்வியில் சிறப்பாக்கி நல்லதொரு தந்தையாகவும் திகழ்ந்தார், நல்லதொரு தந்தையாக, நல்லாசிரியனாக, சிறந்த கலைஞனாக, சிறந்த பண்பாளனாகத் திகழ்ந்த இவரது இழப் பென்பது அவரது குடும்பத்தினரிற்கும், அவர்தம் மாணவர்களுக்கும் மட்டுமன்றி இசை உலகம் முழுவதற்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

---

# வீரமணி ஐயரின் நாட்டிய நாடகங்கள் பற்றி...

மனிதவாழ்விலே தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கைச் சரித்திரம் உள்ளது. அதனைத் தனது சந்ததியினரின் அறிவிற்காகவும், தேடல்களுக்காகவும் வித்திட்டுச் சென்ற பெருமை ஒருசிலருக்கே கிடைக்கும். அத்தகைய பெருமை பெற்ற சிலரில் இயல் இசை நாட்டிய (நாடக)மேதை இனுவில் சிம்மஸ்ரீ ம.த.ந.வீரமணி ஐயாவும் ஒருவர். அவரது கலைப்பணிகள் என்று பார்க்கும் போது பல பரிமாணங்களில், பல வகைகளில் ஆராயக் கூடியதாகவும் அமையும். உதாரணமாக ஐயரது இசைப்பணி, நடனப்பணி, சமயப்பணி,சமூகப்பணி என்றும் நோக்கலாம். அதுமட்டுமன்றி ஐயரின் கீர்த்தனைப் பாக்கள், ஐயரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் சிறப்புக்கள், ஐயரின் ஆசிரியவாண்மை, ஐயரின் ஆற்றுத்திறன், சிறந்த கவியாளன், நாட்டிய உருப்படிகளின் ஸாஹித்திய கர்த்தா எனப் பல சிறப்புக்களினூடாக ஐயரின் சேவைகளை அறியலாம். அந்தவகையில் ஐயர் அவர்களின் நாட்டிய நாடக ஸாஹித்தியங்களின் சிறப்புக்களை இக் கட்டுரையினூடாக நோக்கலாம்.

ஐயர் அவர்களின் ஆழ்மனக் கலைப்பசிக்குத் தீனிபோட்டு அதனைச் செழிப்பாக்கி வளர்த்த பெருமை கலாஷேத்திரத்திற்கும் அதன் நிறுவுநரும் ஐயாவின் மதிப்பிற்குரிய நாட்டிய குருவுமான ருக்குமணிதேவி அருண்டேலும், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, கௌரியம்மாளும் மற்றும் அவரது கலாஷேத்திர ஆசான்களையே சாரும். அந்தவகையில் ஐயர் அவர்கள் தன் நாட்டிய நாடக உருவாக்கத்திற்கும் சரி, நாட்டிய அமைப்பு முறைக்கும் சரி, ஆற்றுகை வெளிப்பாட்டிற்கும் சரி தனது Rolemodel ஆக தனது நாட்டியக் குருவான ருக்குமணிதேவியையே பின்பற்றியிருந்தார். அவரது ஆற்றுகையும் அமைப்பு முறையும் கலாஷேத்திராவிலே பெற்றுக்கொண்ட பயிற்சியின் ஊடாகத் தனக்கெனத் தனிப்பாணியைக் கொண்டு எழுதத் தொடங்கினார். நாட்டிய நாடகம் என்பது ஆரம்பக் காலங்களிலிருந்தே கிராமியக் கூத்துக்களினூடாக வளர்ச்சி கண்டு வந்தது. என்று கூறலாம். அதாவது கிராமிய ஆடல்கள் ஊடாக புராணக்கதை கூறும் மரபு , இசை நாடகங்களின் தோற்றப்பாடும், வளர்ச்சியும் என்பவற்றோடு இணைந்ததாக ஒரு புராண, இதிகாச, அல்லது சமூகக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு பரத நாட்டியத்தின் ஊடாக நாடகப்பாங்கில் வெளிப்படுத்துவது நாட்டிய நாடகம் எனப்படுகிறது. கதகளி, யக்ஷகானம், பாகவதமேளா மற்றும் மேலைத் தேச பலே என்பனவும் தமக்குரிய தனித்தனி வடிவில் நாட்டிய நாடகங்களாகக் கொண்டிருந்தாலும் ஒவ்வொன்றும் பெரும்பாலும் ஒரே கருவைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று பரதநாட்டியமும், அபிநயங்கள், ஆடைகள், ஒப்பனைகள் இவையூடாக புராணக் கதைகளை அபிநயத்தல் நாட்டிய நாடகமாகிறது.

நாட்டிய நாடகம் ஒன்றை நாட்டிய அமைப்பு செய்பவருக்கு நாட்டிய அறிவு பெரிதும் விரும்பப்படுகிறது; தேவைப்படுகிறது. ஆனால் ஒரு நாட்டிய நாடகத்தை இயற்றும் ஸாகித்திய கர்த்தாவிற்கு (Composer) இசையறிவு, இலக்கியப்புலமை, நாட்டியநுட்பம், நவரஸ விளக்கம், அரங்கம்-காட்சி பற்றிய அரங்கியல் அறிவு, கவிதையாற்றல், எல்லாவற்றிற்கும் மேலாக இதிகாஸ புராணங்களின் கதைகள் பற்றிய அறிவு, சமய அறிவு எனப் பலவும் வேண்டப்படுகிறது. இவை யாவற்றையும் நன்கு அறிந்த ஒருவராலேயே சிறந்த நாட்டிய நாடகத்தினைப் படைக்கவும், நாட்டியம் அமைக்கவும், மேடையேற்றவும் முடியும். அந்த வகையில் ஐயர் அவர்களின் பல்துறை ஆற்றலும், மேதா விலாசத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது. ஐயர் அவர்கள் 1950இலிருந்து 200இற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை உருவாக்கியுள்ளார். அவற்றில் பல நூலுருப் பெற்றன. சில எழுத்துருவில் ஏட்டு வடிவிலேயே உள்ளன. இலங்கையில் வாழும், மறைந்த பல நாட்டிய ஆசிரியர்களால் ஐயர் அவர்களின் நாட்டிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. சில ஐயரினாலேயே நாட்டியமைப்புச் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டன. அந்த வகையில் ஐயரின் நாட்டிய நாடகங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.


"திருமயிலைக் குறவஞ்சி,அஷ்டலஷ்மி, 63 நாயன்மார் சரித்திரம், ஹரிச்சந்திரா, ஈழக்குறவஞ்சி, திருஞானசம்பந்தர், திருவாசகம் தந்த மணிவாசகர், சத்யம்-சிவம்-சுந்தரம், கண்ணப்பர் குறவஞ்சி, நல்லைக்கந்தன் குறவஞ்சி, விஸ்வரூபதரிசனம் , ஸ்ரீ கதிர்காமக் கந்தன் குறவஞ்சி, கலாகல்பனா, யேசுபிறந்தார், பக்தபிரகலாதன், நந்தலாலா, அர்ஜுனன் தவம், பீஷ்மர், தாய்மை, சுபத்திரா பரிணயம், பண்டாரவன்னியன், சௌந்தர்ய லஹரியம், கர்ணன், விபுலானந்தர், ஸ்ரீகிருஸ்ணாவதாரம், நவரச ராமாயணம், ராதையின் நெஞ்சம், தசாவதாரம், திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி, திருமலை, வில்லூன்றிக்கந்தன் குறவஞ்சி, சரஸ்வதி கடாட்ஷம், ஸ்கந்தல்லா, குருதத்துவம் என்பவற்றை சிலவாகக் கூறலாம். இவை யாவும் நூலுருப் பெற்றுள்ளவையே.

## நாட்டிய நாடக சாஹித்திய சிறப்பியல்புகள்

மகாவித்துவானின் நாட்டிய நாடக ஸாகித்தியங்களிலே இசையின்பம், இயல்செழுமை, நாட்டிய வடிவம், கிராமிய மணம், இராகப் பொருத்தம், ரஸப் பொருத்தம், இறைவன் புகழ் பக்தியின் பெருமை, நாட்டு வளம், உணர்ச்சியின் பெருக்கு, இறையடியார்களின் பெருமை, தோத்திரப் பாடல்கள் என்பவற்றையும் அவற்றினூடாகப் பல இசை, நாட்டிய உருப்படிகளையும் காண்கின்றோம். வித்துவானின் நாட்டிய நாடகங்கள் வெறும் 4 வரிப் பாடல்களாகவோ அல்லது 8 வரிக் கவிதையாகவோ, கண்டிகையாகவோ அமைவதில்லை. ஒவ்வொன்றும் ஒரு இசை நாட்டிய உருப்படிகளாகவே காணலாம். தேவைப்படும் இடத்தில் இவற்றைத் தனித்தும் உருப்படியாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பும் கிடைக்கிறது. (வளரும்)



நாட்டியக் கலாவித்தகர் உ.உமாமகேஸ்வரி, உடுவில் தெற்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

## FUCULTY OF MEDICINE

Senior Professor/ Professor in Anatomy/ Physiology/ Community Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Medicine/ Paediatrics/ Surgery/ Obstetrics & Gynaecology

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Anatomy/ Biochemistry/ Physiology/ Community Medicine/ Pathology/ Microbiology/ parasitology/ Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Medicine/ Sugery / Paediatrics/Obstetrics /Gynaecology / Medical Education/ Psychology.

Endowment Chair in Oncology/ Orthopedic Surgery.

Clinical Psychologist

Scientific Assistant in Biochemistry/ Forensic Medicine

### Notes:

1. Application for Permanant Position as well as contract appointment will be entertained From medically qualified Persons.
2. Application from candidates with BDS degree shall be considered for the posts in anatomy, Physiology, Microbiology and Bio chemistry.
3. Application from candidates with BVSC degree can also be considered for the posts in Bio Chemistry .
4. Preference will be given to those who have MBBS degree with Post graduate qualification in medical Administration/Family Medicine for the posts in community Medicine.
5. Applications From candidates with BVSC degree can also be considered for the Posts in Anatomy, Physiology and Microbiology Under Category 4 of the scheme of recruitment.
6. Application from candidates with BA (Special degree in Psychol ogy) degree can also be considered for the posts in Psychology.
7. Application from candidates with the following qualifications shall be considered for the post of clinical Psychologist:
   a) A. Ph.D in Clinical psychology or equivalent postgraduate qualifications in that discipline
   b) First or second class (upper dilvision ) in honours degree in psychology, sociology , Anthropology or philosophy with at least one year experience in teaching/ research/ professional work/ postgraduate studies.

   Applicants under category (b) will be considered only if there are no suitable applicants under category (a) An applicant selected under category (b) would be required to undergo training in clinical Psychology and obtain suitable postgraduate qualifications.

### PARA MEDICAL DEGREE PROGRAMME

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Pharmacy/Medical laboratory technology.

Note: Applicants with special degree in related fields with post graduate degree or professional training in the relevant field will also be considered under category III / IV of the scheme of recrutiment for the post of lecturer (probationary)

### FACULTY OF ARTS

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in law/ sociology/Medical Sociology.

Note: Applications from the candidates who have special degree in Sociology with Medical background will be entertained for the post of lecturer (Probationary) in medical Sociology.

### VAVUNIYA CAMPUS

#### Faculty of Applied Science

Senior Lecturer Grade I/ Senior Lecturer GradeII / Lecturer (Probationary) in Mathematics & Computing / Environmental Science / Zoology.

Instructor in Computer Technology Gr.II.

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs 57,755 - 11x900 - 67,655/-p.m |
| Professor | Rs.50, 905 - 10x850 - 61,955/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.42, 650 - 7x800 - 48,250/-p.m |
| Seniour Lecturer Gr.II | Rs. 37, 650 - 11x700 - 45,350/-p.m |
| Lecturer (prabationary) | Rs. 26,900 - 10x585 - 32,750/-pm |
| Clinical Psychologist | Rs. 26.900 - 10x585 - 32,750/-pm |
| Scientific Assitant | Rs. 22,595 - 10x280 - 25,395/-pm |
| Instructor in Computer Technology Gr.II | Rs.25,145-3x585-26,900(EB)28,655-13x585-36,260 p.m |

Note: In addition to the above salary, the following allownces will also be paid:
I. An academic allowance equivalent to 25% of the basic salary (for permanent academic posts)
II. Cost of living allowance of Rs. 4,500/-p.m

#### Statutory benefits

I. Sabbatical leave entitlement for the holder of the post of senior lecturer Gr.II and above.
II. Membership in Universites Provident fund and pension scheme in the University system.
III. Gratuity Payments
IV. Employees Trust Fund benefits
V. Free Medical Services

#### Closing date

**Post of Senior Professor/ Professor - 08.04.2010**
**Other Posts - 24.02.2010**

Applications and other document for the post of senior professor/professor shall be sent to the Vice-Chancellor with a covering letter, Applications for the other posts shall be sent to the senior Assistant Registar /Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those Who wish to obtain application forms by post are requested to send a money Order/Postel Order drawn in favour of the Bursar. University of Jaffna together with a self- addressed stamped envelope 23x10 cm in size.

Those who wish to apply more than one past should apply in seperate forms.

Applicants from the University System / Government Department/ Corporations and Statutory Board should channel their applications through the head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation.Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA SRI LANKA.**
**06.01.2010.**

(சி/563936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைப்புக்கிடமாகும்........

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் தேர்தல் சட்டகோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக தேர்தல் சட்டத்துக்கு மதிப்பளித்து கௌரவித்து எவரொருவரும் செயற்படுகின்றவர்களாகத் தென்படவில்லையென்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### மிகச் சாதாரணமாகவே மீறப்படும் குற்றங்கள்

தேர்தல் சட்டத்துக்கு அமைய, மத ரீதியான அல்லது சமுதாய நலனோடு சம்பந்தப்படும் கருமம் ஒன்று தவிர்ந்த தேர்தலோடு சம்பந்தப்படும் அலங்கார ஊர்வலங்களை ஒழுங்கு செய்தல், அவற்றை நடத்திச் செல்லல், வாகன அணி ஊர்வலமொன்றை ஒழுங்கு செய்தல், ஊர்வலமாக ஓட்டிச் செல்லல், அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளல் என்பன குற்றங்களாகின்றன.

அது போன்றே, பிரதான வீதியொன்றில் அல்லது வீதியூடாக அல்லது பொதுவான அல்லது தனியாருக்குச் சொந்தமான இடமொன்றில் துண்டுப் பிரசுரங்கள், காட்சிப்படுத்தும் பிரசுரங்கள், அறிவிப்புப் பிரசுரங்கள், சித்திரங்கள், வேட்பாளரொருவரது படம், சின்னமொன்று, கொடியொன்று அல்லது பதாதையொன்று காட்சிக்கு வைக்கப்படுவதும் குற்றமாகிறது.

இவை பிடியாணையின்றியே கைது செய்யப்படக்கூடிய குற்றங்களாகும். அத்தோடு சிறைவாசத்துக்கும் கூட அத்தவறு போதுமானதாகும்.

இந்தச் சட்டங்களை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இருபத்திரண்டு வேட்பாளர்களில் எத்தனைப்பேர் பேணிக் காக்கின்றனர் என்பதை இத்தினங்களில் தெருவீதிகள் பயணமார்க்கங்களின் பயணிக்கும் எவரொருவரும் கண்கூடாகக் கண்டுகொள்ள முடியும். அதுபோன்றே வானுயரத்துக்கு நிர்மாணிக் கப்பட்டிருக்கும் வேட்பாளர்களின் பிரமாண்டமான உருவப்படங்களைக் ('கட்-அவுட்'களை) கண்டும்காணாதது போன்று நடந்துகொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தாராளமாகவே காணமுடிகிறது.

### உத்தரவும் உதாசீனமும்

இவ்வளவுக்கும், தேர்தல் சட்டத்தை உரியவகையில் நடைமுறைப்படுத்துமாறு, இலங்கையின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபரான மஹிந்த பாலசூரிய ஏற்கனவே கடும் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்ன தெரிவிக்கிறார்.

இந்த உத்தரவுக்கு அமைய, காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அனைத்து விதமான தேர்தல் பிரசார அறிவிப்புகளையும் டிசம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் அகற்றிக்கொள்ளுமாறு இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தினதும் அமைப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இவற்றுள் எதுவொன்றும் இன்றுவரைசெயற்படுத்தப்பட் டிருப்பதாகத் தென்படவில்லை.

பொலிஸ்மா அதிபரால் தேர்தல் சட்டத்தை அச்சொட்டாக நிறைவேற்றுமாறு இந்நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், தேர்தலோடு சம்பந்தப்படும் சுவரொட்டிகள் மற்றும் 'கட் - அவுட்'கள் இன்னமும் சுதந்திரமாகக் காட்சிப்படுத்தப்பட்டு வருவதேன்? அவை நாடு முழுவதிலும் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதேன்? பொலிஸ்மா அதிபரின் உத்தரவுகளைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உதாசீனம் செய்கிறார்களா?

இதற்கான பதில்களும் கூடப் பொலிஸ்மா அதிபரிடத்திலே உள்ளது.

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சின்னராசா இராசையா**
(சித்தப்பா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07*10*1958 | 08*01*2006 |

முகம் மறைந்து போய் நான்கு
ஆண்டுகள் ஆனபோதும்
அகம் விட்டு அகலாத நினைவுகளில்
அழுகின்றோம் சித்தப்பா.....
அன்பான அரவணைப்பும்
அழகான புன்சிரிப்பும்
ஆழி உள்ள காலம் வரை அகலாது
என் மனதில் சித்தப்பா.

பிரான்ஸ். (சி/563948) சி.செந்தூரி-நண்பன்.

# யுத்தத்துக்குப் பயந்து வெளிநாடு சென்ற கோத்தபாய வெற்றியைப் பற்றிப் பேசுகின்றமை வேடிக்கையே



## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சி யில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரட்ணவின் காலில் விழுந்து- யுத்தத்துக்கு பயந்து வெளி நாட்டுக்குத் தப்பி ஓடிச் சென்ற கோத்தபாய ராஜபக்ஷ இன்று யுத்த வெற்றியைப் பற்றிப் பேசுகின்றமை வேடிக்கையாக உள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகா கல்முனையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையைப் போல தமது வாக்குறுதிகள் பொய்யானவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் எனது தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன். நான் இராணுவத் தளபதியாக இருந்தபோது வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டேன். அதேபோல எனது தேர்தல் வாக்குறுதிகளும் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

பந்தக்காரர்களும், மோசடிக்காரர்களும் இந்நாட்டில் மஹிந்தவின் ஆட்சியில் மலிந்து விட்டனர். மஹிந்த நாட்டை அபிவிருத்தி செய்ய தூர நோக்குடன் திட்டமிட்டு எதையுமே மேற்கொள்ளவில்லை, பொலிஸ் சேவையிலும் அரசியலைக் கொண்டு வர முயற்சித்தனர். இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி அமைக்கவே மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தேர்தலில் களம் இறங்கியுள்ளேன். இராணுவத்தில் தொடர்ந்தும் பணியாற்றக்கூடிய வாய்ப்பு இருந்தும் அதை விட்டுக் கொடுத்துள்ளேன். எதிர்வரும் 26 ஆம் திகதி மஹிந்த கம்பனியை வீட்டுக்கு அனுப்ப நீங்கள் அனைவரும் ஒத்துழைத்தால் அந்த முயற்சியில் நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்.

எங்களால் ஏற்படுத்தப்பட்ட யுத்த வெற்றியை வைத்துக் கொண்டு கட் - அவுட்டுகளை அடிக்க இவர்களுக்கு வெட்கம் இல்லையா? என்று கேட்கின்றேன். மஹிந்த கம்பனியி னர் மன்னர்களாக இருக்க மக்கள் ஏழைகளாக இருக்கும் நிலைக்கு முடிவு கட்டும் தருணம் வந்து விட்டது.

ரணில், மனோகணேசன், ஹக்கீம், விஜித ஹேரத் என தற்போது மேடையில் அமர்ந்துள்ள ஊழல்களற்ற கூட்டணியுடன் ஒன்று சேர உங்களையும் அழைக்கின்றேன்.

ஊழல்களை ஒழிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள கடசிச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த என்னுடன் இணையுங்கள். உங்கள் வாக்குகள் மூலம் இதனைச் சாதிக்க என்னால் முடியும். (சி)




# முஸ்லிம் சமுகத்தினருக்கு பயன்கிடைக்க ஜனாதிபதியை ஆதரிப்பது அவசியம்

## அமைச்சர் பைஸர் முஸ்தபா கூறுகிறார்

கொழும்பு, ஜன.8

"அரசை கறிவேப்பிலையாகப் பயன்படுத்தி அவ்வப்போது மட்டும் பயன்பெறலாம் என நினைப்பதை எந்த ஒரு அரசும் விரும்பாது. மஹிந்த ராஜபக்ஷவின் அரசை நிரந்தரமாக நீங்கள் ஆதரிக்கவேண்டும். அதுவே முஸ்லிம் சமூகத்திற்குப் பயனுள்ளதாகும்."

- இவ்வாறு சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

அண்மையில் நுகவெல, எண்டருதென்ன முஸ்லிம் கிராமத்திற்குக் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ் வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"இந்நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது என்றும், முஸ்லிம்கள் சவுதி அரேபியா செல்லவேண்டும் என்றும், தமிழர்கள் தமிழ் நாட்டிற்குச் செல்லவேண்டும்" - என்று கூறியவர்தான் ஜெனரல் சரத் பொன்சேகா. இவ்வாறு சிறுபான்மை மக்களை இழிவுப்படுத்தியவருக்கு எப்படி தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களிப்பது?

தாம் கூறிய கருத்தை அப்படியல்ல, இப்படி என்றும் அவர் மாற்றிக் கூறலாம். அவைகள் உண்மையல்ல. ஒருவரது உள்ளத்தில் அல்லது அடிமனதில் உள்ளவைகளே வெளியாகின்றன. பேச்சு அடிக்கடி மாறலாம். ஆனால், உள்ளத்தில் இருக்கும் அடிப்படை எண்ணம் ஒருபோதும் மாறாது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் அடிமனதில் உள்ள சிறுபான்மை விரோத உணர்வை மாற்ற முடியாது. அது மாறாது யானைக்கு வாக்களித்து எங்கள் கிராமத்திற்கு ஏதும் நடந்ததா? தொடர்ந்தும் நீங்கள் யானையை ஆதரிப்பதில் பயன் ஏதும் இல்லை.

சிறுபிள்ளைக்கு சீனி உருண்டை கொடுப்பது போல் சிலர் உங்களிடம் வந்து கூரைத் தகடு தருவார்கள், அரிசி மூடைகளை அனுப்பி வைப்பார்கள். இப்படியான சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளில் நீங்கள் ஏமாறக்கூடாது.

அதேநேரம் அரசிடமிருந்து தேவைகளை கேட்டு நிறைவேற்றிவிட்டு வேறு ஒருவருக்கு வாக்களிப்பதை அரசு ஒருபோதும் விரும்பாது. எனவே, உங்களுக்கு சேவை வேண்டுமா ஜனாதிபதியை ஆதரியுங்கள்.- என்றார். (சி)

# அமைச்சர் ஆறுமுகன் கூறுவதை கேட்பதற்கு பெருந்தோட்ட மக்கள் தயாராக இல்லை

## இ.தொ.க. முன்னணி செயலர் சாடல்

கொழும்பு, ஜன. 8

"அமைச்சர் ஆறு முகன் தொண்டமான் கூறுவதைக் கேட் பதற்கு இப்போது பெருந்தோட்டத்துறை மக்கள் ஆயுத்தமாக இல்லை. நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவையே ஆதரித்து, அவரை வெற்றி பெறச் செய்வர். இதன் மூலமே அவர்களின் வாழ்வு சுபீட்சமாக மாறும்."

- இவ்வாறு இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

பதுளை சேனநாயக்க மைதானத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

சம்பள உயர்வு விடயத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் படுமோசமாக ஏமாற்றப்பட்டுள்ளனர். தினச் சம்பளம் 405 ரூபா என்று கூறப்பட்டபோதிலும், அச்சம்பளம் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைப்பதில்லை. கிடைக்கும் சம்பளத்தில் வாழ்க்கையை நடத்த முடியாமல், தொழிலாளர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர். தற்போதைய வாழ்க்கைச் செலவு உயர்வை தொழிலாளர்களினால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் அவர்களின் மேம்பாடு விடயங்கள் குறித்து, ஜனாதிபதியை நேரடியாகத் தலையிடுமாறு, என்னால் விடுக்கப்பட்ட கோரிக்கை செவிசாய்க்கப்படாத நிலையிலேயே ஜனாதிபதி ஆலோசகர் பதவியையும் தூக்கி எறிந்துவிட்டு, ஆளும் கட்சியிலிருந்து வெளியேறினேன். ஆனால், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானோ, ஜனாதிபதிக்கு நிபந்தனையின்றி ஆதரவளிப்பதாகக் கூறுகின்றார். இக்கூற்று வேடிக்கையாகவே இருக்கிறது.

இ.தொ.காவினர் முன்வைக்கும் கோரிக்கைகளை, தோட்டத் தொழிலாளர்கள் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில், ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கே, தோட்டத்தொழிலாளர்கள் அனைவரும் சுதந்திரமாக வாக்களிக்கவேண்டும். இதன்மூலமே, எமது சமூகத்தின் எதிர்காலத்தை வளமாக்கக் கூடியதாக இருக்கும் - எனறார். (சி)

# 65 வீத பெரும்பான்மையில் மஹிந்தவின் வெற்றி உறுதி

## அமைச்சர் மைத்திரிபால நம்பிக்கை



கொழும்பு, ஜன. 8

அரசு தற்போது மேற்கொண்டிருக்கும் ஆய்வின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 65 வீதமான பெரும்பான்மையில் வெற்றியைப் பெறுவார் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கூறினார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இந்நாட்டு மக்கள் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவிடம் நாட்டை ஒப்படைக்கத் தீர்மானித்துவிட்டனர். எதிர்பார்த்ததைவிட அதிக வெற்றியை மஹிந்த ராஜபக்ஷ பெறுவார்.

கிழக்கு முதல் தெற்குவரை நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின்போது 26 லட்சம் மேலதிக வாக்குகளை நாம் பெற்றோம். அந்த வாக்குகளில் எந்தவித மாற்றும் ஏற்படாது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கிலும் மத்திய மாகாணத்திலும் நாம் கடும் தோல்வியைச் சந்தித்தோம். இம்முறை நிலைமை மாறிவிட்டது.

பொன்சேகாவால் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. அவர் ஜனநாயக ஆட்சியைப் பற்றி யோசிக்கவில்லை. இராணுவ ஆட்சியே அவரது தலைக்குள் இருக்கின்றது.

நாடு முழுவதும் படையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளையே சரத்பொன்சேகா அவரது தேர்தல் வேலைகளுக்குப் பொறுப்பாக நியமித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ அப்படிச் செய்யவில்லை.

இந்தத் தேர்தல் தொடர்பாக நாம் மூன்று தடவைகள் ஆய்வு நடத்தியுள்ளோம். இறுதியாக நடத்திய ஆய்வின்படி 65 வீதத்தால் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவார் என்பது நிச்சயமாகிவிட்டது.

மங்கள சமரவீர கூறும் ஆய்வெல்லாம் பொய்யானவை. பொன்சேகா நிச்சயமாக வெற்றிபெற மாட்டார். அவருக்கு மக்கள் ஆதரவு இல்லை. இராணுவ ஆட்சியைக் கொண்டுவர இந்நாட்டு மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் - என்றார். (சி)

# தேசாபிமானியான பொன்சேகாவை தேசத்துரோகியாகக் காட்ட முனைப்பு

## மேல் மாகாண சபை உறுப்பினர் முஸம்மில் ஹாஜியார் சாடல்

கொழும்பு, ஜன.8

"ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவை நேற்று தேசாபிமானியாக வர்ணித்து பொன்னாடைகள் போர்த்தி கிரீடம் அணிவித்த மஹிந்த ராஜபக்ஷ அரசு இன்று அவரைத் தேசத்துரோகியாக மக்களிடம் காட்டமுற்படுகிறது. ஊழல்கள் நிறைந்த குடும்ப ஆட்சியை எதிர்த்து வெளியேறியதால் தான் அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு மேல் மாகாண சபை உறுப்பினரும், கொழும்பு மாவட்ட ஐ.தே. கட்சி அமைப்பாளருமான ஏ.ஜே.எம். முஸம்மில் ஹாஜியார் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 240 பேருக்கு சக்கர நாற்காலி விநியோகிக்கும் வைபவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. முஸம்மில் பவுண்டேஷன் இதனை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா கலந்துகொண்டார்.

இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய முஸ்லிம் ஹாஜியார் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவ நடவடிக்கைகளின்போது பயங்கரவாதிகளின் பல்வேறு தாக்குதல்களிலிருந்தும் தப்பியவர் பொன்சேகா இராணுவத் தளபதியாக நியமனம் பெற்று குறுகிய காலத்திற்குள் இராணுவத் தலைமையகத்தின்முன் நடைபெற்ற தற்தொலைத் தாக்குதலில் மயிரிழைப்பில் உயிர்தப்பியவர். அந்நேரத்தில் அவருக்கு இரண்டாவது வாழ்வை இறைவன் கொடுத்தான். அவர் நினைத்திருந்தால் அத்துடன் ஓய்வு பெற்றுக் கொண்டு குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேறி சுகபோக வாழ்வு வாழ்ந்திருக்கலாம். ஆனால், அதனை அவர் விரும்பவில்லை.

அவர் தனது இலட்சியப் பயணத்தைக் கைவிடவில்லை. தொடர்ந்தும் நாட்டுக்காகப் போராடினார். தேசத்திற்காக தன்னையே அர்ப்பணிக்க முன்வந்தார். அதனால் அச் சந்தர்ப்பத்திலேயே நாட்டு மக்களுக்கு இரண்டு வாக்குறுதிகளை வழங்கினார். ஒன்று யுத்தத்தை அடுத்த இராணுவத் தளபதியிடம் கையளிக்கப் போவதில்லை. மற்றையது 2009 ஆம் ஆண்டில் புலிகளின் தலைவர் பிரபாகரனை மாவீரர் தின உரையை நிகழ்த்த விடமாட்டேன் என்பவையாகும். இவ்விரு சவால்களையும் அவர் ஓய்வு பெறுவதற்குள் நிறைவேற்றிக் காட்டினார்.

நாட்டில் நடைபெற்றுவரும் ஊழலைத் தடுத்துநிறுத்தி நேர்மையான ஒருவரிடம் நாட்டின் எதிர்காலத்தைக் கையளிப்பதே தமது கட்சியின் எதிர்பார்ப்பாகும். (சி)

# நீதிமன்றக் கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு நிறைவேற்று அதிகார முறை பெரும் சவால்



## முன்னாள் நீதியரசர் கருத்து

கொழும்பு, ஜன. 8

நிறைவேற்று அதிகாரம், நீதிமன்ற கட்டமைப்பின் நடவடிக்கைகளுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நிறைவேற்று அதிகார முறைமையை கடுமையாகச் சாடியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் வகையில் அம்பாறையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

எரிபொருள் விலையைக் குறைக்குமாறு நீதிமன்று அரசுக்கு உத்தரவிட்டபோதும் அரசு அதனை நிறைவேற்றவில்லை. இதன்மூலம் நிறைவேற்று அதிகார முறைமை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடைஞ்சாக அமைந்திருந்தது.

இணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கை நீதிமன்றம் இரண்டாகப் பிரித்ததற்குக் காரணம் இலங்கை-இந்திய அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தங்களிலுள்ள சட்ட சிக்கல்களே காரணமாகும். இன்றைய நிலையில் இந்த இணைப்பை ஏற்படுத்துவதற்கு சாதகமான சூழல் உள்ளது" - என்றார்.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 22.12.2009 செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்த எங்கள் குடும்ப விளக்கு

**திருமதி யசிந்தா யோதீபன்**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (09.01.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
'நளினி', தஞ்சிட்டி,
அளவெட்டி வடக்கு.

(563962)



# விற்பனைப் பிரதிநிதி தேவை

**விளம்பரப் பொருள்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.**

**தகைமை: க.பொ.த (உ/த) சித்தி ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.**

தொடர்பு: **Jojeni Business Gifts**
071 9329522, 071 6123127
Fax: 011 2938818
E.mail: jojeni @ sltnet.lk

(93524)



**University of Jaffna, Srilanka**
**Faculty of Graduate Studies**

*Registration for Postgraduate Research Programmes*
*M.Phil & Ph .D - 2010/2011*

Applications are invited from qulified persons for enrollment to the Master of philosophy (M.Phil) and Doctor of Philosophy (Ph.D) Degree programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna.

Relevant information and prescribed application forms can be obtained form the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P.No : 021222 3608) on Production of a receipt in support of a payment of Rs:200/= to the University Account number 90501 at the people's Bank, University Branch, Thirunelvely or forwarding a money order of Rs. :200/= drawn in favour of "The Bursar, University of Jaffna". Requests by post should be accompanied by a self addressed envelope not less than 23x10 c.m in size affixing stamps to the value of Rs.15/=.

Duly completed appli cations should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies on or before 15th February 2010. Late and incomplete applications will not be considered.

**Registrar**
**05.01.2010**

(C/563947)



# சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
## பதவி வெற்றிடம்-தட்டெழுத்தாளர் (01)

பதவி:- தட்டெழுத்தாளர்
சம்பளக் குறியீடு:- 305/13
சம்பள அளவுத்திட்டம்:- (9950-85x10-90x10=11700/=)
வயது:- 18 முதல் 45 வரை
பால்:- ஆண்/பெண்

தகைமை:- கூட்டுறவுப் பணியாளர் 15-ஆவது சம்பளத்திட்டத்தில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் உட்பட தட்டெழுத்தாளர் பதவியில் 02வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 22.01.20101

குறிப்பு:- வயதெல்லையில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தாயாரித்துப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
"தலைவர்"
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
டச்சு வீதி, சாவகச்சேரி.

(சி/563958)



**காணி விற்பனைக்கு**

கொக்குவில் பொற்பதி வீதியில் கத்தோலிக்க தேவாலயம் அருகில் 3 பரப்பு 5.38 குளி விஸ்தீரணமான கிணறு, சுற்று மதிலுடன் அமைந்த காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-தொ.பே: 0779264353

(93531)


## விபத்தில் காயமடைந்த வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.8

சாவகச்சேரி தபால்நிலையச் சந்திக்கு அருகாமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சின்னத்துரை (வயது-80) என்பவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார். (50-ரி)

## தற்செயல் நிவாரணத்தை பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம், ஜன.8

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு தற்செயல் நிவாரணம் கோரி விண்ணப்பித்த சரசாலை தெற்கைச் சேர்ந்த நாகேஸ்வரன் தேவகாந்தன் என்பவருக்கான கொடுப்பனவு பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளது.

குறித்த பயனாளி எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தந்து கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (50-207)

## தென்மராட்சி வலய பாடசாலைகளில் டெங்கு ஒழிப்புப் பணி

யாழ்ப்பாணம், ஜன.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வாரச் செயற்பாடுகள் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகின.

பாடசாலைகள், அயல் காணிகள் போன்றவை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படுவதுடன் மாணவர்கள் வீடு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

டெங்கு ஒழிப்புத் தொடர்பாக வெளியான சுற்று நிருபங்களின் பிரகாரம் கல்வி வலயத்தினால் கடந்த 6ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி வரை பாடசாலை ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்க அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## தற்காலிக இணைப்புப் பெற்ற முல்லைத்தீவுக் கல்வி வலய ஆசிரியர்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றும் முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரும் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தென்மராட்சி கல்வி வலயத்திற்குப் பின்வரும் ஆவணங்களுடன் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

முதல் நியமனக் கடிதம், தற்காலிக இணைப்பு வழங்கப்பட்ட கடிதம், நிரந்தரப் பாடசாலையில் இறுதியாகப் பெற்ற சம்பளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் ஏதும் இருப்பின் ஆகியவற்றுடன் வருகை தருமாறும் அறிவித்துள்ளார். (50-207)

## வயோதிபரை பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், ஜன.8

வீதியில் நடந்து சென்ற வயோதிபர் பாம்பினால் கடியுண்டார். இச்சம்பவம் கடந்த 6ஆம் திகதி காலை மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கோவிந்தன் மார்க்கண்டன் (வயது-66) என்பவர் பாம்பினால் கடியுண்டவராவர். இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (50-207)

## விபத்தில் மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஜன.8

கோப்பாய் சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த யாழ். பல்கலைக்கழக 2ஆம் வருட மருத்துவபீட மாணவன் க.ரஞ்சித் (வயது-21) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (50-ரி)


# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதி தொழில்நுட்ப உத்தியோகத்தர்

**வேலாயுதர் பாராளன்**

அவர்கள் காலமானதையிட்டு அதிர்ச்சியுறுகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர்கள்,
தென்மராட்சிக் கல்வி வலயம். (சி/563960)





மலிவு விற்பனை
நவநாகரிக நங்கையர் விரும்பும் ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்
லைடன் புடைவை நிலையம்
மலிவு விற்பனை பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது
பஸ் நிலையம் முன்பாக, 410 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2381
(சி/563913)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகரட்ணம் கஜேந்திரன்**
(லொறி வாவு)

தோற்றம் 02★04★1965
மறைவு 21★12★2008

இவ்வுலகைவிட்டு ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதில்
என்றும் பசுமையாகவே இருக்கும் அப்பா!

இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆண்டுக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கல்லூரி வீதி,
வெஸ்ரின் ஒழுங்கை, பருத்தித்துறை.

மனைவி: க.கமலேஸ்வரி (வவாச்சி)
பிள்ளைகள்.

(91885)



# நீங்கா நினைவில் ஓராண்டு

தோற்றம் 13 ★ 12 ★ 1932



மறைவு 20 ★ 12 ★ 2008

**அமரர் சபாபதிப்பிள்ளை கனகரட்ணம்**
திதி: அபரபக்க நவமி (08.01.2010)

நிறைவு பெற்ற ஓராண்டில் நீரால் விழிகள் நிறைந்ததப்பா!
பாரெல்லாம் உம்பாதம் பகலிரவாய் உம்பாசக்குரல்
காதோரம் ஒலிக்குதப்பா காலமெல்லாம் நாம் மறவோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(93511)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா சோமசுந்தரம்**
முன்னாள் இ.போ.ச.ஊழியர் கோண்டாவில் (ரிங்கர்)
திதி: அபரபக்க நவமி (08.01.2010)

தோற்றம் 21★04★1944
மறைவு 20★12★2008

அன்போடும் பண்போடும் எமைக் காத்த அப்பாவே!
கண்களில் நீங்கவில்லை உம் நினைவு
மாய வாழ்வுதனில் ஆண்டொன்று போனதென்ன
ஆறுமோ நம் கவலை இறைவனடியில்
உங்கள் ஆத்மாவுக்கோர் சிறப்பிடம் அமைய
உயிருள்ளவரை பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(93393)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**16.01.1987**

★ யாழ்.குடாநாட்டுக்கான எரிபொருள் விநியோகத்தடையை அடுத்து ஆனையிறவைத் தாண்டி குடாநாட்டுக்குள் விறகு ஏற்றிவரவும் அனுமதி மறுக்கப்படுவதால் யாழ்.குடாநாட்டில் விறகுக்கும் பெரும் தட்டுப்பாட்டு நிலை.

★ ஜனாதிபதி ஜே.ஆரின் விசேட தூதுவராக இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திக்க இந்தியா சென்ற அமைச்சர் காமினி திஸாநாயக்க இந்தியப் பிரதமரைச் சந்திக்காமலேயே கொழும்பு திரும்பினார்.

**17.01.1987**

★ வடக்குக்கான எரிபொருள் விநியோகத்தடையை நீக்க அரசு முன்வராவிட்டால் தென்பகுதியில் பொருளாதார இலக்குகள் மீது தாம் தாக்குதல் மேற்கொள்ளத் தயங்கமாட்டார்களென விடுதலைப்புலிகள் அரசுக்கு எச்சரிக்கை.

★ போராளிகள் தமது ஆயுதங்களைக் கைவிடும் வரை அவர்களுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தமாட்டாது என இந்தியத்தரப்புக்குத் தாம் தெரிவித்ததாக அமைச்சர் காமினி திஸாநாயக்க தெரிவிப்பு.

**18.01.1987**

★ இனப்பிரச்சினை தொடர்பான தமது தீர்வு முயற்சிகளைத் தொடர வேண்டுமானால் வடபகுதிக்கான எரிபொருள் தடையை நீக்குவது உட்பட தமது இரு நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென இந்தியா தெரிவிப்பு.

★ யாழ்.குடாநாட்டில் அரசால் நடைமுறைப்படுத்தப்படும் எரிபொருள் விநியோகத் தடைக்கு எதிராக சர்வதேச சமூகம் குரல்கொடுக்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள்.

**19.01.1987**

★ பதுளையின் இ.போ.ச . பஸ்ஸொன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஐந்து பேர் பலி; பலர் படுகாயம்.

★ தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஈரோஸ் தலைவர் பாலகுமாரும் யாழ்ப்பாணம் வந்திருப்பதன் நோக்கம் எதுவெனத் தெரிந்துகொள்ள இலங்கைப் பாதுகாப்புப் படைவட்டாரங்கள் ஆர்வம்.

**20.01.1987**

★ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கும் அவ் அமைப்பின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டுவுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதென்ற செய்திக்கு தளபதி கிட்டு மறுப்பு.

★ அரசின் யாழ். மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகத்தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக குடாநாடு ஸ்தம்பிதம்.

**21.01.1987**

★ யாழ். பெரிய தபாற்கந்தோர் கட்டடமும், வீரசிங்கம் மண்டபமும் விடுதலைப் புலிகளால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

★ இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ.பி. வெங்கடேஸ்வரன் தமது பதவியிலிருந்து இராஜினாமா.

★ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இலங்கை அரசு உறுதியான யோசனைகளை முன் வைக்காத வரை இவ்விடயத்தில் இந்தியாவால் எதுவும் செய்ய இயலாது என இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவிப்பு.

**22.01.1987**

★ யாழ் கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினர் யாழ்.நகர் நோக்கி மேற்கொண்ட கடும் ஷெல் தாக்குதல்களால் ஐந்து பொதுமக்கள் பலி; பலர் படுகாயம்.

★ மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் முஸ்லிம்களுக்காக அரசினால் ஆரம்பிக்கப்பட்ட 'ஜிகாத்' இயக்கத்தின் மீது ஈரோஸ் இயக்கம் தடை விதித்துள்ளதாகவும் அறிவிப்பு.

**23.01.1987**

★ தமிழீழப் போராட்டத்தையும், போராளிகளையும் இந்திய அரசு உடனடியாக அங்கீகரிக்க வேண்டும் என ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

★ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனால்.தாம் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திக்கு விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு மறுப்புத் தெரிவிப்பு.

★ யாழ். தொலைத்தொடர்புத் திணைக்களக் கட்டடத்தை இராணுவத்தினர் கைப்பற்றியமை ஓர் இராணுவ தந்திரமாகும் எனத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

**24.01.1987**

★ யாழ்ப்பாணத்துக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான தொலைபேசித் தொடர்புகளை அரசு துண்டித்திருப்பது யாழ்ப்பாணத்தின் மீது விதிக்கப்படும் இரண்டாவது பொருளாதாரத் தடை என அரசியல் அவதானிகள் விமர்சிப்பு.

★ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க பிராந்தியத் தளபதிகள் தத்தமது பிராந்தியப் பிரச்சினைகள் குறித்து தீர்மானம் மேற்கொள்ளும் சுதந்திரம் பெற்றுள்ளார்கள் என விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அமைப்பு முறை குறித்து 'புரொண்ட்லைன்' சஞ்சிகை விளக்கம்.

**25.01.1987**

★ யாழ்.குடாநாட்டில் போதைவஸ்து பாவனை அதிகரித்திருப்பதாகவும், போதைவஸ்தைப் பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எச்சரிக்கை.

★ பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியாவைக் கேட்டு வந்த இலங்கை அரசு, தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள பிரபாகரன் குறித்து என்ன செய்யப்போ கிறது? என அனுரா பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தில் கேள்வி.

**26.01.1987**

★ வடபிராந்திய பஸ்களுக்கான எரிபொருளை அரசின் முடிவுப்படி ஆனையிறவு முகாமிலோ, கிளிநொச்சி பஸ் டிப் போவிலோ இருந்து பெறுவது குறித்து வட பிராந்திய போக்குவரத்துச் சபை கூடி ஆராய்வு.

★ வடபகுதிக்கான அரசின் எரிபொருள் தடை காரணமாக வடபகுதி மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு.

**27.01.1987**

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசுடனும் தமிழர் அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திவரும் இந்திய இணை அமைச்சர் சிதம்பரம், விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவருடன் பேச யாழ்ப்பாணம் செல்வாரா? என இந்திய அரசியல் வட்டாரங்களில் கேள்வி.

★ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டுவரும் விமானங்களில் ஒன்று கல்லூண்டாய் வெளியில் பரீட்சார்த்தமாகச் செலுத்திப்பார்க்கப்பட்டது.

**28.01.1987**

★ வடபகுதி மக்கள் மீது இலங்கை அரசு விதித்துள்ள இரண்டு பொருளாதாரத் தடைகளையும் நீக்கிவிட வேண்டுமென இலங்கைத் தூதுவர் பேர்னாட் திலகரத்னவிடம் இந்திய இணை அமைச்சர்கள் குழு வலியுறுத்து.

★ தமிழீழ விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளதாகத் தாம் நம்புவதாக இலங்கை இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் அறிவிப்பு.

**29.01.1987**

★ மட்டக்களப்பு மாவட்டம் - கொக்கட்டிச் சோலையில் இடம் பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் 14 கொமாண்டோப் பொலீஸார் உயிரிழப்பு.

★ பட்டிருப்பு - கொக்கட்டிச்சோலையில் ஆயுதப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 16 பொது மக்கள்பலி.

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ள விடயம் வடக்கு- கிழக்கு இணைப்புக் கோரிக்கையே என ஜனாதிபதி ஜே.ஆர் 'ஐலண்ட்' நாளிதழுக்குப்பேட்டி.

**30.01.1987**

★ யாழ் .குடாநாடு மீது இலங்கை அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குமாறு இலங்கை அரசை நிர்ப்பந்திக்குமாறு இந்திய மத்திய அரசிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை.

★ மட்டக்களப்பு மாவட்டம், பட்டிருப்பு- கொக்கட்டிச்சோலையில் இரண்டாவது நாளாக அரச படையினர் நடத்திய தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் சுட்டுக்கொலை.

★ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சுமார் பத்தாயிரம் போராளிகள் உள்ளதாக புலிகள் வட்டாரம் உறுதிப்படுத்தியதாக ஐலண்ட் நாளிதழ் தெரிவிப்பு.

**31.01.1987**

★ இந்திய அரசியல் சாசனத்தை எரித்த வழக்கில் தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு பத்துவார காலம் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு.

★ குடாநாட்டில் செயலிழந்திருக்கும் மக்கள் வங்கிக் கிளைகளில் பணிபுரியும் ஊழியர்கள் கூட்டம் கூட்டமாக குடாநாட்டுக்கு வெளியே இடமாற்றம்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

**அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.**



### சிவராசா மதுஷன்
**வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்**
**புள்ளி-145**

நான் எனது கிராமத்திலுள்ள வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை எனது கல்வியைக் கற்றுவருகிறேன்.

இது ஒரு சிறிய பாடசாலையாக இருப்பினும் எல்லா வளங்களும் நிறைந்த ஒரு பாடசாலை. எனது இலட்சியம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதே. நான் புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த எனது பெற்றோருக்கும், குறிப்பாக தனது நேரத்தை பொருட்படுத்தாமல் மேலதிக வகுப்புக்களை விடுமுறை நாள்களிலும் நடத்தி என்னை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வழிப்படுத்திய எனது பாடசாலை அதிபருக்கும், வகுப்பாசிரியருக்கும், ஆரம்பக்கல்வியை போதித்த ஏனைய ஆசிரியர்களுக்கும், தனியார் வகுப்பில் கற்பித்த ஆசிரியருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



### யோகலிங்கம் அஜித்தா
**ஞானசாரியார் கல்லூரி**
**புள்ளி-140**

எனது அப்பா ஒரு விவசாயி அம்மா வீட்டுப்பணி செய்பவர் நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்றோர் என் கல்வியில் மிகுந்த அக்கறையுள்ளனர்.

எனது வெற்றிக்கு எமது பாடசாலை அதிபர் ச.ஸ்ரீராமச்சந்திரனும், எனது வகுப்பாசிரியர் திருமதி தேவராணி நவரத்தினமும் மற்றும் செல்வி த. தவக்குமார், செல்வி சி.சர்மிளா ஆசிரியர்களும் காரணமாயிருந்தனர்.

ஆசிரியரின் விடுமுறைக்கால மேலதிக வகுப்புக்கள், 'உதயன்' பத்திரிகை மாதிரி வினாத்தாள்கள் எனக்குக் கூடிய பயனுள்ளதாக அமைந்தது.

எனது எதிர்கால இலட்சியம் ஓர் ஆசிரியராக வருவதே ஆகும்.

எனது இலட்சியம் நிறைவேற இறைவன் அருள்புரிவார் என்ற நம்பிக்கை நிறைய எனக்குண்டு.



### விநாயகமூர்த்தி தினேஷ்
**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**
**புள்ளி-158**

எனது அம்மா நான் புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தி அடைவதற்காக படிப்பதற்குத் தேவையான பொருள் களை வாங்கித்தந்தார்.

எனது வகுப்பாசிரியரான சுசீலா ஆசிரியை மிகவும் கஷ்ரப்பட்டு எமது வகுப்பிற்கு கல்வி போதித்தவர் அதை நான் மிகவும் கவனமாகக் கவனித்தேன்.

இதனால் தான் நான் 158 புள்ளிகளைப்பெற்றேன். எனது அக்காவான தர் சனா எனக்கு விளங்காத கேள்விகளை மட்டுமன்றி தன் அனுபவத்தில் இருப் பதை எல்லாத்தையும் சொல்லித் தந்தார்.

எனது அதிபரான இரத்தினராஜா இதுவரைக்கும் நடந்த 16 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களை எழுதத்தந்து, அதை விளங்கப்படுத்தினார்.

இதனால் தான் நான் எனது பாடசாலையில் முதலிடம்பெற்றதோடு. புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தி பெறுவதற்குக் காரணம் ஆகும்.

நான் புலமைப்பரிசில் பரீட்சை சித்திபெறுவதற்கு எனக்கு உதவிய ஆசி ரியர், அதிபர் மற்றும் எனது அக்கா அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.



### நாகராசா கிருஷாயினி
**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**
**புள்ளி-156**

நான் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலை மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றுள்ளேன். எனது அப்பா விவசாயம் செய்பவர்.

நான் சித்தியடைவதற்கு எமது பாடசாலை அதிபர் பொ. இரட்ணராஜா மற்றும் தன்னைத் தியாகம் செய்து கற்பித்த ஆசிரியை திருமதி ர.சுசிலா அவர்களினதும் ஏனைய ஆசிரியர்களினதும் வழிகாட்டலிலும் எனது பெற்றோரின் ஆர்வமான அர்ப்பணிப்பிலும் எனது அயராத முயற்சியினாலும் என்னால் இப்புள்ளிகளைப் பெற முடிந்தது.

இதனால் நானும் எனது பெற்றோரும், சகோதரர்களும் மிக மகிழ்ச்சி அடைந்தோம். நான் இதே விடாமுயற்சியுடன் கல்வி பயின்று எதிர்காலத்தில் ஓர் வைத்தியரா[illegible]கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலை தொடர்பான எச்சரிக்கைகளை வழங்க யாழ்ப்பாணத்தில் தன்னியக்க வானிலை அவதான நிலையம்



நாடு முழுவதும் தன்னியக்க வானிலை அவதானிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்.மாவட்டத்திலும் அதனை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையத்தின் மூலம் குடாநாட்டு மக்களுக்கு காலநிலை தொடர்பான அறிவித்தல்கள் விரைவில் கிடைப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது

இதற்கான ஆரம்பகட்ட நிர்மாண வேலைகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு முன்பாக உள்ள காணியில் இந்தத் தன்னியக்க வானிலை அவதானிப்பு நிலையம் அமைக்கப்படுகின்றது.

இவ்வாறு கொழும்பு வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர் தேச கீர்த்தி எஸ்.கே.லோகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் தன்னியக்க வானிலை அவதானிப்பு நிலையத்தினை கண்காணிக்கவென யாழ்.வந்த எஸ்.கே.லோகேஸ்வரன் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது நாடு முழுவதும் 38 தன்னியக்க வானிலை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்படும் தன்னியக்க வானிலை அவதானிப்பு நிலையத்துக்கான உபகரணங்கள் யப்பான் சர்வதேசக் கூட்டுறவு அமைப்பின் (ஜே.ஐ.சி.ஏ) நன்கொடை கிடைக்கப்பெற்றதாகும். சர்வதேச தரத்திலான தொழில் நுட்பத்துடன் கூடிய இந்த இயந்திரத் தொகுதி அதி கூடிய உணர்திறன்மிக்க செயற்பாட்டைக் கொண்டது. இதன் மூலம் வானிலை மூலகங்களை மிகத் துல்லியமாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்த உபகரணத் தொகுதி தன்னியக்கமாக ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கு ஒருமுறை வானிலை மூலங்களை பதிவு செய்யக்கூடியது. அது மட்டுமன்றி இந்த உபகரணமானது செய்மதித் தகவல் பரிமாற்றத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பினூடாக கொழும்பு வளிமண்டலவியல் திணைக்கள தலைமையகத்துக்கு தகவல்களை அனுப்பக்கூடியதாக இருக்கும். அத்தோடு மாவட்டத்துக்கு மாவட்டம் கூட இந்த வலைப்பின்னல் அமைப்பினூடாகத் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ளமுடியும்.

இந்தத் தன்னியக்க வானிலை அவதானிப்பு நிலையத்துக்கான வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவென கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எம்.டி.தயானந்தா தலைமையிலான நிபுணத்துவக் குழு யாழ்.வந்துள்ளது.

இந்தக் குழுவுடன் யாழ்.வளிமண்டலவியல் நிலைய பொறுப்பதிகாரி பி.புஸ்பநாதனும் கண்காணிப்பு ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பல லட்சம் பெறுமதி இந்த நிலையத்தை யாழ்.மாவட்டத்தில் நிறுவுவதற்கான ஆரம்ப ஒழுங்கமைப்பு நடவடிக்கைக்கான ஒத்துழைப்பை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

40 x 35 சதுர அடிப் பரப்பளவில் நிறுவப்பட்டுவரும் இந்த நிலையம், இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புறாத வகையில் திட்டமிடப்புட்டு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்த உபகரணத் தொகுதியை இயக்குதல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

வானிலை மூலகங்களை உடனுக்குடன் அவதானித்து சீரற்ற காலநிலை எச்சரிக்கை தொடர்பாக பொது மக்களுக்கு உடனுக்குடன் ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப் படும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கொழும்புத் தலைமையகத்துக்கும் தகவல்கள் அனுப்பப்படும். அதன்மூலம் அங்கிருந்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்படும். அதன் மூலமாக பிரதேச மட்டங்களில் பொதுமக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பொதுமக்கள் அறிந்து கொள்ள விரும்பின் 021 222 3676 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு யாழ்.மாவட்ட வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம் - என்றார்.

## நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்கிறார் சிரேஷ்ட உத்தியோகத்தர் லோகேஸ்வரன்

செவ்வி : உமா

---


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகவும் தாதியர் உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருக்கும் திருமதி இரத்தினகாந்தி சந்திரமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தை

**திரு. இராமநாதர் பரமநாதர்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(93543)

## துயர் பகிர்கின்றோம்



தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் பகுதி தொழில்நுட்ப உத்தியோகத்தரும் எமது கல்லூரியின் பழைய மாணவருமான

**வேலாயுதர் பராளன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(சி/568959)

## மரண அறிவித்தல்

**திருமதி இராசலட்சுமி பொன்னையா** (ஆனந்த பவான்)



மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் London Easthamஐ வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி இராசலட்சுமி பொன்னையா நேற்று (07.01.2010) வியாழக்கிழமை Londonஇல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா- தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் திரு.திருமதி மாரிமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திரு.பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் ஆனந்தநடராசா, ஞானாம்பிகை, ஞானமலர், ஞானலதா, ஆனந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, தனலட்சுமி மற்றும் பாக்கியலட்சுமி, சௌந்தலாதேவி, சோமாஸ்கந்தன், காலஞ்சென்ற இரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னலட்சுமி காலஞ்சென்ற துரைராஜா மற்றும் சண்முகராஜா, சிவபாலன், துசியந்தி ஆகியோரின் அன்பு மாமியும் அம்பிகாதேவி, விஸ்வநாதன், வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சிறிய தாயுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் Londonஇல் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே.இல.: 021 7912079

தகவல்:
ஆனந்தநடராசா (மகன்)

(93541)


## எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை சொந்த இடத்தில்

யாழ்ப்பாணம், ஜன.8

கடந்த பத்து வருடங்களாக அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்ததால் மூடப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகின.

அப்பகுதியில் மக்கள் மீளாக் குடியமர்ந்துள்ளதால் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை எழுதுமட்டுவாழ், கரம்பகம் பகுதியின் மக்கள் மீளக்குடியேறி வருவதால் கரம்பகம் அ.மி.த.க.பாடசாலையும் விரைவில் இயங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாடகைக்கு வீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடம் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடனும் கூடிய அண்ணளவாக 2000 சதுர அடி பரப்பளவுள்ள வீடு விவசாயபீடத்தை அண்மித்த பகுதியில் வாடகைக்குத் தேவை.

வீட்டை வாடகைக்குத் தர விரும்புவோர் உதவிப் பதிவாளர்/நிர்வாகம், அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 20.01.2010 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் 'விவசாய பீடத்திற்கான வீடு' எனக் குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக் கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.

(சி/563966)

## உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வடமராட்சி மண்ணில் பிராந்தியக் காரியாலயத்தினை திறந்ததனை ஒட்டி வடமராட்சி மாணவர்களுக்காக நடாத்திய புதிர்ப் போட்டிக்கான

**பரிசுக்குலுக்கலும் பரிசளிப்பு விழாவும்**

காலம் : 09.01.2009 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.30 மணி
இடம் : நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்டபம்
தலைவர்: திரு.ஈ.சரவணபவன் (நிர்வாக இயக்குநர், உதயன்-சுடரொளி)
பிரதம விருந்தினர்: திரு.வீ.செல்வராஜா (வலயக்கல்விப் பணிப்பாளர்- வடமராட்சி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பரிசுக்குலுக்கல் நடாத்தப்பட்டு பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகளுக்கு அதே மேடையில் வைத்தே பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாடசாலைகளுக்கான சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபனம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தொடர்ந்து அவர் உரை நிகழ்த்தினார்.

10 அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முழு விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**(1) ஜனாதிபதி முறைமை ஒரு மாதத்தில் ஒழிப்பு**

இன்றுள்ள முக்கிய பணி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இல்லாமற் செய்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதே. ஜனாதிபதியாக நியமனம் பெற்ற பிறகு, எனது முதலாவது பணி சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு ஏற்ற முறையில் அரச அமைப்புச் சபையை நியமித்து 17 ஆவது திருத்தத்தை உயிர்ப்பிப்பதாகும்.

மேலும் இப்போதிருக்கின்ற மிகப் பெரிய அமைச்சரவையை இல்லாமற் செய்வேன். அதன்பிறகு எனது அமைச்சரவைக்கான அங்கத்தவர்களை முன்மொழியுமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பேன். அதன் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பேன்.

மேலும் அவசரகாலச் சட்டத்தையும் திருத்துவேன். ஒரு மாதத்திற்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது, பத்திரிகைச் சபையை ஒழிப்பது, தகவல்களை அறிந்துகொள்ளும் சுதந்திரம் என்பவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்வேன். சுதந்திரமான தேர்தல்கள் நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்த பிற்பாடு மக்களுக்குப் பொறுப்புச் சொல்லும் ஜனாதிபதியாக நாடாளுமன்றத்துடன் இணைந்து செயற்படுவேன்.

**(2) தவறான முறையில் சம்பாதித்த சொத்துக்கள் அரசுடைமையாகும்**

ஊழல், லஞ்சம் என்பவற்றோடு போராடுவதற்குப் போதுமான அதிகாரங்கள் படைத்த, சக்திவாய்ந்த நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பேன். ஊழல் குற்றவாளிகள் தவறான முறையில் சம்பாதித்த சொத்துகளை அரசுடைமையாக்குவேன். பொது மக்கள் பணம் அனைத்தையும் கணக்காய்வு செய்வதற்காக சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமிப்பேன்.

உலகில் முன்னேறிய ஜனநாயக நாடுகளில் நடைபெறுவது போன்று நாடாளுமன்ற ஒழுக்கநெறிமுறைகளைப் பற்றிய சட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளுமாறு புதிய நாடாளுமன்றத்திடம் நான் கேட்டுக்கொள்வேன். பொதுமக்களது உடைமைகள் நாசமாக்கப்படுவதைத் தடுப்பதற்காகத் தீவிர நடவடிக்கை எடுப்பேன்.

**(3) அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பு**

உரமானியத்தின் கீழ் யூரியா ஒரு பொதி 350 ரூபாவுக்கு வழங்கப்படும். ஏனைய உரங்களை மானியத்தோடு திறந்த சந்தையில் பெற்றுத் தருவேன்.

அரிசி ஆலை மாபியாவை ஒழித்து, சந்தையை அடிப்படையாகக் கொண்ட நியாயமான உத்தரவாத விலையை வகுத்துக் கொடுப்பேன்.

2010 ஆம் ஆண்டு மகா போகத்தில் சம்பா நெல்லை கிலோ 40 ரூபாவுக்கும், நாட்டரிசி நெல்லை 35 ரூபாவுக்கும் கொள்வனவு செய்வதாக உறுதியளிக்கிறேன்.

பால் வழங்கும் பண்ணையாளர் லீற்றர் ஒன்றுக்கு வழங்கப்படும் மிகக் குறைந்த விலையை ரூபா 45 வரை கூட்டுவேன். புதுவருட காலத்தில் பொருள்கள் தட்டுப்பாடின்றி மக்களால் வாங்கக்கூடிய விலைக்கு கிடைக்கச் செய்வேன்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 500 ரூபா வரை உயர்த்துவதற்காகச் செய்யப்படும் பேச்சுகளை முன்னெடுத்துச் செல்வதோடு, அவர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுப்பேன்.

விவசாய ஓய்வூதியத்தை அதிகரிப்பதோடு, மீனவர்களுக்கென புதியதொரு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகம் செய்துவைப்பேன்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பதோடு, ஓய்வூதிய வேறுபாடுகளை நீக்குவேன். குறைந்தபட்ச சமுர்த்திக் கொடுப்பனவை 500 ரூபா வரை அதிகரிப்பேன்.

தனியார்துறையினரோடு கலந்துரையாடி அவர்களது வர்த்தகங்களின் செலவை அதிகரிக்கச் செய்துள்ள தேவை யற்ற வரி, கப்பம் என்பவற்றை நீக்கி, தனியார்துறையில் சேவை புரியும் ஊழியர்களின் ஊதியத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பேன்.

'ஜி. எஸ்.பி.'வரிச்சலுகையை மீண்டும் பெற்றுத் தருவேன்.

**(4) பெற்றோல் விலை குறைக்கப்படும்**

அத்தியாவசியஉணவுப் பொருள்களில் விதிக்கப்பட்டிருக்கும் மிகை வரியை வெட்டி, உணவுப்பொருள் விலைகளைக் குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பேன். டீசல், மண்ணெண்ணை என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள அனைத்து வரிகளையும் நீக்குவேன். உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் கேற்ப பெற்றோல் விலையையும் குறைப்பேன்.

'காஸ்' மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரிகளை கணிசமான அளவு குறைப்பேன்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்கள், ஓட்டோக்கள் என்பனவற்றுக்கு புகைச் சோதனைக்காக அறவிடப்படும் பணத்தை நீக்குவதோடு தனியார் பஸ்கள், ஓட்டோக்கள் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்களுக்கான வரிச்சலுகையைப் பெற்றுக் கொடுத்து போக்குவரத்துச் செலவைக் குறைப்பேன்.

**(5) உடனடியாக மீள் குடியேற்றம்**

யுத்தத்தால் துன்பமுற்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவருக்கும் உதவி செய்வேன்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் துரித நிவாரணம் வழங்கக்கூடிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். முகாம்களில் தற்போது எஞ்சியுள்ளோரை உடனடியாக மீள்குடியேற்றுவேன்.

மீள் குடியமர்த்தப்படும் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகையை ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிப்பேன்.

முதல் மாதத்திலேயே இதுவரை யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அனைத்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்வதோடு மீள்குடியமர்த்தவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்.

பயங்கரவாத நடவடிக்கை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்லோரையும் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தி நீதிமன்றத்திடம் ஒப்படைத்து புனர்வாழ்வளிக்க அல்லது விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பேன்.

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் மொழி ரீதியான பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

எத்தகைய தடைகளும் இன்றி மத அனுஷ்டானங்களை நிறைவேற்ற இருக்கின்ற சுதந்திரத்தை உறுதிப்படுத்துவேன்.

**(6) மருந்து இறக்குமதியில் தேசிய கொள்கை**

முதல் மாதத்துக்குள்ளேயே -

தரம் குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்துவேன். உயர் தரமான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் கிடைக்க ஏற்பாடு செய்வேன்.

தற்போது தீவிரமாகப் பரவி வரும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். மருந்து இறக்குமதி பற்றிய தேசிய கொள்கையொன்று வகுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

முதல் மாதத்திற்குள்ளேயே -

நம்பிக்கையான பரீட்சை செயல் முறையை ஏற்படுத்துவேன். 2011இல் முதலாம் வகுப்புக்குப் பிள்ளைகளைச் சேர்த்தல் சம்பந்தமாக நீதியான நடைமுறைகளை வகுப்பதற்கும் விசேட நடவடிக்கை ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் விடுதி வசதிகள் செய்து கொடுத்தல் உட்பட பல்கலைக்கழக மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(7) கடன் வழங்கபெண்கள் வங்கி**

இரண்டு மாதங்களுக்குள் பெண்களது உரிமைகள் சட்டத்தை முன்வைப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு பெண்களின் பாதுகாப்புக்காக எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பேன்.

கடன் வழங்குவதற்காக பெண்கள் வங்கி ஒன்றைத் தொடங்க நடவடிக்கை எடுப்பேன்.

வெளிநாடுகளில் வேலைபார்க்கும் பெண்களின் வருமான அதிகரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் புதிய வேலைத்திட்டம் ஒன்றையும் செயற்படுத்துவதோடு அவர்களுடைய குடும்பங்கள் முகம் கொடுத்துள்ள சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு உடனடியாகத் தலையிடும் அமைப்பொன்று நிறுவப்படும்.

**(8) 'இளைஞர் சவால்' வேலைத்திட்டம்**

3 மாதங்களுக்குள் 'இளைஞர் சவால்' வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும். 17 முதல் 25 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இதனால் பயனடைவர்.

கணனி, தகவல் தொழில்நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சேவைகள் ஆரம்பிக்கப்படும். ஆங்கில மொழி உட்பட்ட தொழிற்பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும்.

'இளைஞர் சவால்' வேலைத்திட்டத்தைப் பூர்த்திசெய்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**(9) ஆயுதக் குழுக்கள் முற்றாக களைவு**

நீதிமன்றத்தின் சுயாதீனத்துக்கு ஏற்பட்டுள்ள தடைகள் அனைத்தையும் உடனடியாக நீக்க நடவடிக்கை எடுப்பேன்.

பக்கச்சார்பற்ற, கௌரவமான பொலிஸ் சேவை ஒன்றை ஏற்படுத்துவேன். 22 வருட சேவைக் காலத்தின் பின்னர் ஓய்வுபெற விரும்புவர்களுக்குப் பூரண ஓய்வூதியச் சம்பளத்தோடு ஓய்வு பெற அனுமதி வழங்குவேன்.

பாதாள உலகக் குழுக்களையும், ஆயுதக் குழுக்களையும் முற்றாகக் களைந்தெறிய உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆட்கடத்தல் மற்றும் கொலை பற்றி விசாரணைகள் நடத்தி நீதியின் ஆதிபத்தியத்தை மீண்டும் ஸ்தாபிப்பேன்.

**(10) பாதுகாப்பு படைகள் நவீனமயம்**

அயல் நாடுகளின் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு 21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய முறையில் எம்முடைய பாதுகாப்புப் படைகளை நவீனமயப்படுத்துவேன்.

- என்றுள்ளது.

## யாழ். பண்ணை வீதி புனரமைப்பு; திங்களன்று பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ். பண்ணை வீதியின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நேற்றுத் தெரிவித்தார்.

சேதமடைந்த பண்ணை வீதியின் முதல் ஒரு கிலோ மீற்றர் தூரத்தைப் புனரமைக்கும் பணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் ஊர்காவற்றுறை இறுப்பிட்டி வீதியைப் புனரமைக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ-50)

## நெல்லியடியில் நாளை சத் சங்கம நிகழ்வு

அம்மாபகவான் சத் சங்கம நிகழ்வு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கலியாண மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பஜனை கலச பூசை, தியானம் கூட்டுப்பிரார்த்தனை என்பன இடம் பெறும்.

இதில் அனைவரும் கலந்து கொண்டு அருள் பெறுமாறு ஏகத்துவ இயக்கத்தின் இலங்கைக் கிளையினர் கேட்டுள்ளனர். (ஒ-10-236)

## துயர் பகிர்கின்றோம்

யா/உயரப்புலம் அ.மி.த.க. பாடசாலையின் அதிபர் ஆ.விவேகானந்தன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி ஆறுமுகம் காசியம்மா



அவர்கள் அமரத்துவமெய்திய செய்தி அறிந்து அவர்களின் குடும்பத்துயரில் நாமும் பங்குகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர். (93549) கோட்டக்கல்வி அலுவலர், அதிபர்கள்.


O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் கணனிக் கற்கைநெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!!

✓ Beginners Diploma in ICT (GIT - Syllabus )
✓ Diploma in Ms Office
✓ Diploma in Hardware Engineering
✓ Diploma in Desktop Publishing

11/01/2010 அன்று வகுப்புக்கள் ஆரம்பம்!!

அனுமதி விண்ணப்படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்று எதிர்வரும் 09/01/2010ற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்க்கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு :- UNI TECHNOLOGY
ICT Education Trainers
Jaffna Road, Manipay.
Tel :- 021 - 7429325
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)


## மரண அறிவித்தல்கள்

### சிவசம்பு கனகரத்தினம்

(யாழ். டீசல் மெக்கானிக்ஸ் உரிமையாளர்)



21/1,ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு கனகரத்தினம் நேற்று (07.01.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மகேஸ்வரி மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், பாக்கியம், துரைராஜசிங்கம், குதூகலகுமாரி, துரைசிங்கம் (டென்மார்க்), நிர்மலகுமாரி, வசந்தகுமாரி (சுவிஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), பாஸ்கரன், ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் மங்களேஸ்வரி, நாதன் (துர்க்கா கடைச்சல் பட்டடை), காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் யோகராஜா, ரஞ்சிதவதனி, செந்தில்குமார் ஆகியோரின் மாமனும் குமுதினி, சுபாஸ்கரன், ஜெயந்தி, கஜன், ஜனுஜா, ரிஷாலினி, சிந்துஜா, தர்சலா, பகீரன், டினேஸ், கிஷோக்குமார், கேசகுமார், உஷானி, பூவாஸ், லீசா, நோவாஸ், விதுரா, பிரான்சிகா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21/1, ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணம்.* (93558) தகவல் குடும்பத்தினர்.

### ஏகாம்பரம் சண்முகரட்ணம் (ரத்தினம்)

திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் சண்முகரட்ணம் நேற்று (07.01.2010) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*செங்குந்தா வீதி,திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (93559) தகவல்: குடும்பத்தினர். தொ.பே.: 021 222 9309 (வீடியோ சண்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகள் - பொலிஸார் இடையே ஸ்ரீநகரில் கடும் துப்பாக்கிச் சண்டை!

## 2 பொலிஸார் மரணம்; பலர் படுகாயம்

ஸ்ரீநகர், ஜன. 08

காஷ்மீர் மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்றுமுன்தினம் தற்கொலைப்படை தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 2 பொலிஸார்கள் பலியானார்கள்.

காஷ்மீர் மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரின் மையப்பகுதி லால் சவுக் பகுதி ஆகும். இங்கு மத்திய ஆயுதப்படை பொலிஸாரின் தலைமை முகாம் உள்ளது.

அங்கு துப்பாக்கி ஏந்திய துணை இராணுவப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது பிளாட்டியம் சவுக் என்ற இடத்தில் சந்தேகப்படும்படியாக வந்த 4 பேரை இராணுவத்தினர் தடுத்து மறித்து விசாரித்தனர்.

துணை இராணுவப்படையினர் தங்களை வழிமறித்ததால் அதிர்ச்சியடைந்த அந்த தீவிரவாதிகள், கண்ணிமைக்கும் நேரத்தில் இராணுவ வீரர்களை நோக்கி சர மாரியாகச் சுடத்தொடங்கினார்கள். கையெறி குண்டுகள் சிலவற்றையும் அவர்கள் மீது வீசினார்கள்.

துணை இராணுவத்தினரும் திருப்பிச் சுட்டார்கள். அப்போது 2 தீவிரவாதிகள் தப்பி ஓடி விட்டனர். 2 தீவிரவாதிகள், இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியபடி அருகில் இருந்த 'பஞ்சாப் ஹோட்டல்' என்ற ஹோட்டலுக்குள் ஓடி ஒளிந்தனர்.



பின்னர் ஹோட்டலுக்குள் இருந்தபடி இராணுவத்தினரை நோக்கிச் சரமாரியாக சுட்டுக் கொண்டே இருந்தனர். அவர்களைப் பிடிக்க இராணுவத்தினர் ஹோட்டலைச் சுற்றி வளைத்து பதிலுக்குச் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இரு தரப்பிலும் கடும் சண்டை நீடித்தது. இதனால் பயந்து அலறிய பொதுமக்கள் நாலா புறமும் சிதறி ஓடினர்.

இரு தரப்பிலும் கடுமையான சண்டை நீடித்ததால், அருகில் இருந்த கட்டடங்களில், கடைகளில் பதுங்கியிருந்த பொது மக்களைப் பத்திரமாக மீட்டு வெளியே கொண்டு வந்தனர். 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மீட்கப்பட்டுப் பத்திரமாக வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கிடையே ஹோட்டலுக்குள் புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்த சிலரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு தொடர்ந்து துணை இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே இருந்தனர். இந்தச் சண்டை காரணமாக அந்தப் பகுதியே போர்க்களம் போல் காட்சியளித்தது.

இந்தச் சண்டையில் பொலிஸார் உட்பட 2 பேர் பலியானார்கள். மேலும் 3 பொலிஸார் உட்பட பலர் படு காயமடைந்தனர். அவர்களில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

ஜாமியாத் - உல் - முஜாகிதீன் என்கிற தீவிரவாத அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியது என ஒப்புக்கொண்டது. ஆனால் இதை மறுத்த பொலிஸ் வட்டாரம், லஸ்கர் - இ - தொய்பா தற்கொலைப்படை தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியது என அறிவித்துள்ளது.

# சிவலிங்கத்தை ரூ. 25 கோடிக்கு விற்க முயன்ற 3 பேர் சிக்கினர்!

பச்சைக்கல்லால் தயாரிக்கப்பட்ட சிவலிங்கத்தை மரகதலிங்கம் என்று கூறி ரூபா 25 கோடிக்கு விற்க முயன்றோர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பஸ் நிலையம் அருகில் யானைத் தந்தங்களை விற்க ஒரு கும்பல் முயற்சிக்கிறது என சிறப்பு அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்தது.

அதிரடிப்படை உளவுப்பிரிவு எஸ்.ஐ. அருள் மற்றும் பொலிஸார் அங்கு சென்று ரகசிய மாக கண்காணித்தனர். அப்போது சந் தேகப்படும்படியாக காணப்பட்ட 3 பேரைப் பிடித்தனர். விசாரணையில், கோவை குனியமுத்தூரைச் சேர்ந்த ராமு, காந்திபுரத் தைச் சேர்ந்த முத்துக்குமார், பீளமேடு சரவணன் என்ற அந்த மூவரும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசினர். அப்போது, ராமுவிடம் முக்கால் அடி உயர சிவலிங்கம் இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

பச்சைக்கல்லால் தயாரிக்கப்பட்ட அதன் எடை ஆறரைக் கிலோ. அதை மரகதலிங்கம் என்று சொல்லி 3 பேரும் ரூபா 25 கோடிக்கு விற்க முயன்றுள்ளனர். அதை வாங்க வருவதாக இருந்த கர்நாடகாவைச் சேர்ந்தவர்களுக்காகக் காத்திருந்த போதுதான் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். அவர்களிடம் ஐ.ஜி. சைலேந்திரபாபு விசாரித்து சத்தியமங்கலம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். அந்த லிங்கம் மரகதலிங்கமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஆய்வு செய்கின்றனர்.

# தனித் தெலுங்கானாவை வலியுறுத்தி மாணவன் தூக்குப்போட்டு தற்கொலை

-ஐதராபாத், ஜன. 8

தனித் தெலுங்கானா மாநிலப் பிரச்சினை தொடர்பாக டில்லியில் நடைபெற்ற பேச்சில் சுமுக உடன்பாடு ஏற்படவில்லை. இதனால் மனம் உடைந்த பூமா ரெட்டி (வயது - 24) என்ற மாணவர் ஒருவர் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஆந்திர மாநிலம், அடிலாபாத்தில் மல்ரி மீடியா கணினிக் கல்வி பயின்று வந்த அவர் எழுதி வைத்த கடிதத்தில், 'தனி தெலுங்கானாவுக்காக உயிர்த்தியாகம் செய்கிறேன். தனி தெலுங்கானா அமைய மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# ரஜினியைப் பின்பற்றுகிறார் விஜய்

## அவரது தந்தை சந்திரசேகர் கூறுகிறார்

சென்னை, ஜன. 8

நடிகர் விஜய், ரஜினியின் பாணியைப் பின்பற்றுகிறார் என திரைப்பட இயக்குநரும், நடிகர் விஜய்யின் தந்தையுமான எஸ்.ஏ. சந்திரசேகர் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம் காமராஜர் சாகர் அணைக்கட்டில் நடிகர் விஜய் நடிக்கும் வெளுத்துக்கட்டு படப்பிடிப்புக்காக, இயக்குநர் சந்திரசேகர் வந்திருந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

நடிகர் விஜய், ரஜினியின் பார்முலாவை பின்பற்றுகிறார். ரஜினியின் படங்கள் எல்லாம் வெற்றிப் படங்களாகவே இருப்பதுண்டு. அதேபோல், நடிகர் விஜய் படங்களும் வசூலில் வெற்றி பெற்று வருகிறது.

விஜய் படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் யாரும் இதுவரை நஷ்டம் அடைந்ததில்லை. வேட்டைக்காரன் படம் வசூலில் சாதனை படைத்துள்ளது. 2011ஆம் ஆண்டுக்குப் பிறகே விஜய் நடிக்கும் விருதுப் படங்கள் தயாரிக்கப்படும் - என்றார்.

# தமிழக வர்த்தகத் தூதுக்குழு இன்று இலங்கை பயணம்

மதுரை, ஜன. 8

தமிழகத்திலிருந்து இளம் தொழில் முனைவோர் 65 பேர் அடங்கிய வர்த்தக தூதுக் குழு இன்று வெள்ளிக்கிழமை இலங்கை செல்கிறது.

இதுதொடர்பாக தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் முதுநிலைத் தலைவர் எஸ்.ரத்தினவேல் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் கூறியவை வருமாறு -

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் இளம் தொழில்முனைவோர் பயிற்சி மையம் (யெஸ்), கடந்த 2004ஆம் ஆண்டு மதுரையில் தொடங்கப்பட்டது. சிவகாசி, திண்டுக்கல், சென்னை உள்ளிட்ட இடங்களில் இதன் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது 400 உறுப்பினர்கள் உள்ளனர்.

இக்குழு சில ஆண்டுகளுக்கு முன் சீனா சென்று வந்தது. தற்போது, 65 இளம் தொழில்முனைவோர் அடங்கிய வர்த்தகக் குழு இன்று 8ஆம் திகதி இலங்கை செல்கிறது.

உற்பத்தி, வேளாண் பொருள்கள், இரசாயனம், பிளாஸ்டிக், ஓட்டோ மொபைல், கட்டுமானம், நிதிச் சேவை, ஹோட்டல் உள்ளிட்ட பல்வேறு தொழில், வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இளம் தொழில்முனைவோர் இக் குழுவில் அடங்கியுள்ளனர்.

# ஏமனில் தலைமறைவாக இருந்த அல் - குவைதா தலைவர் கைது

சானா, ஜன.8

தேடுதல் வேட்டையின் போது தப்பியோடி தலைமறைவாக இருந்துவந்த ஏமன் அல்- குவைதா தலைவர் முஹம்மது அல்-ஹன்ங் புதன்கிழமை கைது செய்யப்பட்டார். அவருடன் அவரது உறவினர்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

ஏமன் அல்-குவைதா தலைவரான முகம்மது அல் - ஹன்ங், தலைநகரான சானா அருகே உள்ள அர்ஹாப் என்ற இடத்தில் பதுங்கி இருந்தார். இராணுவம் அந்த இடத்துக்கு விரைந்து தேடுதல் வேட்டையை மேற்கொண்டது.

அப்போது மூண்ட சண்டையில் ஹன்ங்கின் உறவினர்கள் 2 பேர் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்தனர். அப்போது முகம்மது அல்-ஹன்ங் கைதாகாமல் தப்பி விட்டார்.

அவர் புதன்கிழமை கைதானார். அவருடன் வைத்தியசாலையில் காயத்துக்குச் சிகிச்சை பெற்றுவந்த அவரது இரு உறவினர்களும் கைதானார்கள்.

இவர்தான் அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்களுக்கு மிரட்டல் விடுத்தவர். இந்த மிரட்டலைத் தொடர்ந்துதான் அந்த தூதரகங்கள் மூடப்பட்டன. இவர் கைதானதைத் தொடர்ந்து வெளிநாட்டுத் தூதரகங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

# உலகிலேயே மிகப் பெரிய 'ருனா' மீன் ரூ.2 கோடி 64 லட்சத்துக்கு விற்பனை

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் உள்ள உலகின் மிகப்பெரிய மீன் மொத்த வியாபாரச் சந்தையில் இராட்சத ருனா(Tuna) மீன் இலங்கை நாணயப்படி சுமார் ரூபா 2 கோடியே 64 இலட்சத்துக்கு விற் பனை செய்யப்பட்டது. அந்த மீனின் எடை 233 கிலோ ஆகும்.

இந்த மீனை இவ்வளவு விலைக்கு ஜப்பானிலுள்ள சுஷி ரெஸ்ட்ரோறன்ற் என்ற ஹோட்டல் வாங்கியது. இதுவரை இந்தத் தொகை அளவுக்கு ஒரு மீனும் இங்கு விற் பனையானதில்லை.

2001 ஆம் ஆண்டில் 200 கிலோ எடை உள்ள ருனா மீன் ரூபா 33 இலட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டதுதான் இதுவரை உலக சாதனையாக இருந்து வந்தது. இப் போது அந்தச் சாதனையை 233 கிலோ மீன் விற்பனை முறியடித்துள்ளது.


## மரண அறிவித்தல்

### நடேசு பாறுபதி



கரவெட்டி மேற்கு, பிராமணந் தோட்டத்தைச் சேர்ந்த நடேசு பாறுபதி கடந்த (05.01.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- பத்தினி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற நடேசுவின் (ஆயுள்வேத டாக்டர்) அன்பு மனைவியும் சிவபாலன், ஜெய பாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனகப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிராமணந் தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(93560)

தகவல்:
குடும்பத்தினர்.



## வீடு வளவு விற்பனைக்கு

பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து மிக அண்மையில் சில்லாலை நல்லாயன் வீதியில் 17 பரப்புக் காணியும் வீடும் (சகல வசதிகளுடனும்) விற்பனைக் குண்டு. தொழிற்சாலை, பண்ணைக்கு மிக உகந்தது.

தொடர்பு: 021 4920242
077 6970064

(93562)



## மரண அறிவித்தல்

### திருமதி கௌரிபாலன் பத்மாவதி



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரிபாலன் பத்மாவதி நேற்று (07.01.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி கௌரிபாலனின் அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான கந்தையா - சிவஞானம் தம்பதிகளின் அன்பு மகளும், காலம்சென்றவர்களான கந்தசாமி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், சசிதேவ், கிருபாலோஜினி, சசிக்குமார் (லண்டன்), பிரபா (ஆசிரியை, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), சசிதரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், கௌசி, சிவநாதன் (பாடசாலை பணியாளர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சிவகுமார் (ஆசிரியர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், சிவாஜினி (மாணவி, ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை), ஜக்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,சுன்னாகம்.
021 3735223

(C/563951)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் 85ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலையில் துர்க்காதேவி ஆலயத்தில் உள்ள அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றன. துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களில் சில:

விழா ஆரம்பத்தில் அன்னையின் திருவுருவச் சிலைக்கு அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பொதுச் செயலாளர் க.திருநீலகண்டன் மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும், மேடையில் அமர்ந்திருந்த பிரமுகர்கள் இறைவணக்கம் செய்வதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

இரண்டாவது வரிசையில் பிரதம விருந்தினர் செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை நினைவுப்பேருரை ஆற்றுவதையும் யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவிற்கான நிதியை வைத்திய கலாநிதி எஸ்.இளங்கோஞானியாரிடம் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் செயலாளர் நா.தவநாதன் வழங்குவதையும்''சிவத்தமிழ் விருது'' வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மாவிட்டபுரத்தைச் சேர்ந்த மூத்த கலைஞர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம், இளைப்பாறிய ஆசிரியர் சைவப்பணியாளர் க.விநாயகரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# சிவத்தமிழ்ச்செல்வியின் அறக்கொடை விழா நேற்று வெகு சிறப்பாக நடந்தேறியது

வலி.வடக்கு, ஜன.8

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 85ஆவது பிறந்தநாள் அறக்கொடை நிகழ்வுகள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் தேவஸ்தான பரிபாலன சபைத்தலைவர் ஆறு.திருமுகன் தலைமையில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றன.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி நினைவாலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டைத் தொடர்ந்து திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

திருவுருவச் சிலைக்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மற்றும் பெறாமகன் ஆகியோர் மலர்மாலைகளை அணிவித்தார்கள்.

அன்னையின் திருவுருவப்படத்திற்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியர் என்.சண்முகலிங்கன் மலர்மாலை அணிவித்ததுடன் பாமாலையும் பாடினார்.

மங்கள விளக்கை பிரதம விருந்தினர் வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை மற்றும் கந்தையா நீலகண்டன், பேராசிரியர் என். சண்முகலிங்கன் ஆகியோர் ஏற்றினார்கள்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தரதேசிக பரமாச்சாரியசுவாமிகளும், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேய ஆலய பிரதம குரு சுந்தரேஸ்வரக்குருக்களும் வழங்கினார்கள்.

முதல் தடவையாக சிவத்தமிழ் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. சைவத் தமிழ் பண்பாட்டு கலைப்பணிசெய்த மூத்த கலைஞர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம், சைவத்தமிழ்ப்பணி செய்து இளைப்பாறிய முதன்மை ஆசிரியர் ச.விநாயகரத்தினம் ஆகியோருக்கு கந்தையா நீலகண்டன் பொன்னாடை போர்த்து நினைவுக் கேடயத்தை வழங்கிக் கௌரவித்தார்.

அன்னையின் அறக்கொடை நிதியத்தில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப்பிரிவிற்கு ஒரு லட்சம் ரூபா பணம் சத்திர சிகிச்சைப் பிரிவின் வைத்திய கலாநிதி இளங்கோ ஞானியாரும் வன்னியில் இருந்து வருகை தந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கான நன்கொடை நிதி மூன்று லட்சத்து 88 ஆயிரம் ரூபாவை வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க.கணேசலிங்கமும் பெற்றுக் கொண்டனர்.

பிரதம விருந்தினர் செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளைக்கு அறக்கொடை நிதியத்தின் மூலம் நினைவுக் கொடையும் வழங்கப்பட்டது.

(ஒ-86)

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன.8

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 801 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "I" என்ற ஆங்கில எழுத்தும் 36, 54, 60, 65 ஆகிய இலக்கங்களும் அதிஷ்டத்திற்குரியனவாக தேர்ந்தெடுக்கப்பட்டன.

போனஸ் இலக்கமாக 19 தெரிவாகியது. இதன் பிரகாரம் சுப்பர் பரிசுத் தொகை வெல்லப்படவில்லை.

நான்கு இலக்கங்களும் சரியாக உள்ள சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாம் பரிசுத் தொகையாக தலா இருபது லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கத்தையும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத் திருக்கும் மூன்று பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 325 பேருக்கு 3 ஆம் பரிசாக தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15, 500 பேருக்கு நான்காம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாக கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2,1 7,614 பேருக்கு 5ஆம் பரிசாக தலா இரு பது ரூபா கிடைக்கவுள்ளது.

(அ - 10)

# யாழ். வருகை தந்த மருத்துவக் குழுவினர் டெங்கைக் கட்டுப்படுத்துவதில் தீவிரம்

## கொழும்பில் இருந்து வந்தவுடன் பல தரப்பினரும் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.8

குடாநாட்டில் வேகமாப் பரவி வரும் டெங்கு நோய்த்தாக்கத்தை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு கொழும்பில் இருந்து விசேட மருத்துவக்குழு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது. யாழ். வந்த கையோடு அவர்கள் பல தரப்பினருடனும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாகச் செயற்பட்டனர்.

இந்த மருத்துவக் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள வைத்திய குழுவினருடனும், தாதியர் பயிற்சிக் கல்லூரி நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடினார்கள்.

தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை அவர்கள் நடத்தினர். தொடர்ந்து சுகாதாரத் திணைக்களத்தின் வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்களுக்கும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர்.

யாழ். நகரப் பகுதியினைச் சுற்றிப் பார்வையிட்ட இந்த மருத்துவக் குழுவினர் இன்னும் தீவிரமான தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டால் ஒரு மாத காலத்துக்குள் குடாநாட்டில் டெங்கு நோய்த் தாக்கத்தினை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று கருத்துத் தெரிவித்தனர்.

(ஒ-09)

# யாழ்.சிறைச்சாலை உண்ணாவிரதிகளை மனித உரிமை அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம் ஜன.8

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் கைதிகளை யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கைதிகளில் மூவரின் உடல் நிலை மோசமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினர் நேற்று அங்கு சென்று பார்வையிட்டு கலந்துரையாடினர்.

இதேவேளை, கைதிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக மேல்நீதிமன்ற நீதிபதிக்கும் மேல்நீதிமன்ற நீதிபதியூடாக ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

(ஒ-16)

# புலிகளின் முன்னாள் உறுப்பினர்களில் ஆயிரம் பேர் நாளை விடுவிப்பு

## பயங்கரவாத செயல்களில் நேரடி தொடர்பற்றவர்களாம்

கொழும்பு, ஜன. 8

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களில் சுமார் ஆயிரம் பேரை நாளை விடுதலை செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இவர்கள் நீதிவான் நீதிமன்ற உத்தரவைப் பெற்று, சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரின் முன்னிலையில் பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட உள்ளனர் என்று தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்பற்ற இவர்களில் பலர் ஒரு மாதத்திற்கும் குறைவான காலம் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டார்கள். 'பங்கர்' வெட்டுதல் போன்ற பணிகளில் பலாத்காரமாக ஈடுபடுத்தப் பட்டவர்கள் விடுவிக்கப்படுபவர்களில் இவர்களும் அடங்குவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்தது.

18வயதுக்கு குறைவான சுமார் 100 பேரும் முதற்கட்டத்தின் போது விடுவிக்கப்பட உள்ளார்கள்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களுக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளில் எத்தகைய தொடர்பு இருந்தது என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இவர்களில் நேரடித் தொடர்பற்றவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட உள்ளதாக என்று தயா ரத்னாயக்க கூறினார்.

படையினரிடம் சரணடைந்துள்ள புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் சுமார் 11ஆயிரத்து 544 பேர் 18 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் 1000பேர் நாளை 9ஆம் திகதி விடுவிக்கப்படுவர் என வடக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

(ஒ-200).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூ மகஸின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது நாளாகவும், அநுராதபுரம் சிறைச் சாலையில் உள்ள கைதிகள் நேற்றிலிருந்தும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

''அண்மையில் கைதுசெய்யப்பட்டு புனர் வாழ்வு அளிக்கப்பட்டவர்களை அரசு விடுதலை செய்யவுள்ளது என்று அறிவித்துள்ளது. அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், நாம் சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.எமது விடுதலை தொடர்பாக அரசு பல உறுதி மொழிகளை வழங்கியிருந்தது. எனினும் அது ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை.

''தற்போது நாங்கள் மீண்டும் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதற்கு நீதி அமைச்சர் மிலிந்த மொர கொட எங்களுக்குத் தீர்க்கமான உறுதி மொழி ஒன்றை வழங்க வேண்டும். அந்தப் பட்சத்திலேயே நாம் எமது உண்ணாவிரதத் தைக் கைவிடுவோம். இல்லையென்றால் எமது போராட்டம் சாகும் வரை தொடரும் - என்று கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(மேலும் செய்திகள் 3 ஆம் 19 ஆம் பக்கங்களில்)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் தமது கருத்தை அவர் வெளியிட்டார்.

இதனைக் கவனத்தில் கொண்டு, போர்க் குற்றங்களுக்காக இலங்கை அரசு மீது விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

எனினும் இந்த விசாரணையை யார் நடத்த வேண்டும் என்பதனை அவர் விசேடமாக குறிப்பிடவில்லை.

இலங்கையில் கடந்த வருடம் மே மாதம் போர் முடிவுற்றது. அதன் பின்னர் ஓகஸ்டில் பிரிட்டனில் 'சனல் -4' தொலைக்காட்சி தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுவதான வீடியோக் காட்சியை ஒளிபரப்பியது.

ஜனநாயகத்துக்கான இலங்கை பத்திரிகையாளர்களால் அனுப்பி ஒளி பரப்பரப்பட்ட அந்தக் காட்சிகள் போலியானவை, திரிபுபடுத்தப்பட்டவை என்று' இலங்கை அரசு மறுத்து வந்தது.

அதனைத் தொடர்ந்து இது சம்பந்தமாக உண்மையைக் கண்டறியும் பொறுப்பை ஐ.நா.சபை அல்ஸ்ரொனிடம் ஒப்படைத்திருந்தது. அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கும் 3 பரிசோதனை நிபுணத்துவ நிறுவனங்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் இலங்கை அரசின் மறுப்புகளை நிராகரித்து உறுதிசெய்துள்ளன என்றும் அல்ஸ்ரொன் கூறினார். (அ)

## தமிழ் மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

நகர மண்டபத்தைச் சுற்றிய பகுதிகளில் வாகன நெரிசல்கள் ஏற்பட்டன. ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட மாணவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எவ்விதக் குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மாணவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

வண. அமில தேரரின் கைதையும் அவர்கள் கண்டித்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தவர்கள் அமைச்சர்களாக உள்ளனர், ஆனால் யாழ்ப்பாணம், மொரட்டுவைப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மாணவர்கள் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் என அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் சங்க ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார். (அ-சி)

## தேர்தல் கண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் மார்ட்டின் நெசிர்கி கடந்த புதன்கிழமை நியூயோர்க்கில் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக நாடொன்றிற்குத் தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்புவதென்றால் பொதுச்சபையின் ஆணை அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள பேச்சாளர், எமக்குள்ள கால அவகாசத்தைக் கருத்திற் கொள்ளும்போது இலங்கைக்குத் தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்ப இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் தனது தேர்தல் கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு மறுத்துள்ள ஒரு நிலையிலேயே ஐ.நாவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் போதியளவில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடாத பட்சத்தில் தேர்தலின் நம்பகத் தன்மை குறித்து கேள்வி எழலாம் என உள்ளூர் தேர்தல் கண் காணிப்புஅமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன. (அ-சி)

## பிரபாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக இயற்கை மரணமடைந்தார் என இராணுவப் பேச்சாளர் .பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பு முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தமையை அடுத்து, பிரபாகரனின் பெற்றோரைப் படையினர் கூட்டிச் சென்று பனா கொடை இராணுவ முகாமில் வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் எம்.கே.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் இருந்து நேற்று முன்தினம் வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்துக்கு அனுப்பி வைக் கப்பட்டிருந்தன.

இதன்படி இன்று முதல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி வரையான காலப்குதிக்குள் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது முகவ ரிக்குரிய தபாலகங்களுக்குச் சென்று அடையாளத்தை உறுதிப்படுத்தி தமக் கான வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தபால் மா அதிபர் கூறினார்.

வாக்காளர் அட்டை விநியோகத்திற்கான விசேட பாதுகாப்பு நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனத் தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (சி)

## 12,000 புலிச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன் சேகாவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் - கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் 30 வருடங்களாக இருந்த பயங்கரவாதம் காரணமாக நாடு சீரழிந்து போயிருந்தது; ஜனநாயகம் இல்லாமல் போனது.

இப்போது அந்தப் பயங்கரவாதம் ஒழிக் கப்பட்ட போதிலும் நாட்டில் ஜனநாயகம் மீண்டும்வரவில்லை. நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதி முறை இந்நாட்டில் இருப்பதே அதற்குக் காரணம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச் சர்கள் அடங்கிய அமைச்சரவையால் அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படுவதில்லை. மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, பஸில் ராஜ பக்ஷ மற்றும் லலித் வீரதுங்க ஆகியோரே அனைத்துத் தீர்மானங்களையும் எடுக்கின்றனர்.

நாடாளுமன்றம் கூட ஒரு மாதத்தில் ஒரு தடவைதான் கூட்டப்படுகின்றது. அரசுக்குத் தேவையாக இருக்கின்ற அவசர காலச் சட்டத்தை நீடித்துக் கொள்வ தற்காக மட்டுமே இவ்வாறு கூட்டப்படு கிறது.

வடக்கு -கிழக்கில் ஜனநாயகம் இல்லாமல் போனால்

மஹிந்த ராஜபக்ஷவின் வசம் உள்ள நிறைவேற்று அதிகாரமே இந்தப் போக்குக்குப் பிரதான காரணம். பயங்கரவாதத்திலிருந்து மீட்கப்பட்ட வடக்கு - கிழக்கில் ஜனநாயகம் இல்லாது போனால் அங்கு மீண்டும் அசாதாரண நிலை ஏற்படும்.

கிழக்கில் உள்ள ஆயுதக்குழுக்கள் ஒழித்துக் கட்டப்படாவிட்டால் ஜனநாய கத்தை விரும்பும் அங்குள்ள இளைஞர்களும் ஆயுதம் ஏந்த வேண்டி நேரும். அதேபோல் வடக்கில் உள்ள டக்ளஸ் தேவானந்தாவின் ஆயுதக்குழு களையப்படா விட்டால் அங்குள்ள ஏனைய இளைஞர்களும் அக்குழுவுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவர்.

ஜனநாயகமற்ற சூழ்நிலை தொடர்ந் தும் உருவாகிக்கொண்டு போவதற்கு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையே காரணம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், ஜனநாயகத்தை நிலை நாட்டுதல், நாட்டை அபிவிருத்தி செய்தல், அகதிகளை மீள்குடியமர்த்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் கட்சிகளுக் கிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது.

கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டி ருக்கும் 12 ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகளில் குற்றச் செயலில் ஈடுபட்ட வர்கள் இருப்பின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் குற்றச் செயலில் ஈடுபடாதவர்களைப் புனர்வாழ்வளித்து அவர்களை விடுவிப்பது தொடர்பிலும் எமக்கிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா ஜனாதிபதியானதும் மேற்படி விடயங்களை நாம் நடைமுறைப் படுத்துவோம். இந்நாட்டில் நிச்சயம் நம்பிக் கைக்குரிய மாற்றம் ஏற்படும். - என்றார் அவர். அ-சி)

## மகஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குத் தாம் அனுப்பி வைத்துள்ளார் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சி.ஆர்.சி.சில்வா தெரிவித்தார்.

மகஸின் சிறைச்சாலையில் சுமார் 98 தமிழ்க் கைதிகள் கடந்த சில நாட்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 70 பேர் ஜே பிரிவிலும், ஏனைய 28 பேர் பொது வைத்திய சாலையிலும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த 98 கைதிகளின் வழக்குக் கோவை இலக்கங்களடங்கிய விவரம் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கைதிகளில் வழக்குத் தொடர விருப்பவர்களைத் தவிர ஏனையவர்கள் விடுவிக்கப்படுவர் எனவும் மேஜர் ஜெனரல் தெரிவித்தார்.

கடந்த வருடம் 560 கைதிகள் விடுவிக்கப்பட்டனர் எனவும் இவர்களில் 364 பேர் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர் எனவும் 196 பேர் விடுதலை செய்யப்பட்டனர் எனவும் மேஜர் ஜெனரல் மேலும் தெரிவித்திருந்தார்.

- இப்படி அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மரண அறிவித்தல்

*நமசிவாயம் சின்னத்துரை*

பளையைப் பிறப்பிடமாகவும் 159, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சின்னத்துரை நேற்று (07.01.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இராமலிங்கம்
(அதிபர், பெரியபுலம் ம.வி)
சி.பாலசுந்தரம் (கிராம அலுவலர்)

DAY CLASS
LOGIC
P.கமல்
செவ்வாய், வியாழன் 7am
பாடம்மாறிப்படிப்பவர்களுக்கு சனி, ஞாயிறு 2pm
யூனிவேர்சல்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்)

2012 Arts Sat-8.00
கல்விப்பிற் கர்பன் கடலில் பசுபிக் கலைப்பிரிவில்
T.E.C
பெறுபேற்றில் நீங்கள்
Paper Class - Sun.10.00
TEC Arts Academy

நாவலர் வெளியீடு
அறிவொளி
மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கில் தொடர் பரீட்சை
தரம் 1,2,3,4,5
தமிழ் கணிதம் ஆங்கிலம் சுற்றாடல் சமயம்
மாணவர்களுக்கானது.
(மாதத்தில் இருமுறை)
1வது பரீட்சை இம்மாதம் 9ம் 10ம் திகதிகளில்
நாவலர் இன்ஸ்ரிரியூட் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பிரிவு-1
ஆரம்பித்துவிட்டோம்.
A/L 2012
கலை, வர்த்தகப் பிரிவு
பிரிவு-11
ஜனவரி- 9 இல் நாளை 8.00 a.m
பொருளியற் கல்லூரி,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

புதிய வெளியீடு
3 வயது, 4 வயது, 5 வயது பிள்ளைகளுக்கான
விளையாட்டு முறையில் அறிவை மேம்படுத்தும்
பசில் வகைகள் (Puzzles)
- Bob the Builder
- Bin 10
வெளியீடுகள்
100 இற்றுக்கும் மேற்பட்ட வகைகள், இந்தியாவில் வெளியாகி இரண்டு வாரங்களில் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகின்றன.
பெற்றோர்களே, இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்!
அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212229881
(c/563976)

BITSMANS கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2012
கலை
கணித
வர்த்தக
உயிரியல்
வகுப்புக்கள்
ஆரம்பம் 09.01.2010 சனி 2.00 pm

தரம் 5 நாவலர் வெளியீடு
1 வது பரீட்சை
புலமைப் பரிசில் 2010
ஆரம்பம் 09-01-2010 சனிக்கிழமை

| பரீட்சை நேரங்கள் | |
|---|---|
| காலை | மாலை |
| 08.00Am | 02.00Pm |
| 09.00Am | 03.00Pm |
| 10.00Am | 04.00Pm |

நாவலர் இன்ஸ்ரிரியூட் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

BARATHY
சித்தன்கேணி
தரம் 5 முதல் 11 வரை
புதிய வகுப்புக்கள் பிரிவு: II
ஆரம்பம்: 09.01.2010 சனி
Note:
★ பிரிவு 1இற்கு மாணவர் தொகை அதிகரித்துள்ளதால் அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
★ இதுவரை அனுமதி பெறாத மாணவர்கள் உங்கள் அனுமதிகளைத் தாமதியாது பிரிவு 11 இற்கு நாளையில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.
★ தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு (புதன், சனி, ஞாயிறு) நடைபெறுகின்றன.
உங்கள் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்களினால்
பெற்றோர் தொடர்புகளுக்கு!
பொறுப்பாசிரியர்

A/L 2012
கலை, வர்த்தக, பிரிவுகள்
கணித, உயிரியல்
ஆரம்பம் 09-01-2010
சனி காலை 8.00 மணி
NEC
Clock Tower Road. Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
AAT (Srilanka)
Foundation level & intermediate level & Final
புதியபிரிவு ஆரம்பம் :- 09-01-2010 சனிக்கிழமை 8.00am
Certificate Course in English
Course commencing on
18-01-2010 8.30 am Week day batch
16-01-2010 8.00 am Week end batch
External Degree (Jaffna University)
GAQ, BA 1& BA Final
1st in Com, B.Com (1&11), Final
ஆரம்பம்:- 09.01.2010 (Saturday) 9.00am
Further Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

Group and Personal Classes
Maths
தரம் 9, 10, 11
By. K.Kiri
Kokuvil
T.P.No: 0770641094

DMI நிர்வாகம் விடுக்கும் விசேட அறிவித்தல்
DMI இல் நாளை 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும்
A/L - 2012 பிரிவுக்கு
இடநெருக்கடி ஏற்படுமென
DMI நிர்வாகம் கருதுவதனால் 20 நிமிடங்கள் முன்னதாக சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.
- நிர்வாகம் -
DMI

பதவி வெற்றிடம்
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Clack (full time)
2. Instructor (MSO, DTP) full time
09.01.2010 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

கலை, வர்த்தக பிரிவுகள்
A/L 2012
நாளை காலை 9.00 மணி
DMI JAFFNA

I.B.S சுண்டுக்குளி
A/L 2012
ACC .P. பகீரதன்
ECO.குமரன்
COM.யசோ
... 4 P.M

யூனிவேர்சல்
A/L 2010 Day Class
A/L 2011 Paper Class
கலை, வர்த்தகப் பிரிவுகள்
A/L 2012
ஆரம்பம் 09.01.2010 சனி
அனைத்துப் பிரிவுகளுக்கும் அனுமதிகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org